# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

டிசெம்பர் 04 - 10, 2013

பக்கம் - 24

30/-




# கண்துடைக்கும் இந்தியா




அடேல் பாலசிங்கம்

# சுதந்திர வேட்கை

இனத்தால் ஆரியர் என்றும், மதத்தால் பூர்வீகப்புனித மதம் என்றும் ஒரு புராணத்துக் கற்பனையில் கட்டப்பட்டது. தமிழ்மக்களுக்கு எதிரான இனவாதக் குற்றங்களைப் புரிபவர் களில் சிங்கள அரசினரே முதன்மை பெற்றிருந் தனர். இலங்கையின் இனவாதமானது இனப் படுகொலைப் பரிமாணத்தை எட்டியது. படு மோசமான மனிதஉரிமை மீறல்கள் அங்கே நடந்திருக்கின்றன. எழுபதினாயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் அழித்தொழிக்கப்பட் டிருக்கிறார்



கள். பாசிசம், பேரினவாதம் போன்ற சித்தாந்தங்கள் வரலாறு முழுவதிலும் வெளிப்பாடு கண்டு சிங்கள மக்களை ஒரு மேன்மையான இனம் என்ற மாயைக்குள் சிறைப்படுத்தி யது. இந்தக் கருத்தியற் போக்கு மிகவும் ஆபத்தான, கெடுதலான நாசகார சக்தியாகும். இது மும்முரமாக எதிர்க்கப்பட வேண்டும் என்பது எனது கருத்து.

தனி ஒருவரையும் சரி, மக்கள் இனங்களையும் சரி, நெரித்து ஒடுக்கும் மேலாண்மைத் தத்துவங்களை நான் அருவருத்து ஒதுக்குபவள். ஐரோப்பாவில் நான் மேற்கொண்ட பயணங்களாலும் இங்கிலாந்தில் பல்வேறு இன மக்களிடையே பணிபுரியும் போது கிட்டிய அனுபவங்களாலும் பெற்ற படிப்பினையோடு, எல்லாக் கலாசாரங்களிலும் இருந்து வரும் மக்களை ஆழமாகப் புரிந்து கொள்ளவும் அவர்களுக்குத் மரியாதை காட்டவும் பயின்றிருந்தேன். எனவே, இனக்குரோத அடிப்படையில், சொல்லாலோ, செயலாலோ மக்கள் தாக்கப்படும் போது என்னால் அதைச் சிறிதும் சகித்துக் கொள்ள முடிவதில்லை. மானுட வரலாற்றின் பரப்பை நாம் அளவிடும் போது, அதில் இனவாதம் ஒருபெரிய பங்கை வகித்திருப்பதை நாம் காணலாம். மக்களைப் பிளவுபடுத்துவதில் ஒரு முக்கிய சக்தியாகவும், மக்களிடையே மனிதாபிமானம் அற்ற செயல்களுக்கு ஓர் ஊற்றாகவும் அது செயற்படுகின்றது.

மனித சமூகத்தினர், ஒருவர் மட்டில் ஒருவர் கொண்டுள்ள தவறான, எதிர்மறையான கருத்தோட்டங்களிலிருந்தே இனவாதம் தோற்றப்பாடு காண்கிறது. உதாரணமாக, மனிதத் தோலின் நிறம் பற்றிய தவறான பார்வை; மற்றும் போலியான உயர்வு மனப்பான்மை, கலாசார வேறுபாடு, சமயம், வரலாறு போன்ற கருத்தியற் கண்ணோட்டங்களிலிருந்தும் இனவாதம் தோற்றம் கொள்கிறது. எனது வாழ்க்கை அனுபவம் மேலும், மேலும் ஆழம் அடைய, எனது பார்வையில், இந்தப் பூமிக் கிரகமானது அனைத்து மனித சமூகத்தினரதும் பொதுவான வாழ்விட மாகத் தோன்றுகின்றது. மனித இனம் என்ற ஒரே இனத்தினதும், ஏனைய உயிர் வடிவங்களினதும், இயற்கையான வாழ்க்கைத் தளம் இந்த உலகம். இந்த உலகத்தில் வாழ்வதற்கு என்னைப் போலவும், உங்களைப் போலவும், அனைத்து உயிர்களுக்கும் உரிமை உண்டு. பலவகைக் கலாசாரங்கள் மனித சமுதாயத்தைச் செழுமைப்படுத்துகின்றன. ஏனெனில் கலாசாரங்கள், மானிட ஆன்மீக வளர்ச்சியின் வெளிப்பாடுகளாகும். உலகமைந்த அனைத்து கலாசாரங்களும் மதிக்கப்பட வேண்டும். அமைதியையும், ஒத்திசைவும் வாழ்க்கையில் செழுமையும் நிலவ வேண்டுமானால் கலாசாரங்கள் வளர்ச்சியடைய வாய்ப்பளிக்கப்பட வேண்டும். இதுவே எனது கருத்தாகும்.

## போராட்ட அரசியல்

நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து சிங்கள அரசினால் தமிழ் மக்கள் கொடூரமாகவும், அநியாயமாகவும் ஒடுக்கப்பட்டதன் வரலாறு, அனைத்துலக மனித நேய அமைப்புகளினால் செம்மையாக ஆவணப்படுத்தப்பட்டி ருக்கிறது. ஆண்டாண்டாக அரசு திட்டமிட்டு நடத்தும் அந்த இன ஒடுக்குமுறை எனது கணிப்பில் இனப் படுகொலை முயற்சியே! ஆயினும் ,அனைத்துலக அரசுகள் இந்தத் தார்மீகக் குற்றச்சாட்டை மறுக்கலாம். (இனப்படுகொலை விவகாரத்தை பின்னர் விவாதிக்க இருக்கின்றேன்). தமிழர் தேசிய அடையாளத்தின் அடித்தளத்தையே - அதாவது அதன் மொழியை, கலாசாரத்தை, பொருளாதார வாழ்வை, இனி, பாரம்பரிய வாழ்நிலத்தை, இன ஒடுக்குமுறை, தாக்குகின்றது. இதற்கு மேல், இனக்கலவரங்களின் போதும், போரின் விளைவாகவும், தமிழ்மக்கள் பெருந்தொகையாக பூண்டோடு அழித்தொழிக்கப்படுகிறார்கள். இனி, தொடர்ச்சியாக அடுத்தடுத்து நிகழ்ந்த கலவரங்களால் ஏற்பட்ட இன விரட்டலாலும், புலம்பெயர்வுகளாலும் தமிழ் மக்களின் இனக்கட்டமைப்பு துண் டாடப்படுவது கூட இன்னொரு வகை இனப்படு கொலை கூறுதானே! விடாது தொடர்ந்த கொடிய அரச ஒடுக்குமுறைக்கு, தொடக்கத்திலிருந்தே இயல் பான எதிர்ப்புக் கிளர்ந்தது. ஆரம்பக் கட்டங்களில், வன்செயலற்ற அரசியற் போராட்டங்கள் மூலம் ஒடுக்குமுறைக்கு தங்கள் எதிர்ப்பைத் தமிழ் மக்கள் வெளிப்படுத்தினார்கள். அகிம்சை என்ற அமைதித் தத்துவத்தின் அடிப்படையில் மகாத்மா காந்தி என்ற அகிம்சா மூர்த்தியால் வகுக்கப்பட்ட வன்செயல் துறந்த போராட்ட முறை இது. அகிம்சையின் ஆன்மீக, மற்றும் ஒழுக்க சீலங்களைக் காழ்ப்புணர்வோடு சிங்கள அரசு உதாசீனப்படுத்தியது. இதனால் அகிம்சைப் போராட்டத்தின் தார்மீகப் பலமானது, சிங்களத்தின் அடாவடிப் பலத்தை எதிர்கொள்ள முடியாது வலுவிழந்த சக்தியாக மாறியது. தமிழ் இனத்தின் அனைத்து அமைதிப் போராட்டங்களும் கொடூரமாக நசுக்கப்பட்டன.

நீடித்துச்செல்லும் இன நெருக்கடிக்குத் தீர்வு காண, தமிழ் சிங்கள இனங்களின் தலைவர்கள் செய்து கொண்ட அரசியல் ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் செயலிழந்து செத்துப் போயின. இதனால், இரண்டு இனங்களிடையேயும், பகைமையும் நம்பிக்கையின்மையும் ஆழமாகியது. கண்மூடித்தனமான கைது, கொடுமையான சித்திரவதை, காணாமல் ஆக்குதல், சட்டம் மீறிய கொலைகள் ஆகியவை அரச படைகளின் நடவடிக்கைகளில் ஓர் அங்கமாயின.

மேலும், தமிழ்ப் பகுதிகள் மீது அரச படைகள் நிகழ்த்திய ஆக்கிரமிப்பும், அடக்குமுறைகளும், அரசினால் கோலம் இடப்பட்டு, சிங்களக் காடையரால் நிறைவேற்றப்பட்ட காட்டுமிரண்டித்தனமான இனக்கலவரங்களும் ஆயிரமாயிரம் தமிழ் மக்களைக் கொன்றழித்தன. தீவிரமடைந்த அரச ஒடுக்குமுறையும், சிங்கள இனவாத அரசியற் தலைமை மீது தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கையீனமும், விரக்தியும், பிரிந்து சென்று தனியான தமிழ் அரசை நிறுவுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு தமிழ் அரசியல் வாதிகளைத்

**விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 12**

தள்ளியது.

1977 பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தமிழ்மக்களின் நாடாளுமன்ற அரசியல் கட்சியாக முகிழ்த்த தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒருசுதந்திர அரசுக்காகப் போராடத் தமிழ்மக்களின் வாக்கு ஆணையைக் கோரியது. வடகிழக்கில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி பெருவெற்றியீட்டியது; பெரும்பாலான இருக்கைகளை வென்றது; அரசியல் சுதந்திரத்தையும் இறைமையுள்ள அரசையும் ஈட்டும் வகையில் போராட்டத்தை நடத்த மக்களின் ஆணையைப் பெற்றது. தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியிற்கு மக்கள் ஆணை கிடைத்த போதிலும், மக்கள் ஆதரவுடனான இந்த அரசியல் இலக்கை அடைவதற்கு, அதனிடம் ஒத்திசைவான கொள்கையோ, தந்திரோபாயமோ, அர்ப்பணிப்போ இருக்கவில்லை. அதனால் அந்தக் கட்சி செயலிழந்து, மலட்டுத் தன்மையடைந்து, இறுதியில் சிங்கள ஆளும் வர்க்கத்திற்கு உடந்தையாகச் செயற்படும் பாதையைக் கடைப்பிடிக்க முற்பட்டது. சுதந்திர அரசை உருவாக்குவதற்கான புரட்சிக வழிமுறையைக் கோரி நின்ற போராட்ட உணர்வுடனான தமிழ் இளைஞர்களுக்கு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் உடந்தை அணுகுமுறையானது கடுமையான ஏமாற்றத்தைக் கொடுத்தது. அரசின் வன்செயலுக்கும், ஒடுக்குமுறைக்கும் பெருமளவு முகம் கொடுக்கும் இளைஞர்கள் பொறுமையை இழந்தார்கள். நாடாளுமன்ற அரசியற் போராட்டத்தின் கையாலாகத் தன்மையிலும் விரக்தி கொண்டார்கள். (பதிவுதொடரும்)

# சாத்தான் கேட்கும் சுதந்திரம்

"ஆக்கிரமிப்புக்கு அடிபணிந்து போக இலங்கை மக்கள் தயாரில்லை சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் செயற்படவே விரும்புகின்றனர்"

இது இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆக்கிரோசத்துடன் வெளியிட்ட வார்த்தைகள். "ஆக்கிரமிப்புக்கு அடி பணிந்து போக வேண்டியவர்கள் இலங்கைத் தமிழர்கள். சுதந்திர மாகவும் சுயாதீனமாகவும் செயற்பட முடியாது" இவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாய் திறந்து வெளியிடாத வார்த்தைகள். ஆனால் நாளும் பொழுதும் அவர்களால் அரங்கேற்றப்படும் யதார்த்தம்.

ஆக்கிரமிப்புக்கு அடிபணிந்து போக இலங்கை மக்கள் தயாரில்லை என்ற அவரின் கூற்றுப்படி பார்க்கும் போது இலங்கைத் தமிழர்கள் இலங்கையர்களாக இருக்கக் கூடாது. அவர் அடிக்கடி நான் தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்களின் ஜனாதிபதி எனச் சொல்லிக் கொள்வார். ஆனால் எப்போதும் சிங்கள மக்களின் ஜனாதி பதியாகவே நடந்து கொள்வர்.

அவரின் கூற்றுப் படி இலங்கையில் வாழும் தமிழர்கள் இலங்கையர்கள் அல்ல. இது அவர் மட்டுமல்ல அத்தனை சிங்களத்தலைமைகளும் காலம் காலமாகப் பின்பற்றி வரும் கோட்பாடு இது. அது மட்டுமன்றி இலங்கையின் நலன்கள் எனப்பார்க்கப் படும் போது தமிழ் முஸ்லீம் மக்களின் நலன்கள் புறம் தள்ளப்பட்டு சிங்கள மக்களின் அதிலும் சிங்களமேல் கட்டு ஆளும் கும்பலின் நலன்களே முன் வைக்கப் படுகின்றன. ஆக்கிரமிப்புக்கு அடி பணிந்து போக இலங்கை மக்கள் தயாரில்லை. இதை ஜனாதிபதி சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதில்லை. எந்த ஒரு மனிதப் பிறவியும் அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் ஆக்கிரமிப்புக்கு அடிபணிய விரும்பப் போவதில்லை. இது மனித குலத்தின் இயல்பான நிலை. ஆனால் இங்கு ஒரு கேள்வி எழுகிறது! இலங்கையை யார் ஆக்கிரமிக்கிறார்கள் அல்லது எவர் ஆக்கிரமிக்க முயல்கிறார்கள்? நியாயப்படி பார்த்தால் இது விடை காண முடியாத கேள்வி.

ஆனால் இலங்கையின் ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை ஆக்கிரமிப்பு என அலறுவதும் தாங்கள் ஆக்கிரமிப்புக்கு எதிரான வீரதாபங்கள் போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்துவதும் அவர்களின் நீண்ட கால அரசியல் வியாபாரம்.

எதிராகக் குரல் கொடுப்போர் பயங்கரவாதிகள்! இன அழிப்புக்கு எதிராகச் செயற்படுபவர்கள் தேசப்பற்றற்றவர்கள்!

அவ்வாறே மனித உரிமைகள் மீறப் படுவதற்குக் எதிராகக் குரல் கொடுப்போர் ஆக்கிரமிப்பாளர்கள்! போர்க்குற்ற விசாரணையைக் கோருவோர் உள்நாட்டு விவகாரங்க்ளில் தலையிடுவோர் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தை வலியுறுத்துபவர்கள் இலங்கை மக்களின் சுயாதீனத்தை மறுப்பவர்கள். இப்படியாகப் புதிய அகராதிகளையும், அர்த்தங்களையும் எழுதி வைப்பவர்கள் தான் அவர்கள்.

இவர்களால் ஆக்கிரமிப்பாளர்கள் என வர்ணிக்கப்படும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையோ, அமெரிக்காவோ, பிரிட்டனோ பெரிதாக எதையும் கேட்டு விடவில்லை.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் வலியுறுத் தப்பட்ட போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணை, இனங்களுக்கிடையேயான நீதியான நிரந்தரமான நல்லிணக்கத்தை உருவாக்கும் முயற்சிகள் என்பவற்றை மேற் கொள்ளும் படி கேட்கின்றார்கள்.

அவற்றை மேற்கொள்ளத் தவறினால் சர்வதேச விசாரணையைக் கோரப் போவதாகத் தெரிவித்துள்ளனர். நல்லிணக்க ஆணைக்குழுவும் அதன் பரிந்துரைகளும் உலகை ஏமாற்றும் ஒரு கண் துடைப்பாக மாறிவிடக் கூடாது என்பதில் அவர்கள் காட்டும் அக்கறை? மனித உரிமைகள் என்பது ஒரு நாட்டுக்கோ ஒரு இனத்துக்கோ மட்டும் உரித்தானவையல்ல. அவை முழு மனித குலத்துக்கும் உரிமையானவை. ஐக்கிய நாடுகள் சாசனத்தின் படி உலகின் எந்த ஒரு மூலையில் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றாலும் அதைத் தட்டிக் கேட்க எந்த ஒரு மனிதனுக்கும் உரிமை உண்டு.



இன்று ஐக்கியநாடுகள் சபையும், அமெரிக்காவும், பிரிட்டனும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் கருதப்படுபவர்கள் தொடர்பாகவே விசாரணையை நடத்தும்படி கோருகின்றனர். முழு இலங்கையர்கள் மீதல்ல. மனித உரிமை மீறல்களாலும், இன அழிப்பு நடவடிக்கைகளாலும் பாதிக்கப் இலங்கையர்கள்தான். விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்கள் மனிதகுல விரோதிகள் மட்டும் தான். முழு இலங்கை மக்களுமல்ல. இந்த ஒரு நியாயமான கோரிக்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆக்கிரமிப்பாகப்படுகிறது.

ஒரு வகையில் ஐ.நா.சபைக்கோ ,அமெரிக்காவுக்கோ, பிரிட்டனுக்கோ இலங்கையில் இடம்பெறும் மனிதப் பேரவலம் குறித்து கேள்வி எழுப்ப வேண்டிய கடப்பாடு உண்டு.

போர் மும்முரமாக இடம் பெற்று தமிழ் மக்கள் மீது பேரழிவுகள் மேற்கொள்ளப்பட்ட போது அவற்றை உலகின் கண்களில் கொண்டு வந்து தடுத்து நிறுத்த ஐ.நா. சபை தவறி தமிழ் மக்களை நட்டாற்றில் கைவிட்டு ஓடி விட்டது. அது இலங்கை போர்க்குற்றங்களை மேற்கொள்ள ஒரு வாய்ப்பை வழங்கியது. அமெரிக்கா உளவுத்தகவல்களை வழங்கி படைப் பிரிவுகளை வழங்கி விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பதில் இலங்கை அரசுக்கு காத்திமான பங்களிப்பை வழங்கியது. பிரிட்டன் ஆயுத விநியோகம் செய்து உதவியது. ஆனால் இவர்கள் இலங்கை அரசுக்கு வழங்கியமை விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்கேயொழிய மனிதப் பேரவலத்தை அரங்கேற்றுவதற்கல்ல. மனிதப் பேரவலத்தை அரங்கேற்றுவதற்கல்ல. இலங்கை எவரின் உதவியுமின்றி தனியாகப் போரை நடத்தியிருந்தால் ஏனைய நாடுகளின் கோரிக்கைகளைக் கண்டிக்கலாம்.

உதவி பெறும் போது உள்நாட்டு விஷயங்களில் தலையிடுவது என்பதை விரும்பிய அரசு நியாயங்களைக் கேட்கும் போது சுதந்திரம் பற்றியும், சுயாதீனம் பற்றியும் அலறுகிறது. ஆக்கிரமிப்பு எனக் கண்ணீர் வடிக்கிறது.

சர்வதேசப் பொது நியாயத்தை வலியுறுத்தும் போது ஆக்கிரமிப்பு என அலறும் ஆட்சியாளர்கள், நான் ஒரு அப்பட்டமான தமிழ் மக்களின் சுயாதீனத்தையும், சுதந்திரத்தையும் நிராகரிப்பவராகவும் நடந்து வருவதை மூடி மறைக்க முயல்கிறது. வடக்கு கிழக்கு போர் முடிந்து நான்கு ஆண்டுகள் கழிந்தபின்பும் கூட இன்னும் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைக்கப்பட்டுள்ளது. மாகாண சபைக்கு 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மூலம் வழங்கப்பட்ட குறைந்த பட்ச அதிகாரங்கள் கூட பகிர்தளிக்க மறுக்கப்படுகிறது. தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த நிலங்களில் அவர்கள் மீள் குடியேற அனுமதி மறுக்கப்பட்டு அவை பாதுகாப்பு அபிவிருத்தி என்ற போர்வையில் அபகரிக்கப்படுகின்றன. முக்கிய மீன்பிடி மையங்கள் விளை நிலங்கள் ஆக்கிரமிக்கட்டுகின்றன. சிங்கள இராணுவக் குடும்பங்களின் வீடமைப்புத் திட்டம் என்ற பெயரில் தமிழ்ப்பகுதிகளில் வலுக்கட்டாயமாக சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்படுகின்றன.

> **இலங்கையை யார் ஆக்கிரமிக் கிறார்கள் அல் லது எவர் ஆக்கிரமிக்க முயல்கிறார்கள்? நியாயப்படி பார்த்தால் இது விடை காண முடி யாத கேள்வி.**

எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் மக்கள் மாவீரர்களான தங்கள் பிள்ளைகளுக்கு அஞ்சலி செலுத்துவது கூடத் தடை செய்யப்படுகிறது. ஒட்டு மொத்தத்தில் இலங்கை வாழ் தமிழ் மக்கள் மீது ஒரு கொடிய ஆக்கிரமிப்புப் போர் கட்ட விழ்த்து விடப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் சுதந்திரமும், சுயாதீனமும் மறுக்கப்பட்டு தமிழ் மக்களை ஒரு அடிமை இனமாக மாற்றும் முயற்சிகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஷபக்ஷ இலங்கை மீது எவ்வித ஆக்கிரமிப்பும் மேற்கொள்ளப்படாத நிலையிலும் தனது இன ஒடுக்கக் நடவடிக்கைகள் தட்டிக் கேட்கப்படுவதை ஆக்கிரமிப்பாகக் காட்டி சிங்கள மக்களுக்குப் பூச்சாண்டி விடுகிறார். அதனால் தான் தமிழ் மக்கள் மீதான ஒரு உயர்ந்த பட்ச ஆக்கிரமிப்பாளனாக நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறார். சிங்கம் மானைக் கொன்று தின்னும் சுதந்திரத்தைக் கோருகிறது. மான் தான் சுதந்திரமாக உயிர் வாழும் உரிமையைக் கோருகிறது. நியாயம் மானின் பக்கம் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் சிங்கமோ மானின் உயிரைப் பறிக்கும் சுதந்திரம் தன்னிடமிருந்து பறிக்கப்படுவதாக அலறுகிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிங்கத்தின் கொலை வெறிச் சுதந்திரம் பறிக்கப்படுவதாகக் கண்ணீர் விடுகிறார். அது சாத்தான் கேட்கும் சுதந்திரம். எல்லாக் காலமும் ஏவல்கள் ஏமாந்துவிடப்போவதில்லை.

# பொருளாதார வளர்ச்சியின் வீழ்ச்சியான நெருக்கடிக்குள்ளாகும் ரஷ்யா

நீலன்

**2011** ஆம் ஆண்டு ரஷ்யப் பொருளாதாரம் 5.1 விழுக்காடு வளர்ச்சியடைந்தது. இது வட அமெரிக்க மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் ஒரு சிறந்த வளர்ச்சியாகும். ஆனால் அதன் பின்னர் ரஷ்யப் பொருளாதாரம் ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது. 2013 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிற்கான வளர்ச்சியைப் பார்க்கும் போது அது ஆண்டுக்கு 1.2 விழுக்காடாகக் குறைந்து விட்டது. அத்துடன் தற்போது ரஷ்யாவில் முதலீடுகளும் எந்தவித வளர்ச்சியும் இன்றி இருக்கின்றன.

கடந்த பல தசாப்தங்களாக நிலவிவரும் எரிபொருள் விலை அதிகரிப்பு மற்ற நாடுகளுக்கு பெரும் தொல்லையாக அமைந்த போதும் ரஷ்யாவுக்கு அது பெரும் வரப்பிரசாதமாகவே அமைந்தது. உலகச் சந்தையில் ஏற்பட்ட விலை அதிகரிப்பால் தனது வருமான அதிகரிப்பை வைத்துக் கொண்டு பல பொருளாதாரப் பிரச்சினைகளைச் சீர்செய்தது ரஷ்யா. தற்போது ரஷ்யா உலகின் மிகப்பெரிய ஏற்றுமதி நாடாக விளங்குகின்றது. ரஷ்யாவின் மொத்த ஏற்றுமதியில் எரிபொருள் ஏற்றுமதி 70 விழுக்காடாகும். ரஷ்ய அரச வருமானத்தின் அரைப்பங்கு எரிபொருள் ஏற்றுமதியின் மூலம் கிடைக்கின்றது.

ரஷ்யாவிடம் 1,680,000 பில்லியன் கன அடிகள் ( 1,680 இலட்சம் கோடி கன அடிகள் ) எரிவாயு இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதன்படி ரஷ்யா இன்னும் 750 ஆண்டுகளுக்கு எரிவாயுவை உற்பத்தி செய்ய முடியும். தனது இந்த எரிவாயு வளத்தில் தங்கியிருக்கும் முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளை ரஷ்யா தன்பக்கம் இழுக்கவும், அதே நேரத்தில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணையாமல் இருக்கவும் ரஷ்யா முயன்றது.

ஐரோப்பாவில் ஜேர்மனியின் ஆதிக்கம் வளர்வதையிட்டு பிரித்தானியா அவ்வளவாக அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒரு பாதி இணைப்பு நிலையைப் பேணி கொண்டு தனது தனித்துவத்தையும், தனது நாணயமான ஸ்ரேலிங் பவுண்டையும் பாதுகாத்துக் கொண்டு இருக்கவே பிரித்தானியா விரும்புகின்றது.

ஜேர்மனி மீண்டும் படைத்துறையில் வலிமை மிக்க நாடாக மாறி பிரித்தானியா போல் தன்னுடன் ஒரு பங்காளியாக இணைவதையே ஐக்கிய அமெரிக்காவும் விரும்புகிறது. ஜேர்மனியின் ஐரோப்பிய ஆதிக்க வளர்ச்சியால் அதிக ஆத்திரமடையும் நாடாக ரஷ்யா இருக்கிறது. 1991 இல் நடந்த சோவியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் மீண்டும் முன்பு போல ஒரு உலக ஆதிக்க நாடாக மாறுவதற்கு ரஷ்யா கடும் பிரயத்தனம் எடுக்கிறது. தனது சோவியத் ஒன்றிய நாடுகளும், முன்னாள் நட்பு நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்து வருவது ரஷ்யாவுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

பால்ரிக் நாடுகளான எஸ் தேனியா, லத்வியா, லித்துவேனியா ஆகியவை ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்தமை ரஷ்யாவை மேலும் ஆத்திரப்படுத்தியது. அதனைத் தொடர்ந்து 01.07.2013 இல் இருந்து குரோஷியாவும் 28 ஆவது நாடாக ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்தது.

ஐரோப்பியாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான எல்லைக்கோடு சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் மாற்றி அமைக்கப்பட்டு விட்டது. சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் பால்ரிக் நாடுகள் சுதந்திரப் பிரகடனம் செய்த போது ஜேர்மனி அவற்றை முந்தியடித்துக் கொண்டு அங்கீகரித்தது. அவை, ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்குரிய உகந்த பொருளாதாரச் சூழ்நிலையை அந்த நாடுகளில் உருவாக்க ஜேர்மனி பெரிதும் உதவியது. அத்துடன் 1994 இல் ரஷ்யப் படைகள் பால்ரிக் நாடுகளில் இருந்து வெளியேறுவதற்கும் ஜேர்மனி உதவியது. பால்ரிக் நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்தவுடன் ரஷ்யா அந்த நாடுகளுக்குத் தான் விற்பனை செய்யும் எரிவாயுக்களின் விலைகளைக் கண்டபடி உயர்த்தியது. இதைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியமும் அந்த நாடுகளில் மாற்று எரிவளப் பயன்பாடுகளை ஊக்குவிக்கும் வேலைத் திட்டங்களை ஆரம்பித்தது.

இரண்டு பெரிய போர்களின் பின்னர் தமது எல்லைகளைத் தீர்மானித்துக் கொண்ட மேற்கு ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளை ஜேர்மனி தனது பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பான ஐரோப்பிய ஒன்றியத்தை ஒரு ஒன்றுபட்ட இணைப்பாட்சி நாடாக்கி அழிக்க முயலாமால் பார்த்துக் கொள்ளும் அறிவும், அனுபவமும் மேற்கு ஐரோப்பியர்களிடம் நிரம்பவே இருக்கின்றது. ஜேர்மனிய ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் பல நாடுகளைப் பொறுத்தவரை தற்காலிகமானதே. அதை நன்கு உணர்ந்து செயற்படும் நாடு பிரான்ஸ் ஆகும்.

பாலரிக் நாடுகள் மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் இணைந்து ஒன்றாகுவது ரஷ்யாவை ஆத்திரப்படுத்தி இன்னும் ஒரு பெரும் போருக்குப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு ரஷ்யாவிற்கும், ஜேர்மனிக்கும் இருக் கிறது.

திறன்குறைந்த ரஷ்யப் பொருளாதாரத்திற்கு உற்பத்தித் துறையில் முதலீடு அவசியமாகும். இதுவரை காலமும் ரஷ்யா தனது எரிபொருள் உற்பத்தியில் கிடைத்த வருமானத்தை உற்பத்தித் துறையிலும் கட்டமைப்பு அபிவிருத்தியிலும் முதலீடு செய்து வந் தது. அது வேலை வாய்ப்பை யும் மக்களின் கொள்வனவு வலுவையும் அதி கரித்தது.



எனினும் தற்போது எரிபொருள் வருமானம் குறைந்ததால் உற்பத்தித் துறையிலும், கட்டமைப்பு அபிவிருத்தியிலும் முதலீடு குறைந்து விட்டது. இதனால் பொருளாதாரத்திற்கு தேவையான மக்களின் கொள்வனவு வலு பலவீனமடைகிறது. இது ரஷ்யப் பொருளாதாரத்திற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தப் போகிறது. ஈரானு டன் நடக்கும் பொருளாதாரத்தடை நீக்கல் பேச்சு வார்த்தை சுமூகமாக முடியுமாயின் உலக எரி பொருள் விலை மேலும் வீழ்ச்சியடையும் சாத்தியப்பாடுகள் நிறையவே உண்டு. இதுவும் ரஷ்யாவின் பொருளாதாரப் பாதிக்கலாம். அதையும் தவிர, அண்மையில் ஐக்கிய அமெரிக் காவில் கண்டு பிடிக்கப்பட்ட புதிய இரும்புக்களும், எரிக்கக் கூடிய மாக்கற்பாறைகள் அமெரிக்காவிலும் கனடாவிலும் கண்டுபிடிக்கப்பட்டமை யானது இனி வரும் காலங்களில் உலக எரிபொருள் விலையைக் குறையைச் செய்யும். இதுவரை எரிபொருள் இறக்குமதி நாடாக இருந்த அமெரிக்கா இனி வரும் காலங்களில் எரிபொருள் ஏற்றுமதி நாடாகவும் மாறும் வாய்ப்புக்கள் நிறையவே உண்டு. அத்துடன் உலகின் மிகப்பெரிய எரி பொருள் உற்பத்தி நாடு என்ற நிலையில் தற்போது இருக்கும் ரஷ்யாவைப் புறந்தள்ளி 2015 இல் அமெரிக்கா உலகின் மிகப் பெரிய எரிபொருள் உற்பத்தி நாடாக மாறும் சாத்தியமும் உள்ளது.

ரஷ்யாவின் அரச வருமானம் குறைந்து கொண்டு போவதும் அதன் ஒய்வூதியக் கொடுப்பனவுகள் மற்றும் சமூக உதவிக் கொடுப்பனவுகள் அதிகரித் துக் கொண்டு போவதும் ரஷ்ய அரச நிதியில் பெரும் பாதகமான நிலையை உருவாக்கப் போகி றது எனப் பொருளாதார நிபுணர்கள் எச்சரிக் கின்றனர்.

இனி வரும் இருபது ஆண்டுகளில் உலகப் பொருளாதாரம் 3.4 விழுக்காடு வளரவிருப்பதாக வேளையில் ரஷ்யப் பொருளாதாரம் ஆண்டொன்றிற்கு சராசரியாக 2.5 விழுக்காடு மட்டுமே வளரவிருக்கிறது. இந்த எதிர்பார்ப்பின் படி ரஷ்ய அரச நிதியில் 28 ரில்லியன் டொலர்கள் (28 இலட்சம் கோடி) பற்றாக்குறை ஏற்படவிருக்கிறது.

பல ரஷ்யர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதால் ரஷ்யமக்கள் தொகையையும் குறைந்து கொண்டே போகிறது. நாட்டை விட்டு வெளியேறுவது பல திறமை மிக்க தொழிலாளர்களாகும். அத்துடன் ரஷ்ய மக்கள் தொகைக் கட்டமைப்பில் இளையோர் தொகை குறைந்தும் , முதியோர் தொகை அதிகரித்தும் போகப் போகின்றது. இதுவும் ரஷ்யப் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கவே செய்யும்.

ரஷ்யாவில் இருந்து 48 பில்லியன் டொலர்கள் பெறுமதியான முதலீடு 2013 இன் முதல் ஒன்பது மாதங்களில் வெளியேறி விட்டது. ரஷ்ய நிறுவனங்கள் தமது சேமிப்புக்களை வெளிநாடு களில் இலாபம் தரக்கூடிய துறைகளில் முதலீடு செய்கின்றன. ரஷ்யப் பொருளாதாரத்தின் செயற்படுதிறனை மேம்படுத்த அவசியம் தேவையான முதலீடு நாட்டைவிட்டு வெளியேறுவது ஒர நல் செய்தியல்ல.

அமெரிக்கா தனது கவனத்தை ஆசியாவை நோக்கித்திருப்பவும், மத்திய கிழக்கில் தனது கவனத்தைக் குறைக்கவும் திட்டமிட்டிருக்கும் வேளையில் ரஷ்யா தனது ஆதிக்கத்தை மத்திய கிழக்கில் அதிகரிக்கத் திட்டமிடுகின்றது அவ்வாறாயின் ரஷ்யா தனது பாதுகாப்புச் செலவை அதிகரிக்க வேண்டும். அத்துடன் 2014 இல் ரஷ்யாவில் நடக்கவிருக்கும் குளிர்கால ஒலிம்பிக்கிற்கும் அதிகளவில் செலவு செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. இஸ்லாமியர்களை அதிகம் கொண்ட கொக்கஸஸ் பிரதேசத்திற்கு அண்மையில் இருக்கும் சொச்சி நகரத்தில் ரஷ்யா குளிர்கால ஒலிம்பிக்கை நடத்த இருப்பதால் அதிக பாதுகாப்புச் செலவு தேவைப்படுகின்றது.

அத்துடன் ரஷ்யாவிலேயே குளிர் குறைந்த நகர் சொச்சியாகும். அங்கு குளிர்கால ஒலிம்பிக் போட்டி நடத்துவதும் அதிக செலவீனமான தொன்றாகும். இதனால் உலக குளிர் கால ஒலிம்பிக் வரலாற்றில் அதிக செலவீனம் ஏற்படும் போட்டியாக சொச்சி ஒலிம்பிக் அமைகிறது.

மொத்தச் செலவு ஐம்பது பில்லியன் டொலர்களுக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்து. இந்த ஒலிம்பிக் போட்டியும் ரஷ்யாவின் அரச நிதியில் பாதகமான விளைவை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. ரஷ்யாவின் பொருளாதாரம் மோசமானால் அதனைப் பாவித்து ஜேர்மனி அதைச் சற்றி உள்ள நாடுகளைத் தன்வசம் இழுத்து ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைத்து விடும். இது ரஷ்யாவைத் தனிமைப்படுத்திப் பலவீனப்படுத்தலாம்.

# துட்டகைமுனுவின் வாரிசுகள்?

**ஹரன்**

சிங்களம் இன்னும் வரலாற்றிலிருந்து பாடங்களை கற்றுக் கொள்வதாக இல்லை. சிங்கள அரசு எல்லோரும் ஏறிவிழுந்த குதிரையிலேயே மீண்டும் பயணிக்க தொடங்கியிருக்கிறது. அதிகாரத்தால் உணர்வுகளை அடக்கும் முயற்சியிலேயே மஹிந்த அரசும் மீண்டும் தன்னை முற்று முழுதாக ஈடுபடுத்தியிருக்கிறது.

கடந்த மாவீரர் தினத்தன்றும் அதற்கு அடுத்த நாளும் நிகழ்ந்தேறிய பல சம்பவங்கள் அதற்குக் கட்டியம் கூறுவதாக மாறியிருக்கிறது. மாவீரர் தினத்தன்று மக்களின் அஞ்சலிகளை தடுக்க அதிகாரம் மேற்கொண்ட முனைப்புக்கள் இதற்குச் சிறந்த சான்றாதாரமாகிறது. போரிலே உயிரிழந்த தமதுபிள்ளைகளுக்குக் கூட அஞ்சலி செலுத்தக் கூடாது என்று சிங்கள அதிகாரபீடம் அவசரமாக அறிக்கை ஒன்றை விடுத்தது. இந்த அறிக்கை கடந்த காலங்களில் பேரினவாதம் பின்பற்றி வந்த கொள்கைகளில் எந்த மனமாற்றமும் நிகழவில்லை என்பதை ஆணித்தரமாக நிரூபித்து விட்டது.

போரில் உயிரிழந்த உறவுகளை, உடன் பிறப்புக்களை பிள்ளைகளை நினைவு கூர்வதைக் கூட பயங்கரவாதச் செயலாக்கி மக்களின் உணர்வுகளை ஒரு கூட்டுக்குள் அடைத்துவிடும் நடவடிக்கைகளை இன்னமும் மஹிந்த அரசு கைவிடுவதாக இல்லை. இவ்வாறு சிறுபான்மை மக்களை எல்லா விடயங்களிலும் அடக்கி ஒடுக்குவதில் அரசு காட்டிவரும் முனைப்பு இலங்கைத்தீவை மீண்டும் போர் பூமியாக மாற்றிவிடுமோ என்ற அச்சத்தை அனைத்துலக மக்கள் மனங்களிலும் விதைத்து விட்டு சென்றிருக்கிறது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் உருவாக்கம் என்பது காலத்தின் தேவையாகவே மலர்ந்தது. உணர்வுகளின் அடக்கலும் அதற்கு அடுத்தபடியாக தமிழர் தேசம் மீது இனக் கலவரங்கள் என்ற போர்வையில் அரங்கேற்றப்பட்ட அராஜகப் படுகொலைகளுமே ஆயுதப் போராட்டத்துக்கான கதவைத் திறந்து வைத்தன. ஒருபோதும் தமிழ் இளைஞர்கள் பலவந்தமாக ஆயுதப் போராட்டத்தில் குதிக்கவில்லை.

அடக்குமுறையில், பேரினவாதம் தந்த வலிகளுமே ஆயுதங்களை எமது இளைஞர்களின் கைகளில் திணித்தன. 1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் தொடங்கி 1977 தரப்படுத்தல் வரை நீண்டு, 1983 இல் அரங்கேற்றப்பட்ட கறுப்பு ஜீலை கலவரம் என்பனவெல்லாம் வேறு வழியின்றி ஆயுதப் போராட்டத் திசைக்கு தமிழர்களை இழுத்துச் செல்லக் காரணமாகின என்பதை யாராலும் மறுக்கமுடியாது.

ஒரு பந்தை தண்ணீருக்குள் போட்டு அமிழ்த்துவதால் அது மூழ்கி விடும் என்று அதிகாரபீடம் முட்டாள் தனமான நடவடிக்கைகளில் இறங்கியதன் விளைவு தான் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் கருவாக உயிர்ப்பாக அமைந்தது.

அந்தவகையில் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதிவரை தமிழர் தேசத்தின் மீது சிங்கள அதிகாரபீடம் மேற்கொண்ட ஜனநாயக விரோத செயற்பாடுகள் இலங்கையின் எதிர்கால போக்கு நல்லிணக்கம் நோக்கி நகருமா என்ற சந்தேகத்தை தவிர்க்கமுடியாமல் ஏற்படுத்தியிருக்கிறது. ஆலயங்களில் மணியடிக்கக்கூட தடைவிதித்து தன் அடக்குமுறை இராணுவ ஆட்சியின் கோர முகத்தை அன்றைய தினம் வெளிக்காட்டியிருக்கிறது அதிகார பீடம். ஆனால் வழமையை போல அவர்களின் முகங்களில் கரியைப் பூசிவிட்டு தம் பிள்ளைகளுக்கான அஞ்சலியை எந்த அச்சமும் இல்லாமல் மக்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்தச் செயற்பாடு மக்களின் உள்ளக்கிடக்கைகளையும் உரிமைகளையும், சர்வதேசத்தின் முன் அப்பட்டமாகப் போட்டுடைத்தது. ஆனால் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள மறுத்த ஆட்சியாளர்கள், தமது எச்சரிக்கையையும் மீறி மாவீரர் நாளில் அஞ்சலி செய்தவர்களுக்கு அடுத்த நாள் விடிவதற்கிடையிலேயே தன்னுடைய பரிசில்களை மலர்வளையமாகவும், கல்லெறியாகவும், கழிவு ஒயிலாகவும் வழங்கி தன்னுடைய வக்கிரத்தை வெளிப்படுத்தியிருக்கிறது. அன்றைய தினம் அரங்கேறிய தாக்குதல்கள், அடக்குமுறைகள், கைதுகள், மிரட்டல்கள் என்பனவெல்லாம் ஆட்சியாளர்கள் அடிக்கடி உச்சரிக்கும் இனநல்லிணக்கம் வெறும் வெட்டிப் பேச்சு என்பதை துலாம்பரமாகியிருக்கிறன.

மாவீரர் நாளுக்கு முதல்நாள் கரவெட்டிப் பிரதேச சபையில் மாதாந்தக் கூட்டம் நடை




பெற்றதால் போரில் உயிரிழந்த மக்களுக் கான அஞ்சலியைச் செலுத்திவிட்டு கூட்டத்தை ஆரம்பித்ததைக் கூட பயங்கரவாத முலாம் பூசிப் பார்த்திருக்கிறது அரச இராணுவ இயந்திரம். அன்றைய நாளே அதன் தவிசாளர் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப் பட்டு இரு மணித்தியாலங்கள் ஏதோ புலிகளின் தளபதியைப் போல அவரை விசாரித்திருக்கின்றனர் பொலிஸார். போரில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கும் புலிகளை மீளுருவாக்கம் செய்வதற்கும் என்ன தொடர்பு இருக்கின்றது என்பது பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹணவுக்கும் இராணுவப் பேச்சாளர் ருவான் வணிக சூரியவுக்கும் மட்டுமே தெரிந்த மர்மம். இதற்கு அடுத்த நாள் கரவெட்டிப் பிரதேச சபைத் தலைவரின் வீட்டில் இருந்த வாகனம் அடித்து நொருக்கப்பட்டிருக்கிறது. அவரின் வீட்டு வளவுக்குள் அதிகாலை வேளை உட்புகுந்த நபர்களே தாக்குதல் நடத்தியதாக குறித்த பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்திருக்கிறார். அவரது வாக்கு மூலத்தின்படி "சுமார் 4 இற்கும் மேற்பட்டோர் தாக்கியதாகவும், எனது பெரிய கேற்றால் ஒருவர் ஏறி வந்து வெளியே நின்ற வாகனத்தை அடித்து நொருக்கினர். ஏனையோர் வீட்டு சுற்று மதிலினூடாக ஏறிப் பாய்ந்து உள்ளே வந்து தாக்குதலில் ஈடுபட்டனர்" என்று தெரிவித்திருக்கிறார். மொத்தத்தில் முதல்நாள் கரவெட்டிப் பிரதேச சபைக் கூட்டத்தின் போது புகுந்த இராணுவப் புலனாய்வாளர்கள் என நம்பப்படுவோர் செய்த குழப்பங்களும், அதன் பின் நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்கு பிரதேச சபைத் தவிசாளர் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட முறையும் போரில் இறந்தோருக்கு அஞ்சலி செலுத்தியமைதான் தாக்குதலுக்குக் காரணம் என்ற வலுவான சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. இது தவிர அன்றையநாளே வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினரின் வீடுமீதும் தர்க்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. 3 மோட்டார் சைக்கிளில் வந்தவர்களே கல்வீசித் தாக்குதல் நடத்தியதாகவும், அவர்களின் மோட்டார் சைக்கிள் தப்பிப்போகும்போது தனது வீட்டிலிருந்து சுமார் 25 மீற்றர் தொலைவில் மகேந்திரா ரக படி வாகனத்தில் இராணுவச் சீருடையுடன் சிலர் தென்பட்டதாகவும் அவர்களைத் தாண்டித்தான் அந்த மோட்டார் சைக்கிள் சென்றதாகவும் வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார். இவரின் வாக்குமூலம் தாக்குதலின் பின்னணி என்னவாக இருக்கும் என்பதை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் வெளிப்படுத்தி இருக்கிறது.

மாவீரர் நாளன்று போரில் உயிரிழந்த மக்களின் நினைவாக மரக்கன்றுகளை நாட்டிய வட மாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசனின் வீடு மீதும் கல்வீசித் தாக்குதல் நடத்தப்பட்டிருக் கிறது. ஒரு மாகாண அமைச்சரின் வீட்டுக்குக் கூட பாதுகாப்பு கொடுக்க முடியாத வெட்கங்கெட்ட நிலைக்குள் இலங்கை அதிகாரம் வாழ்ந்து கொண்டிருக்கிறதா என்ற சந்தேகத்தை இந்தத் தாக்குதல் எழுப்புகின்றது.

"மரக்கன்றுகளை நாட்டினால் அடுத்த முறை உங்கள் நினைவாக மரக்கன்றுகளை நாட்ட வேண்டி வரும்" என இனந்தெரியாத நபர் ஒருவர் தொலைபேசியில் விவசாய அமைச்சரை அச்சுறுத்தியதாகவும் அடுத்த நாளே தாக்குதல் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆகவே மாவீரர் நாளில் மரம் நட்டதற்குப் பரிசில்தான் இந்தக் கல்லெறி என்பது வெட்ட வெளிச்சமாகிறது.

சாவகச்சேரியில் மாவீரர் துயிலுமில்லங்கள் புனரமைக்கப்படவேண்டும் எனத் தெரிவித்து பிரேரணை ஒன்றை முன்வைத்த சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சிறிரஞ்சன் வீடுமீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

போர் முடிந்த பின்னர் துப்பாக்கிகள் இராணுவத்தையும், பொலிஸாரையும் தவிர வேறு யாரிடமும் இருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் எந்த ஆயுதக் குழுக்களும் இல்லை என இராணுவப் பேச்சாளரும், பாதுகாப்புச் செயலரும் அடிக்கடி தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் சூட்டுச் சம்பவங்களின் பின்னணியில் உள்ள துப்பாக்கிதாரிகள் யாராக இருக்கலாம் என்பதை அவர்கள்தான் வெளிப்படுத்த வேண்டும்.

அத்துடன் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் "அஞ்சலி செய்தார்கள்" என்ற குற்றச்சாட்டில் இளைஞர்கள் சிலர் கடந்த வருடத்தைப் போல இந்த முறையும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இவர்கள் மீது பயங்கரவாத குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்றது. மொத்தத்தில் இலங்கை அரசு இன்றும் தன் இனவாத மமதையில் இருக்கிறதே தவிர இனநல்லிணக்கம் நோக்கி பயணிக்கத் தயாராக இல்லை என்பதை இத்தகைய நடவடிக்கைகள் மூலம் போட்டுடைத்துவிட்டது.

தமிழ் மன்னன் எல்லாளனை போரிலே வென்ற துட்டகைமுனுவின் வழிவந்தவர்கள் என்று தமக்குத் தாமே புகழ்மாலை சூட்டிக் கொள்ளும் அதிகார பீடத்தினர் துட்டகைமுனு பிற்பற்றியிருந்த நல்லிணக்கத்தின் சிறுதுளியைக் கூட பிற்பற்றத் தயாராக இல்லை. எல்லாளன் உறங்கும் சமாதியைக் கடந்து செல்லும் போது மணி எதுவும் எழுப்பக்கூடாது. அங்கு உறங்குபவன் எதிரியென்றாலும் அவன் வீரன் என்பதாலும் போராடி மடிந்தவன் என்பதாலும் எல்லோரும் அமைதியாக குதிரைகளை விட்டிறங்கிச் செல்ல வேண்டும் என உத்தரவிட்டவன் துட்டகைமுனு. அவனின் வழிவந்தவர்கள் எனக் கூறுபவர்கள் எப்போதுதான் திருந்துவார்களா?

டிச.04 – 10, 2013
sudarolijaffna@gmail.com

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி–: 021 567 7609

# களையின் உருவில் இன்னொரு ஆக்கிரமிப்பு

பாதீனியம் என்பது ஒரு காலத்தில் ஆயுள்வேத மூலிகையாக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது தரும் நன்மைகளைவிடவும் அபாயங்களே அதிகம். ஒட்டுண்ணிபோல நிலத்தின் வளத்தை அதீதமாக உறிஞ்சிக் கொண்டு சடுதியாக எல்லா இடமும் பரவும் ஆற்றல் இதற்கு உண்டு. மண்ணின் வளத்தை பாதீனியம் முந்திக்கொண்டு உறிஞ்சிக்கொள்வதால் பக்கத்தே வளரும் விவசாயப் பயிர்கள் செழிப்பாக வளரமுடியாது. தொடர்ந்தும் பாதீனியம் தன்வித்துக்களை விரைவாகப் பரம்பலடைய வைக்கும். ஆக்கிரமிப்பின் விரிவாக்கத்தை தொடர்ச்சியாக நிகழ்த்திக் கொண்டே இருக்கும்.

இதனால் ஒரு கட்டத்தில் விவசாய நிலங்கள் எல்லாமே பாதீனியம் மண்டிப்போய் தரிசு நிலங்களாக மாறும் அபாயம் உண்டு. இதுதவிர மனிதர்களுக்கு ஒவ்வாமை நோயையும் உண்டுபண்ணக்கூடிய சக்தி பாதீனியத்தில் ஒழிந்திருக்கிறது.

இந்தப் பாதீனியம் எங்கள் தேசத்தின் பரம்பரைத் தாவரம் அல்ல. அது 1987 ஆம் ஆண்டு அமைதிப்படை என்ற போர்வையில் தமிழர் தேசத்தில் இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்த காலத்தில் திட்டமிட்டோ அல்லது தற்செயலாகவோ இங்கு முளைவிடத் தொடங்கியது. இந்திய இராணுவத்தினரின் உணவுத் தேவைக்கென தென்னிந்தியாவில் இருந்து கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட ஆட்டின் எச்சங்களில் ஒளிந்திருந்த பாதீனிய விதைகள் சமயம் பார்த்து தங்கள் ஆக்கிரமிப்பை எங்கள் தேசத்தில் நிகழ்த்தத் தொடங்கின.

ஆரம்பத்தில் இதன் பாதிப்பு அவ்வளவாகக் கண்டுகொள்ளப்படவில்லை. தொடர்ச்சியான இடப்பெயர்வு, போர்ச் சூழல், விவசாய நிலங்கள் படையினரால் ஆக்கிரமிக்கப்படுதல் என்பன போன்ற காரணங்களால் யாரும் பாதீனியத்தின் பரம்பல் பற்றியும் அதன் தாக்கம் பற்றியும் பெரிதாகக் கணக்கெடுக்கவில்லை. ஆனால் 2000 ஆம் ஆண்டுகளில் வடமாகாணம் எங்கும் அழிக்கவே முடியாத அளவுக்கு பாதீனியம் வியாபித்து பெருகி இருந்த போதுதான் அதன் தாக்கத்தை ஒவ்வொருவரும் உணரத்தொடங்கினர். வீதிக்கு வீதி, கிராமத்துக்குக் கிராமம், மாவட்டத்துக்கு மாவட்டம் சிரமதானங்கள் நடந்தேறின. 'அப்பாடா!, இப்போதாவது பாதீனியத்தை ஒழிக்க முடிந்ததே' என்று சிரமதானத்தில் ஈடுபட்டவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுவதற்கிடையில் , அடுத்த மழையில் இன்னும் அதிகமாய் முளைவிட்டது பாதீனியம். வடக்கில் இருந்து விரட்டவே முடியாத இன்னொரு ஆக்கிரமிப்பின் அடையாளமாய் அது எங்கள் தேசத்தில் நிரந்தரமாகிவிட்டது.

இந்த நிலையில் எப்படியும் பாதீனியத்தில் படையெடுப்புக்கு முடிவு கட்டியே தீருவது என்ற கங்கணத்தோடு வடமாகாண விவசாய அமைச்சு களம் இறங்கியுள்ளது. கொட்டும் மழையின் நடுவிலும் நிலாவரையில் வைத்து பாதீனியத்துக்கு எதிரான போர்முனை திறந்து வைக்கப்பட்டது. ஆயினும் வழமைபோலவே பெயருக்கு ஒருமுறை ஒட்டுமொத்தப் பாதீனியங்களையும் அழித்துவிட்டுப் பேசாமல் இருந்தோமேயானால் நிச்சயம் முன்னரைப் போன்று அடுத்தமழையில் இன்னும் அதிக பகுதிகளில் பாதீனியம் முளைவிட்டே தீரும். எனவே பச்சைச் சீருடையோடு நிறைந்து கிடக்கும் பாதீனியச் செடிகளைமாத்திரம் அல்லாமல் அவை வளர்ந்திருக்கும் சூழலில் ஒளிந்திருக்கும் பாதீனிய விதைகளையும் முளைதிறன் அற்றவையாக்க நடவடிக்கை அவசியம். அப்போதுதான் உண்மையிலேயே வடக்கிலிருந்து பாதீனியத்தின் ஆட்சியை ஒழிக்க முடியும்.

# கண்துடைக்கும் இந்தியா

பூமுகன்

ஈழத்தமிழர் விடயத்தில் அயல்நாடு என்ற வகையில் இந்தியா காலத்துக்குக் காலம் தவறையே செய்துவந்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல் தவறுக்கான காரணங்களையும் கூறி ஈழத்தமிழர்களை ஏமாற்றுவதிலும் குறியாகவே இருந்துவருகிறது.

இந்தியா எந்த முடிவை எடுத்தாலும் ஈழத்தமிழர் விடயத்தில் இனி எந்த நற்காரியங்களும் இடம் பெறப்போவதில்லை என்ற நிலை வந்துவிட்டது. காரணம்இந்தியாவின்இரட்டை நிலைப்பாடுதான்.




இந்திய மத்திய அரசு தமது நிலைத்திருப்புக்காக தமிழகத்தில் தங்கியிருக்கிறது. எனவே தமிழகத்தைச் சமாளிப்பதற்கான சாடைகளை அவ்வப்போது காட்டிக்கொண்டால்தான் அது வெற்றி பெறும். இந்த இரட்டை நிலை அரசியல் தந்திரத்தை மிகவும் நுணுக்கமாக இந்திய மத்திய அரசு கையாண்டுவருகிறது. அதுமட்டுமல்லாமல் தமிழக அரசியல் தலைவர்களை எப்படிச் சமாளிப்பது என்பதையும் மத்திய அரசு நன்கு அறிந்துவைத்திருக்கிறது. மகுடி ஊதும்வரைக்கும் ஆடும் தமிழக அரசியல் பாம்புகளை பெட்டிக்குள் மூடும் அரசியல் தந்திரம்தான் இது.

சென்னையில் கடந்த 30ஆம் திகதி “இலங்கை தமிழர்களின் வாழ்வுரிமையும், இந்திய அரசின் நிலையும்” என்ற தலைப்பில் கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றது. காங்கிரஸ் கட்சியினராலேயே இந்தக் கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனாலும் தமிழகக் காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்படவில்லை. இதில் இந்திய மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினார். அவரது உரை பல்வேறு கேள்விகளைஎழுப்பி நிற்கிறது. மேடையில் நானே ஏற்பாட்டாளர். நானே நடத்துபவன். நானே பிரதம விருந்தினர். நானே பேச்சாளர். என்று பெருமை பேசிய அமைச்சர் ஈழத்தமிழர்கள் பற்றிப் பேசத் தனக்கு சந்தர்ப்பமும் மேடையும் கிடைக்க வில்லை என்று கவலைப்பட்டிருக்கிறார்.

**சிதம்பரஞானம்**

இலங்கையில் இறுதிப்போரின்போது நடைபெற்றவை இனப்படுகொலைகளே. இவை பற்றி ஒரு விரிவான, உண்மையான விசாரணை நடத்தப்பட வேண்டும். அந்த விசாரணை உலக நாடுகளால் ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவுக்கு உண்மையான விசாரணை

→

யாக இருக்க வேண்டும். இனப்படுகொலைக்கு காரணமானவர்கள் அடையாளம் காணப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். அதுமட்டுமல்ல இந்திய இலங்கை உடன்பாடிக்கையின் அடிப் படை யில் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத் தத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்னும் நிலையில் இருந்தும் இந்திய அரசு

**இந்தியா எந்த முடிவை எடுத் தாலும் ஈழத்தமிழர் விடயத் தில் இனி எந்த நற்காரியங் களும் இடம்பெறப்போவ தில்லை என்ற நிலை வந்து விட்டது. காரணம் இந்தியா வின் இரட்டை நிலைப்பாடு தான்.**

ஒருநாளும் பின்வாங்காது. இலங்கையில் தமிழர்கள் தமது அரசியல் சாசன உரிமைகளை முழுமையாகப் பெறுவதற்கு காங்கிரஸ் கட்சி தொடர்ந்து போராடும் என அமைச்சர் எடுத் தியம்பியிருக்கிறார்.

இந்தியா ஈழத்தமிழர்களுக் காகச் செய்த உதவிகளைவிட துரோகமே அதிகமானது என் பதால் அமைச்சரது மெஞ்ஞா னக்கருத்துக்கள் எவரது காது களுக்கும் எட்டுவதாகவில்லை. இவைஎல்லாம் ஒரு வகைப் புலம் பலாகவே ஈழத் தமிழர்களால் பார்க்கப்படுகிறது என்பதை அமைச்சர் உணரவேண்டும்.

### அமைச்சரின் மூன்று

இலங்கையில் இப்போது மூன்றுவிதமான பிரச்சினை களுக்குத் தீர்வு காணவேண்டி இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ள அமைச்சர் அந்த விடயங்களைப் பட்டியலிட்டிருக்கிறார்.

01. இலங்கை தமிழர்களுக்கு வாழ்வாதாரம், சம உரிமை, சம அந்தஸ்து என்பவற்றைக் கிடைக் கச் செய்வது.

02. இலங்கையில் நடந்த இனப்படுகொலை குறித்து ஆழமான, நேர்மையான விசாரணை நடத்தி, அதில் சம்பந்தப்பட்டவர்களைத் தண் டிப்பது.

03. உள்நாட்டில் இடம்பெயர்ந்த தமிழர் களுக்கு, வீடு இழந்தவர்களுக்கு மீண்டும் பழைய இடத்திலேயே வாழ்க்கையை அமைத் துக்கொடுப்பது.

இவற்றைச் சாத்தியமாக்குவதற்கு இந்தியா தன்னாலான முயற்சியை எடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இதில் எந்தக் கூற்றும் இலங்கை அரசைப் பொறுத்தவரை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. இலங்கை அரசு இதற்கு எதிரான நிகழ்ச்சி நிரலையே வைத்திருக்கிறது. அப்படி என்றால் பிள்ளையையும் நுள்ளி தொட்டிலையும் ஆட்டக்கூடிய இந்தியாவால் இவற்றை எப்படிச்சாத்தியமாக்கமுடியும் என்ற கேள்வி தவிர்க்கமுடியாதது.

### 65ஆயிரம்பேர்பலி

இலங்கையில் நடைபெற்ற இறுதிப்போரில் கொல்லப்பட்டவர்கள் தொடர்பில் பலதரப் பட்ட அறிக்கைகள் வெளியாகியுள்ளன. அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு தொகைகளைக் காட்டுகின்றன. சர்வதேச மனித உரிமை அமைப்புக்களாலோ, ஐ.நா. சபையாலோ ஏன் இலங்கை அரசால்கூட இந்த தொகையை சரியாகக்கூறிவிட முடியாது. காரணம் இறுதிபோர் நடந்த பிரதேசத்தில் இருந்த மக்கள் தொகை சரிவரக் கணக்கிடப்படாமையே.

விடுதலைப்புலிகள் தமது தேவைகளுக்காக சனத்தொகையை அதிகரித்து காட்டினர். இதனை மறுப்பதற்கு இலங்கை அரசிடம் எந்த ஆதாரமும் இருக்கவில்லை. காரணம் வட பகுதியில் பலவருடங்களாக சனத்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை. இறந்த வர்கள் என்று ஒரு தொகைபோக காணா மற்போனவர்கள் என்று மற்றுமொரு தொகை யினர் குறித்து இன்றுவரை தகவலில்லை.

இந்த நிலையில் இந்தியமத்திய அமைச்சர் முதன்முறையாக தன்சார்புக் கணக்கெடுப்பை வெளியிட்டிருக்கிறார். அதில் பொதுமக்கள் விடுதலைப்புலிகள், இராணுவத்தினர் என 65 ஆயிரம் பேர் இறுதிப்போரில் கொல்லப்பட்டி ருக்கலாம் என்று அவர் குறிப்பிடுகிறார்.

### பழையதையே கிழறுதல்

இலங்கையில் வாழும் தமிழர்களின் நல் வாழ்வுக்காக முதலாவதாக ஒப்பந்தம் செய்து கொண்டவர் ராஜீவ்காந்தி. அந்த உடன் பாட்டை முறிக்க யார் காரணம்? அதன் விளை வால்தான் உள்நாட்டிலே போர் ஏற்பட்டது. பலர் இறந்தனர். அந்த வரலாறு மனவருத்தம் தரும் வரலாறு. அந்த ஒப்பந்தம் நிறைவேறி யிருந்தால், அங்கு தமிழரின் ஆட்சி நடந்து கொண்டிருக்கும். உறவு பலப்பட்டிருக்கும். அந்த 15 ஆண்டு கால சோகம் நடந்திருக்காது என்றும் அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.




கடந்துபோன நினைவுகளைப் புதுப்பிக்க ஈழத்தமிழர்கள் ஒன்றும் பகடைக்காய்கள் அல்லர் என்பதை இந்தியா புரிந்துகொள்ள வேண்டும். சிதம்பரம் சொல்லும் கதை வீட் டைப் பூட்டிக்கொண்டு ஒருவன் தற்கொலைக்கு முயற்சித்தால் வீடு பூட்டியிருக்கிறது என்பதற் காக அவனைக் காப்பாற்றாது விடுவது போன்றது.

தற்கொலைக்கு முயற்சிப்பவன் கதவை பூட்டத்தான் நினைப்பான். ஒரு உயிரைக் காப் பாற்றுவதற்காக அந்தக் கதவை உடைப்பது குற்றம் என்று சொல்ல முடியாதல்லவா?

இறுதிப்போர் மூண்டு ஈழத்தமிழர்கள் கொத்துக் கொத்தாக செத்து மடிகையில் கைகட்டிக்கொண்டிருந்த இந்திய மத்தியஅரசு இப்போது நீலிக் கண்ணீர் வடிப்பது எந்த விதத் திலும் நியாயமாகாது.

### சேறுபூசுதல்

புனில் என்று ஒரு பறவை இனம் இருக்கிறது. ஏழு சகோதரிகள் என்று இவற்றைச் சொல்ல லாம். இவை கால் விலங்கிடப்பட்ட பறவை கள். அப்படி என்றால் நடக்கத் தெரியாதவை என்று கொள்ளலாம். புனில் பறவைக்கு இந்த நிலை ஏற்படக் காரணமாக ஒரு மரபுக்கதை சொல்லப்படுகிறது. அணில் புனில் ஆகியவற் றுக்கு சிவபெருமான் ஒரு பணியை வழங்கு கிறார். இருவரும் சேர்ந்து கிணறு வெட்ட வேண்டும். எந்நேரமும் துருதுருவென இருக்கும் அணில் புனிலுடன் சேர்ந்து பணியாற்ற வில்லை. பாவம் புனில் ஒருவாறாகத் தன்னந் தனியாகக் கிணற்றை வெட்டி முடிக்கிறது. சந்தர்ப்பம் பார்த்து வந்த அணில்ப்பிள்ளை கிணற்றுச் சேற்றை எடுத்து தன் உடல்முழுவதும் பூசிக்கொண்டது. இறுதியில் பணிப்பாளரிடம் (சிவபெருமானிடம்) இருவரும் செல்கின்றனர். அப்போது அணில் முந்திக்கொண்டு நான் தான் பாடுபட்டு கிணறு வெட்டினேன் என்றது. சிவபெருமானும் நம்பிக்கொண்டு அணிலுக்கு முதுகில் மூன்று தங்கக்குறி பதித்துவிட்டு புனிலுக்கு தண்டனையாக கால் விலங்கிட்டு விடுகிறார். இதுதான் கதை.

சேறுபூசி பொற்குறிவாங்கவே இந்தியாவும் முயற்சிக்கிறது. அமைச்சர் சிதம்பரம் தனது உரையில் ஓர் இடத்தில் குறிப்பிடுகிறார் இந்தியா வெளியில் இருந்து முயற்சித்தது. பாடுபட்டது. அதனால்தான் இலங்கைப் பிரச்சினை சர்வதேச மயப்பட்டது என்று.

இலங்கைப் போரை நிறுத்துவதற்கு தாம் வேறு நாடு ஒன்றை வைத்துப் பேச்சு நடத்தியதாகவும், தமிழர் பிரச்சினைகளை தாம் வெளிக்கொணர்ந்த

**யார் குற்றியாவது அரிசியாக வேண்டும். யார் நெருப்புகாய்ந் தாவது பொங்கல் ஆகவேண் டும். புது வேட்டிகட்டி அகப்பை பிடித்து பொங்கல் பகிர்ந்து தாம் பெயர் எடுக்கவேண்டும் என்பது தான் இந்தியாவின் நிலைப்பாடு**

தால்தான் இன்று ஐ.நா சபையும் பிரிட்டனும் கூட பேசுவதற்கு முன்வந்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிடுகிறார்.

யார் குற்றியாவது அரிசியாக வேண்டும். யார் நெருப்புக்காய்ந்தாவது பொங்கல் ஆக வேண்டும். புது வேட்டிகட்டி அகப்பை பிடித்து பொங்கல் பகிர்ந்து தாம் பெயர் எடுக்க வேண்டும் என்பது தான் இந்தியாவின் நிலைப் பாடு என்பதை சிதம்பரஞானி சொல்லி யிருக்கிறார்.

# கவிதைப் புனல்

## பெண்ணே நீ எழு இடியாக

பெண்ணே உன் பிறப்பு
மண்ணில் அது சிறப்பு- நீ
புராணம் ஒன்றிருப்பதைப்
புரட்டிப் பார்க்கவா பிறந்தாய்
புதிய இதிகாசத்தை எழுதிவிட
சருகு நிலங்களையும்
சதி வலைகளையும்
தாண்டி வா.

மரணம் நாளை வருமென்றால்
மண்ணில் வண்ணாத்திப் பூச்சி
வாழ மறந்திருக்கும்- பால்
நிலவு தேய்ந்து போவதனால்
வானம் இருட்டாகவில்லையே!
புயற்காற்றும் பூகம்ப மழைவரினும்
-நாணற் புற்கள்
நலிவடைந்தல்லையே!
பெண்ணே நீ எழு இடியாக

விடியல் உன்கையில் இருக்கு
விதவைப்பட்டம் உனக்கெதுக்கு
பாவியென பார்பூமி சொல்லுவதை
பாவை நீ வெட்டியெறி


தாலி இழந்ததனால்
காலியாகவில்லை உன் மனம்
நீ எதை இழந்துவிட்டாய்
மனக்கண்ணும் நம்பிக்கையும்
உள்ள உனக்கு - இடர்கண்
கொண்டு துன்பத்தில் துவளாதே!
பெண்ணே நீ எழு இடியாக

சரித்திர பூமியில் நீயும்
சாதிக்கப் பிறந்தவள்
சவால்கள் நிரப்பி
சடுகுடு ஆட எழு
நாளை இவ்வுலகில்
நீயுமொரு நாயகியாவாய்
பெண்ணே நீ எழு இடியாக....

அசோகன்
பளையூர்.



## அடுத்த பொழுது



நல்லதோர் வைகறைக்கு
நாம் எல்லோரும்
செயற்கைச் சூரியன்
செய்து கொடுத்துள்ளோம்!

சுயநலங்களை மறந்து
சுய ஆட்சி வாழ்வுக்கு
ஒன்று சேர்ந்துள்ளோம்!

எதிரி உறிஞ்சிக் கொண்டிருக்கும்
இனக் கௌரவத்தை
கட்டிக் காக்க
ஆயுதம் தந்துள்ளோம்!

இன அக்கறையில் முட்டி வழிந்த
உங்கள் பேச்சுக்கள்
ஏமாற்றுச் சாக்கடைக்குள்
புதைபடக் கூடாது!

ஆட்சிக் கதிரைகளை
வீட்டுக் கதிரைகளாய் நினைத்து
வசதியாய்ப் படுத்து
அயர்ந்து விடாதீர்கள்!

பதவிக் கர்வம் பிடித்த
மனிதர்களாகி
கதிரையின் கால்களை
உடைத்து விட்டு
சிறகு கட்டி
பறக்க முயலாதீர்கள்!

அதிகாரத்தால் நியாயங்களை
நசித்து விடாதீர்கள்
இனி தொடர்விருக்கும்
எந்தவொரு அவலக்குரலும்
உங்கள் ஆட்சியிலே பதியப்படும்!

இனியாவது கழுகுகளை
பட்டினி போடுவோம்
வெள்ளைப் புறாக்களுக்கு
விருந்து கொடுப்போம்!

எம். நேதா, நெடுந்தீவு.

## போதாத வாழ்க்கை

வாழ்க்கை என்றால்
என்னவென்று தேடவே
வாழ்நாள் போதாதிருந்தும்...
நோய் வாய்ப்பட்டு
நலங்கெட்டுப் போகையில்
போதுமென்றாகியது
வாழ்நாள்...
போதுமென்றாகியது.

ஆறறிவு கொண்ட
ஆசைமிகு மனிதனுக்கு
வயது வர- அதன்
வாழ்வுதைக்க...
விலைவாசி
விரைவாய் ஏற...
ஒரு தாளுளைக்க
ஒன்பது நாளாக...
போதாதென்றிருந்தும்
பேதை மனதால் - ஏதோ
போகுது வாழ்வு

பேச்சளவில் பலவற்றை
போதுமென்றாலும்...
சிலவற்றை சொல்ல வேண்டும்
கற்க வேண்டிய கல்வி...
தேட வேண்டிய தேடல்...
அன்னையின் அரவணைப்பு...
போதாதென்றாகிறது
இன்னும் வாழ்வில்...
போதாதென்றாகிறது

வே. முல்லைத்தீபன்
ஒட்டிசுட்டான்.

## காதலிக்க துணிந்திடு

காதலுக்கு அகராதியில்
தட்டிப் பார்த்த பதிவுகள்
எல்லாமே ஏதேதோ
அந்தர பதங்கள்

உணர்விழந்து நடக்கும்
உருவத்து பொம்மைகள்
காதலால் விழைந்த
காயத்து நியதிகள்

சட்டம் போட்டு தடுத்தாலும்
காதல் திட்டம் போட்டு
ஓட்டம் பிடிக்கும்

கொட்டிப் பார்த்து பின்பு ஏதோ
கொற்றம் மறந்து
கொறட்டையடிக்கும்

சுத்த பைத்தியம் என்று
காதலை யாரோ!
சொல்லி வைத்த போதும்
பித்தம் கொண்ட மனது
காதலுக்காய் துடிக்கும்

காதல் கண்ணீர் வாழ்க்கை
எல்லாம் உண்டு
கடைசி வரை உயிரிருந்தால்
காதலிக்க துணிந்திடு

வே.வே.அகிலேஸ்வரன்.
மருதங்கேணியூர்.

## மீண்டும் பெண்ணாய்

போர்....வெறியின்
சிலிர்ப்பு.....
பசிக்கு இரை
கிடைத்த இறுமாப்பு
பார்வையில்
துகில் உரியும்
துச்சாதனர்களின்
அணி வகுப்பு....

வாழ்வின் உயிர்ப்புக்குள்
அடங்கி... அடங்கி
எழும்.... சுவாசம்...
மெரு நெருப்பு.....

பெண் இனத்தின்
தீராத வலியும்
பிறப்பை... எதிர்
கொள்ள... திராணி
அற்ற நிலையும்....

மன விருட்சத்தின்
அடி வேரை
அழிக்கும்.....அவலமும்
கடைக்கணம் பொழுதின்
வேட்டை நாய்களின்
ஆர்ப்பரிப்பும்...
அடங்கி ....ஓய்ந்தபின்

மௌனத் தடங்கள்
கணப் பொழுதில்
தீராப் பழி .... பெண்
மனதில் ஓங்கி வளரும்
தீச்சுவாலையாய்

முல்லை ரமணன்



# விளையாட்டு

தொகுப்பு : வரு

## இந்தியாவின் ஆதிக்கம்



80 களில் மேற்கிந்தியதீவுகள், இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகள் ஆதிக்கம் செலுத்திய கிரிக்கெட்டில், 1996ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை இலங்கையணி வென்றதன் பின்னர் ஆசிய நாடுகளின் ஆதிக்கம் மேலோங்கியது. ஆனாலும் அது நீடிக்கவில்லை. 1999 - 2007 வரை அவுஸ்திரேலியா அணி சொந்த மண்ணிலும், வெளிநாடுகளிலும் வெற்றிகளைக் குவித்து பல தொடர்களைத் தம்வசப்படுத்தியது. அவுஸ்திரேலிய அணியின் சிரேஷ்ட வீரர்களின் ஓய்வுகளைத் தொடர்ந்து, இளம் வீரர்களின் துணையைக் கொண்டு இந்திய அணி தற்போது கிரிக்கெட்டை தன் ஆதிக்கத்துக்குள் கொண்டு வருகின்றது.

சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலில் இந்தியக் கிரிக்கெட் சபை பலம்மிக்க ஒரு தரப்பாக இருப்பதால் ஐ.சி.சி.க்குள் இந்தியாவின் ஆதிக்கம் நீண்ட காலமாக இருக்கின்றது. அதன் வெளிப்பாடே ஐ.பி.எல். போட்டிகளுக்கு கிடைத்த வெற்றி. அதேநேரம் உலகக்கிண்ணம், மினி உலகக் கிண்ணம், 20-20 உலகக் கிண்ணம் என கிடைத்த தொடர்களை எல்லாம் தம்வசப்படுத்தி வெற்றி நடைபோடுகிறது இந்திய அணி. அதிலும், இந்த வருடம் இந்திய அணிக்கு கிடைத்த வெற்றிகளும், இந்திய வீரர்கள் வெளிப்படுத்திய திறமைகளும் அவர்களைச் சர்வதேச தரப்படுத்தலில் முன்னணிக்கு கொண்டு வந்திருக்கின்றது.

இந்த ஆண்டு இந்திய அணி தொடர்ச்சியாக 6 ஒருநாள் தொடர்களை வென்ற உற்சாகத்தில் இருக்கின்றது. இந்தவருடம் இதுவரை அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரர்கள் வரிசையில் விராட் கோஹ்லி (31 போட்டிகள் 1237 ஓட்டங்கள்), ரோகித் சர்மா (25 போட்டிகள் 1159 ஓட்டங்கள்), ஷிகா தவான் (23 போட்டிகள் 1150 ஓட்டங்கள்) ஆகியோர் முதல் மூன்று இடங்களிலும் உள்ளனர். ஐ.சி.சி. ஒருநாள் தரவரிசைப்பட்டியலிலும் கோஹ்லி 857 புள்ளிகளுடன் முதலிடத்திலும், தோனி 780 புள்ளிகளுடன் 6ஆம் இடத்திலும் உள்ளனர்.

ஒருநாள், 20 -20 தொடர்களில் சாதிக்கும் இந்திய அணியால் டெஸ்ட் போட்டிகளில் அவ்வளவாக சாதிக்க முடிவதில்லை. அதிலும், வெளிநாடுகளில் இடம்பெறும் தொடர்களில் மண் கவ்வுகிறார்கள். தவிர, பந்துவீச்சும் இந்திய அணிக்கு பலவீனமா கவே இருக்கின்றது. 2015இல் இந்திய அணி உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் எனில், அவர்கள் பந்துவீச்சு தொடர்பில் அதிக கவனம் எடுக்க வேண் டும் என இலங்கையணியின் முன்னாள் வீரர் அர்ஜுன ரணதுங்க குறிப்பிட்டுள்ளார். துடுப்பாட்டத் தில் சிறப்பாக செயற்படும் இந்திய அணி பந்துவீச் சில் பலவீனமாக இருப்பதாக அவர் மேலும் தெரி வித்திருக்கிறார்.

டெஸ்ட் போட்டிகளைப் பொறுத்தவரை இந்திய அணிக்கு சவாலான காலமிது. சச்சின், டிராவிட், லட்ஷ்மண் என அனைத்து சிரேஷ்ட வீரர்களும் ஓய்வு பெற்றுவிட்டார்கள். தோனி தலைமையில் இளம் இந்திய அணியே சாதிக்க வேண்டியிருக்கிறது. இதனால், விராத் கோஹ்லி, ஷிகர தவான், ரோகித் சரமா, புஜாரா போன்ற இளம் வீரர் களுக்கு கடும் அழுத்தம் காத்திருக்கிறது. அனு பவ வீரர்களான கம்பீர் மற்றும் சேவாக்கை அணிக்குள் தேர்வு செய்யாமையால் தங்களுக் குக் கிடைத்த வாய்ப்புக்களில் சரியான திறமை களை இளம் வீரர்கள் வெளிப்படுத்த வேண்டும்.

பந்துவீச்சில் தடுமாறுவதால் புவனேஷ் குமார், மொகமட் சமி, மொகித் சாமா, இஷாந் சாமா, உனட்கட், யாதவ் என பலரையும் சுழற்சி முறையில் பயன்படுத்துகிறார்கள். தற்போது தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணியில் சகீர்கானை மீண்டும் இணைத்துள்ளார்கள். தென்னாபிரிக்க ஆடுகளங்களில் இந்திய வேகப் பந்து வீச்சாளாகள் சிறப்பாக செயற்பட்டு அந்நிய மண்ணிலும் இந்தியாவின் வெற்றிப்பயணம் தொடருமா என பொறுத்திருந்து பார்க்கலாம்.

## கால்பந்து ஜீரம்

சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (ஃபிபா) சார்பில் நடத்தப்படுகிற உலக கிண்ண கால்பந்து தொடர் வரும் 2014, ஜூன் 12 முதல், ஜூலை 13 வரை, பிரேசிலில் நடக்கவுள்ளது. இதற்கான தகுதிச் சுற்று கடந்த இரண்டரை ஆண்டுகளாக பல்வேறு பகுதிகளில் நடந்தது. முடிவில் 32 அணிகள் தேர்வு பெற்றன. போட்டியை நடத்தும் நாடு என்ற அடிப்படையில் ஐந்து முறை உலக சாம்பியன் பிரேசிலுக்கு நேரடியாக பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தது. மீதமுள்ள 31 இடங்களுக்கு நடப்பு சாம்பியன் ஸ்பெயின் உள்ளிட்ட 203 நாடுகள் போட்டியிட்டன.

கடந்த 2011, ஜூன் 15ல் தொடங்கிய இப்போட்டிகள், உலகின் பல இடங்களில் நடந்தன. கடந்த நவம்பர் 20ஆம் திகதியுடன் தகுதிச் சுற்று போட்டிகள் முடிந்து, 32 அணிகள் அறிவிக்கப்பட்டன. இதில், கால்பந்து உலகின் முன்னணி அணிகள் பலவும் எதிர்பார்க்கப்பட்டது போலவே தெரிவாகின.

ஆபிரிக்கா : அல்ஜீரியா, கமெரூன், கானா, நைஜீரியா, ஐவரிக்கோஸ்ட்

ஆசியா : ஜப்பான், தென்கொரியா, ஈரான், அவுஸ்திரேலியா (அவுஸ்திரேலியா)

ஐரோப்பா : பெல்ஜியம், குரோசியா, பிரான்ஸ், கிரேக்கம், நெதாலாந்து, ரஷ்யா, சுவிர்சாலாந்து, பொஸ்னியா, இங்கிலாந்து, ஜோமனி, இத்தாலி, போர்த்துக்கல், ஸ்பெயின்

வட மற்றும் மத்திய அமெரிக்கா : கொஸ்ராறிகா, கொண்டூரஸ், மெக்ஸிகோ, ஐக்கிய அமெரிக்கா

தென் அமெரிக்கா : ஆர்ஜென்ரனா, பிரேஸில், சிலி, கொலம்பியா, ஈகுவடோர், உருகுவே


## உலகக் கிண்ணத்திற்கு தகுதி

2014இல் பங்களாதேஷில் இடம்பெறவுள்ள உலக 20 -20 தொடரில் பங்குபற்றவுள்ள ஆறு மேலதிக அணிகள் தெரிவாகியுள்ளன. 16 அணிகள் கொண்ட இத்தொடரில் ஏற்கனவே ஐ.சி.சி. 20 - 20 தரவரிசையில் முதல் 10 இடங்களிலும் உள்ள அணிகள் தெரிவாகியிருந்தன. இந்நிலையில், ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம் பெற்ற தகுதிகாண் போட்டிகளின் முடிவில், ஹொங் கொங், நெதரலாந்து, அயர்லாந்து, ஆப்கானிஸ்தான், நேபாளம், ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய அணிகள் உலக கிண்ணத்திற்காக தெரிவாகின.

இவ்வணிகளுடன் தரவரிசையில் இறுதி இரண்டு இடங்களிலும் உள்ள பங்களாதேஷ், சிம்பாவே அணிகளும் சேர்க்கப்பட்டு இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு உலக 20 - 20 தொடரில் முதல்சுற்று போட்டிகள் நடைபெறும். அதிலிருந்து வெற்றி பெறும் இரண்டு அணிகள் இரண்டாம் சுற்றுக்கு முன்னேறும். கடந்த 2012ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற 20 -20 உலகக் கிண்ணத்திற்கு தகுதிகாண் சுற்றிலிருந்து அயாலாந்து மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் தெரிவாகின. முதல்சுற்று ஆட்டங்களில் பங்களாதேஷ், சிம்பாவே அணிகளும் வெளயேறி விட டாப்-8 அணிகள் மட்டுமே இரண்டாம் சுற்றில் மோதின.

ஆனால், அடுத்த வருடம் போட்டிகள் பங்களாதேஷில் இடம்பெறுவதால் அவ்வணியையும் இரண்டாம் சுற்றில் இடம்பெறச்செய்யும் முகமாக டாப்-10 அணிகள் இரண்டாம் சுற்றில் மோதவுள்ளன. எனவே, முதல் சுற்று ஆட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் அணிகளில் ஒன்று பாகிஸ்தான், அவுஸ்ரேலியா, இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள் அடங்கிய குழு 1 இலும், மற்றையது இங்கிலாந்து, நியுசிலாந்து, தென்னாபிரிக்காக, இலங்கை அணிகள் அடங்கிய குழு 2 இலும் போட்டிகளில் பங்குபற்றும்.


ஆர். அபிலாஷ்



# ரஜினியும் தமிழ்ச் சமூகவியலும்

பகுதி 2

ரஜினியின் தொன்மத்தில் உள்ள இன்னொரு முரண்பாடு குடும்பம். அவரது வெற்றிப்படங்களில் குடும்பத்தோடு தீவிரமாக ஒட்டுறவாடுபவராகத் தான் வருகிறார். எல்லாப் பெரிய பிரச்சினைகளும் குடும்பத்தில் இருந்துதான் ஆரம்பிக்கின்றன. ஆனால் குடும்ப உறவுகளின் அநிச்சயம், வஞ்சகம், மேலோட்டத் தன்மை ஆகியவை பற்றி சதா வருந்துகிறவராகவும் வருகிறார். வில்லனை விட ரஜினியை அதிகம் நோகடிப்பது, துன்புறுத்துவது, மார்க் அன்ரனி போன்று (பாட்ஷா படத்தில் வில்லன் பாத்திரத்தின் பெயர்) கத்திகளை அவர் மீது சொருகுவது குடும்ப உறவுகளாகத்தான் இருக்கிறார்கள். வீட்டுக் கோபத்தை வெளியே காட்டுபவர் போலத் தான் ரஜினியும் ஏதோ ஒரு வில்லனை இறுதியில் துவைத்தெடுக்கிறார். இதுவும் நம் கதைதான். உலகத்தைப் பற்றியும் சமூகத்தைப் பற்றியும் சதா கவலைப்படுகிறவர்கள் நாம். ஆனால் வாசற்படியைத் தாண்டிய எந்தப் பிரச்சினைகளுக்கும் நாம் தீர்வு தேடுவதோ அக்கறை காட்டுவதோயில்லை. இந்த முரண்பாடு நம் சமூகத்தில் ஆழமாக வேரூன்றியது. இவ்வளவு அரசியல் கட்டுரைகள், வாதங்கள், இணைய அரட்டைகள், சினிமாவுக்கு அடுத்தபடியாய் நாம் அதிகம் ஈடுபடுவது அரசியல் அரட்டையில் தான். ஆனால் நம்மை விட படிப்பறிவும் முன்னேற்றமும் குறைந்த நாடுகளில் கூட அடிக்கடி சமூகப் போராட்டங்கள் வெடிக்கின்றன. ஆனால் தமிழகத் தமிழர்கள் ஒரு பொதுப்பிரச்சினைக்காக துருக்கியர், வங்கதேசத்தினர் போல் போராடியதாய் வரலாறு இல்லை. இந்திய சுதந்திரப் போராட்டத்தையும் கூட சாமியார் எனப் பொதுமக்களிடையே நம்பப்பட்ட ஒருவரால், சாதி அடுக்குநிலையை அசைக்க விரும்பாத ஒருவரால் பொது எதிரி ஒருவர் மீது எல்லாக் கோபங்களையும் குவித்து தான் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. வெளியே ஆயிரம் பேர் செத்தாலும் நான்கு சுவர்களுக்குள் நாமும் குடும்பமும் நம் சாதியினரும் மட்டும் பத்திரமாக இருந்தால் போதும் என நினைப்பதே தமிழக மனநிலை. தமிழகம் என்பது தனிமனிதர்கள் வாழும் இடம் அல்ல. சிறுகச் சிறுக சிதறிய கோடி குடும்பங்கள் வாழும் இடம். இந்தக் குடும்பங்களை வேறு அரசியல் குடும்பங்கள் ஆட்சி புரிகின்றன. இந்தக் குடும்பங்கள் தம் அடுத்த நீட்சியான சாதியோடு மட்டும் தான் தம்மைப் பிணைத்துக் கொள்ளும், அடையாளப்படுத்தும். இந்தளவுக்குக் குடும்பப்பாங்கான தமிழர்களினதும் கணிசமான துன்பங்களும் இயல்பாக குடும்பங்களில் இருந்து தான் வருகின்றன. பரஸ்பரம் காயப்படுத்துவது நம் ஜனநாயகமற்ற இறுக்கமான உறவுகளிடையே மிக மிக சகஜம். வேறு எந்த சமூகத்தையும் விட நாம் அம்மா, அப்பா, தங்கை, தம்பிகளுக்கு - அதிகமான பாசத்தையும், மரியாதையையும் அள்ளி வழங்குகிறோம். ஆனால் எந்த அம்மா, அப்பா, தங்கை, தம்பி களிடம் பேசிப் பாருங் கள், - நம்மைப் பற்றிய ஆயிரம் புகார்களும், கோபங்களும் அவர்களிடம் இருக்கும். குடும்பத்தைக் கரையேற்ற நகரத்தில் தங்கி சொற்பமான வருமானத்தில் வாழ்ந்து காசு சேமிக்கிற எத்தனையோ பேரை அறிவேன். அதுபோன்றே பிள்ளைகளுக்காக எல்லா சுகங்களையும் தியாகம் செய்ய முனைகிற பெற்றோர்களும். சிறு வயதில் அம்மா என்னை ரியூசனுக்கும் பல இடங்களுக்கும் தூக்கிச் சுமந்து போவாள். என் பெற்றோர்கள் தம் ஆயுளின் கால்வாசியை என்னைக் குறித்த கண்ணீரிலேயே கரைந்திருப்பார்கள். குறிப்பாக, தமிழர்களுக்கு இந்தக் குடும்ப மென்னுணர்வு மிக மிக அதிகம். ஆனால் எல்லா மிகையான அன்பும் ஆழத்தில் கசப்பைத்தான் சுரக்கும். அன்பை இவ்வளவு உக்கிரமாகக் கையாள்வது ஒரு கைப்பிடி இல்லாத கத்தியைக் கொண்டு வெட்டுவதைப் போன்றது. இதனால்தான் நம் வீடுகள் போர்க்களங்களைப் போல் இருக்கின்றன. கட்டில், கதிரை, மேசைகளிடையே சடலங்களை மறைத்தபடி வீட்டை அப்பழுக்கின்றி வைத்தபடி சகஜமாக வாழ்க்கையைத் தொடர்ந்தபடி இருப்போம். ஆனால் அணுக்கமாகச் சென்று விசாரித்தால் உற்ற உறவுகள் தம்மை மிக மோசமாகக் காயப்படுத்திய ஆயிரம் கதைகள் அவர்களிடம் இருக்கும்.



(இன்னும் வளரும்)







### அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

இந்த வாரம், உங்கள் ராசிநாதன் செவ்வாய், ஆறாம் இடத்தில் அனுகூலமாக உள்ளார். புதன் கூடுதல் அளவிலான நற்பலன் தருகிறார். கடந்த கால நற்செயல்களினால் மனதில் நிம்மதியும், பெருமிதமும் நிறைந்திருக்கும். புதிய பணிகளை உத்வேகத்துடன் மேற்கொள்வீர்கள். இல்லறத்துணையின் கருத்துக்கு, உரிய முக்கியத்துவம் தருவது அவசியம். தொழிலில் கூடுதல் மூலதனம் தேவைப்படும். பணியாளர்கள், சகபணியாளர்களிடம் நிதானித்து பேசுவது, நட்பு பாதுகாக்க உதவும்.




### கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

இந்த வாரம், உங்கள் ராசிநாதன் சுக்கிரன், ஒன்பதாம் இடத்தில் அனுகூலமாக உள்ளார். குரு, சனி, ராகு கூடுதல் நற்பலன் தருகின்றனர். உங்களிடம் நல் அன்பு பாராட்டுகிற உறவினர், தன் வீட்டு சுப நிகழ்ச்சிக்கு அழைத்திடுவர். குடும்பத் தேவைகளை தாராள பணச்செலவில் பூர்த்தி செய்வீர்கள். கூடுதல் சொத்து வாங்க நல்யோகம் உண்டு. இல்லறத் துணையின் அன்பு, பாசத்தினால் மகிழ்ச்சி அடைவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து, உபரி பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கும்.




### மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

இந்த வாரம், உங்கள் ராசிநாதன், புதன் ஆறாம் இடத்தில் சூரியனுடன் அனுகூல அமர்வில் உள்ளார். சுக்கிரன், கேது கூடுதலாக நற்பலன் தருகின்றனர். மனதில் உருவாகிற சஞ்சலம் நிவர்த்தி செய்து, பணிகளில் ஆர்வம் கொள்வீர்கள். அனுபவ ஞானம், புதிய செயல் நிறைவேற துணை நின்று உதவும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். அரசியல்வாதிகள், அரசு தொடர்பான அனுகூலம் பெறுகிற நன்மை உண்டு. பெண்கள் குடும்பத்தின் எதிர்கால நலன் சிறக்க, கணவரிடம் நல் ஆலோசனை வழங்குவர்.




### புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

இந்த வாரம் உங்கள் ராசிநாதன் சந்திரன், வார பிற்பகுதி நாட்களில், சிறப்பான பலன்களை தருகிறார். செவ்வாய் மூன்றாம் இடத்தில் அமர்வு பெற்று, உங்கள் மனதில் திடமான சிந்தனையும், செயலில் அதிக நன்மையையும் வழங்குகின்றனர். பணச்செலவில் சிக்கனம் பின்பற்றுவீர்கள். உழைப்புக்கு தகுந்த ஓய்வு, உடல் நலம் பாதுகாக்க உதவும். இல்லறத்துணையிடம், தேவையற்ற விவாதம் பேசவேண்டாம். தொழில், வியாபாரத்தில் உருவாகிற மந்த நிலையை, ஓரளவு சரி செய்வீர்கள். பணியாளர்கள், நிர்வாகத்தின் வழிகாட்டுதலை கவனமுடன் பின்பற்ற வேண்டும்.




### மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்

இந்த வாரம் உங்கள் ராசிநாதன், சூரியன் நான்காம் இடத்தில் அனகூல குறைவாக உள்ளார். குரு, சனி, ராகு, புதன் தாராளமாக நற்பலன் வழங்குகின்றனர். உறவினர்களிடம், உங்கள் மீது இருந்த கருத்து வேறுபாடு சரி செய்வீர்கள். வெளியூர் பயணம், சில நன்மையை பெற்றுத் தரும். சமூக நிகழ்வுகளினால், புதிய அனுபவம் கிடைக்கும். இல்லறத்துணை மற்றும் அஷீமுகம் இல்லாதவரிடம், நிதானித்து பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள்.




### உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்

இந்த வாரம், உங்கள் ராசிநாதன் புதன், மூன்றாம் இடத்தில் அனுகூலக் குறைவாக உள்ளார். சூரியன், சுக்கிரன் நற்பலன் தருகின்றனர். கூடுதல் பணவரவு கிடைக்க, புதிய வாய்ப்பு உருவாகும். உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவு வகையை, உண்ண வேண்டாம். சொத்து விஷயத்தில் கிடைக்கிற பணவரவு அதிகரிக்கும். இல்லறத்துணை விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரம் அபிவிருத்தி பெற, சில சீர்திருத்தம் செய்வீர்கள். பணியாளர்களுக்கு, சலுகை பெற அனுகூலம் உண்டு.




### சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

இந்த வாரம், உங்கள் ராசிநாதன் சுக்கிரன், நான்காம் இடத்தில் அனுகூலமாக உள்ளார். குருவின் ஐந்தாம் பார்வை ராசியில் பதிந்து, பல்வேறு நன்மையை பெற உதவுகிறது. வாழ்வில் நெருக்குதல் தந்த சில சிரமம், வந்த சுவடு தெரியாமல் மறைந்து போகும். உடன் பிறந்தவர்களின் நல்அன்பு, பாசம் பெறுவீர்கள். சமூகத்தில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். புத்திரர் உடல்நலத்தில், தகுந்த கவனம் வேண்டும். பணக்கடனில் ஒரு பகுதி செலுத்துவீர்கள். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர், உதவிகரமாக செயல்படுவர். தொழில், வியாபாரத்தில்



### விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

இந்த வாரம், உங்கள் ராசிநாதன் செவ்வாய், பதினொன்றாம் இடமான ஆதாய ஸ்தானத்தில், அனுகூலமாக உள்ளார். சுக்கிரன், கேது நற்பலன் தருகின்றனர். சத்து நிறைந்த காலமுறை உணவுப் பழக்கம், உடல்நல ஆரோக்கியம் பாதுகாக்கும். இல்லறத்துணை, உங்களின் சாந்த குணம் நிறைந்த மனதை பாராட்டுவர். தொழில்,வியாபாரத்தில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். பணியாளர்கள், உழைப்புக்கேற்ற ஓய்வை பின்பற்றுவதால், உடல்நலம் சீராகும். பெண்கள், பிரார்த்தனை நிறைவேறி, தெய்வ வழிபாடு நடத்துவர்.



### மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்

இந்த வாரம், உங்கள் ராசிநாதன் குரு, ஏழாம் இட அமர்வில் முழுஅளவிலான நற்பலன் வழங்குகிறார். சுக்கிரன், சனி, ராகு சிறப்பான பலன் தருகின்றனர். பேசுவதில் வசீகரமும், கவித்துவமும் கலந்திருக்கும். சமூகப் பணியிலும் ஈடுபாடு கொள்வீர்கள். உறவினர் வருகையால், வீட்டில் மகிழ்ச்சி நிலவும். உடல்நல ஆரோக்கியம் சீராக இருக்கும். இல்லறத் துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். குடும்ப பெண்கள், கணவரின் நல்அன்பு, சீரான பணவசதி கிடைத்து சந்தோஷ வாழ்வு நடத்துவர். மாணவர்கள் புதிய பயிற்சியினால், படிப்பில் முன்னேற்றம் காண்பர்.




### உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்

இந்த வாரம், உங்கள் ராசிநாதன், சனி, சுக்கிரனின் வீட்டிலும், ராசியில் சுக்கிரனும், பரிவர்த்தனையாக உள்ளனர். லாப ஸ்தானத்தில் சூரியன், புதன் புதஆதித்ய யோகபலன் தரும் வகையில் உள்ளனர். இறையருள் பெற்றவரின் அன்பு, ஆசி கிடைக்கும். வாழ்வில் செல்வ வளம் அதிகரிக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும். எதிரி, உங்கள் மீது, நல்ல எண்ணம் கொள்ள [illegible] உருவாகும். இல்லறத் துணையுடன், தொழில், வியாபாரத்தில் மந்த நிலை சரி செய்ய, [illegible] பின்பற்றுவீர்கள். மாணவர்கள், ஞாபகத்திறன் வளர்ப்பதால், எதிர்பார்த்த தேர்ச்சி [illegible] பெறலாம்.




### அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்

இந்தவாரம், உங்கள் ராசிக்கு சனி, செவ்வாய், ராகு தவிர, அத்தனை கிரகங்களும், அனுகூல பலன்களை அள்ளித்தருகின்றனர். சிலர் வீடு வாங்க நல்யோகம் உண்டு. புத்திரர் அறிவாற்றலில் சிறந்து விளங்குவர். வாழ்வியல் நடைமுறை சுமுகமாக இருக்கும். இல்லறத் துணையின் கூடுதல் அன்பு, பாசம் கிடைத்து மனம் மகிழ்வீர்கள். தொழில், வியாபாரம் அபரிமிதமாக செழித்து வளரும். அரசியல்வாதிகளுக்கு, எதிர்பார்த்த பதவி, சலுகை கிடைக்கும். குடும்ப பெண்கள், உறவினர் வீட்டில் மங்கல நிகழ்ச்சி நடத்த, உறுதுணையாக செயல்படுவீர்கள்.




### பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

இந்த வாரம், உங்கள் ராசிக்கு ஆதாய ஸ்தானத்தில் உள்ள சுக்கிரன், தினகதி சுழற்சி கிரகம் சந்திரன் மட்டுமே, நற்பலன் தருகின்றனர். இதனால், எந்த செயலிலும், முன்யோசனையுடன் ஈடுபடவேண்டும். உடன் பிறந்த வர்களின் உதவி, ஓரளவு கிடைக்கும். இல்லறத் துணை கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரம் தாமதகதியில் இயங்கும். பணச்செலவில் சிக்கனம் பின்பற்றுவீர்கள். பணியாளர்கள், நற்பெயரை பாதுகாப்பதில் கூடுதல் அக்கறை வேண்டும். குடும்ப பெண்கள், சேமிப்பு பணத்தை சிறுசெலவுகளுக்கு பயன்படுத்துவர். மாணவர்கள் விளையாட்டில் உரிய பாதுகாப்புடன் ஈடுபடுவது நல்லது.

● ஒளண்யன்



# இருளின் கதவைத் திறந்தவன்

29

அமெரிக்க இராணுவ இரகசியங்களை அனுமதியின்றி வெளியிட்டு, நாட்டின் இறையாண்மைக்குக் குந்தகம் விளைவித்த குற்றச்சாட்டின் பெயரில் பிராட்லே ஒரு அதிகாலைப் பொழுதில் கைது செய்யப்பட்டார். எனி னும் உளவாடுவதில் மிகவும் கெட்டித் தனம் மிக்கவராகக் கருதப்படு பிராட்லே, கண்ணுக்குத் தெரியாத நண்பன் ஒருவனை நம்பி, தன் வாழ்வுக்கே உலைவைக்கக்கூடிய இரகசியத்தை ஏன் சொன்னார் என்பது மட்டும் எவருக்குமே இதுவரை புரியாத புதிராகவே இருக்கின்றது. ஏதோஒரு புளுகத்தில் பிராட்லே கொடி விட்ட இரகசியங்களால் அவ ரது வாழ்வே நரகத்துக்குள் தள்ளப்பட்டுவிட்டது.

யூலியனுக்கு இதுவரையும் இரகசியங்களை நீதானே வழங்கினாய்? அவனுக்கு வேறென்ன இரகசியங் களைக் கொடுத்திருக்கிறாய்? யூலியனின் வற்புறுத்தலால் தானே அவனுக்கு இரகசியங்களை விற்றாய்? என்பன போன்ற கடுமையான - யூலியனையும், பிராட்லேயையும் மாட்டிவிடக் கூடிய- கேள்விக்கொக்கிகள் பிராட்லேயிடம் இடைவிடாது வீசப்பட்டது. ஆனால் ஒருமுறை தவறிழைத்திருந்த பிராட்லே மறுபடியும் தவறிழைக் கும் முட்டாளல்லவே. தான் சிக்குப்பட் டாலும் பரவாயில்லை. யூலியனை யாவது காப்பாற்ற அவன் முடிவெடுத் தான்.

எனக்கும் யூலியனுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. விக்கிலீக்ஸ் இணையத்தின் நிறுவுநர் என்பது மட்டுமே எனக்குத் தெரியும்.

அதைவிட வேறெந்தத் தனிப்பட்ட தொடர்புகளும் கிடையாது. அத்தோடு நான் எனக்கு எதேச்சையாகக் கிடைத்த சில தகவல்களையே விக்கிலீக்ஸுக்கு அனுப்பி வைத்தேன். எந்தவொரு இரகசியத்தையும் நான் திட்டமிட்டுத் திருடவில்லை. யூலியனின் நிர்ப்பந்தத்தினால் நான் இரகசியங்களைத் திருடவில்லை.

இதையே கிளிப்பிள்ளைபோல பிராட்லே திருப்பித்திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தான். விசாரித்தவர்களுக்கு நாக்குத் தொங்கியதுதான் மிச்சம். பிராட்லேயிடமிருந்து வேறெந்த இரகசியத்தையும் பிடுங்க முடியவில்லை. சவூதியில் இருந்த பிராட்லே விசேட விமானம் மூலம் அமெரிக்காவின் வெர்ஜீனியாவில் உள்ள தனிமைச் சிறைக்குள் தள்ளப்பட்டான்.

எல்லாத் தண்டனைகளையும் விடவும் தனிமைச்சிறை என்பது கொடுமையான விடயம். நாள் ஒன்றுக்கு ஒரு மணித்தியாலம் மட்டுமே உணவுக்காகவும் மற்ற விஷயங்களுக்காவும் பிராட்லே மென்னிங் சிறை அதிகாரிகளைப் பார்க்க முடியும். மற்ற 23 மணித்தியாலங்களும் மிகக்குறுகலான அறையில் தனிமையில் கழிக்க வேண்டும். அவனுக்குப் படுப்பதற்குப் படுக்கையோ, தலையணையோ எதுவும் வழங்கப்படவில்லை. சிறையில் உடற்பயிற்சிகள் எதுவும் செய்யக் கூடாது என்றும் கட்டளை. வெளியாள்கள் யாரையும் சந்திக்க முடியாத, வெளியுலக நிகழ்வுகள் எதையும் அறிந்துகொள்ள முடியாத (தொலைக்காட்சி, பத்திரிகைகள் எது வுமே கிடையாது) மிகக் கொடுமை யான இந்தச் சூழலின் காரணமாக அவனது மனநிலை பாதிக்கப்பட்டுவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.


ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் அமெரிக்காவில் கிடைக்கக்கூடிய பேச்சு, சுதந்திர உரிமைகளை இராணுவ அதிகாரி ஒருவர் கோர முடியாது என்பதால் இனி அவரது வாழ்நாள் முழுவதும் சிறையில் கழிவதற்கான வாய்ப்புகளே அதிகம். தன்னுடைய ஆயுள் முழுதும் வெளியுலகினைப் பற்றி எதுவுமே தெரியாமல், எவ்வித பொழுது போக்குமின்றி, பேச்சுத்துணைக்குக் கூட சகமனிதர்கள் இன்றி அடைபட்டுக் கிடக்கும் நரகம் பிராட்லேக்கு விதிக்கப்பட்டுள்ளது.

பிராட்லேயைக் கைது செய்தது அமெரிக்காவைப் பொறுத்தவரை விக்கிலீக்ஸுக்கு எதிரான அறிவிக்கப்படாத யுத்தத்தில் கிடைத்த மகத்தான வெற்றியாக இருந்தாலும் கூட, பிராட்லேயை வைத்து யூலியனைச் சிக்கவைக்கும் அதன் முயற்சிகள் ஏமாற்றத்திலேயே முடிவடைந்துள்ளன. அதேநேரம் யூலியனின் கோபத்தையும் பிராட்லேயின் கைது தூண்டி விட்டது. காட்டாறு மூர்க்கத்துடன் பாயத் தொடங்கியது. அதன் வேகத்தில் தேவையில்லாமல் யூலியனைச் சீண்டி விட்டோமோ? என்று கூட அமெரிக்கா யோசிக்குமளவுக்கு அதிரடிகள் அடுக்கடுக்காக யூலியனால் அரங்கேற்றப்பட்டன.

(திரைகள் இன்னும் திறக்கும்)

## ஹாய்! செல்லப்பா!!

### எழுதுவது......



ஒவ்வொரு வரவு செலவுத் திட்டத்தையும் ஆவலோடு எதிர் பார்த்திருக்கின்ற ஒரு தொகுதியினர் இந்தப் பென்சனியர்மார் ஆகும்.

வயதுபோனதுகள், எதிர்கொள்கின்ற சவால்களின் மத்தியில் ஓரளவு அவர்களது முகத்தில் பிரகாசத்தைத் தோற்றுவிப்பது, இந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்படுகின்ற வாழ்க்கைப்படி நிவாரணம் ஆகும்.

வயது போறது என்கின்ற செயலொழுங்கில், உயிரியல், மனவெழுச்சி, ஞாபக சக்தி, சமூக மற்றும், ஆன்மீக சிந்தனைகள் உள்ளடங்கும்.

உடல் நலம் குன்றல், பாகுபாடுகள், சுதந்திரத்தை இழத்தல் எனப் பல சவால்களை அவர்கள் எதிர்கொள்வது வழமை. இருந்தும் சிலர் சுய நிறைவுடன் இருப்பர். அவர்களைப் பார்த்தால், பொருளாதார வசதி உள்ளமையாலேயே அவர்கள், குனிந்த முதுகென்றாலும் நிமிர்ந்த நிலையில் நிற்பதனைக் காணலாம்.

ஏனையோருக்கு ஒரு பாதுகாப்பினை இத்தகைய பென்சன் உயர்வுதான், அவர்களுக்கு வழங்கும்.

இந்த வாழ்க்கைச் செலவு உயர்வில் வழங்கப்படும், 350.00 ரூபா, பென்சனியர்மாரை ஒரு இழிவுப் பார்வையுடன் பார்க்கவே வைக்கும்.

தாத்தா கின்டர் ஜோய், அல்லது வொண்டர் கோன் வாங்கித் தாங்கோ என்று கேட்டால், தாத்தா தன்ரை வயிற்றைப் பட்டினி போட்டும், உள்ள பேரப்பிள்ளையளுக்கு ஒரு மாதத்திலை தலா ஒன்று கூட வாங்கிக் கொடுக்க அந்தப் பணம் போதாது. பணிஸ் வாங்கிக் கொடுக்கக் கூட முடியாது. பிறகு என்னெண்டு பிள்ளையள் பேரப்பிள்ளையள் எங்களை மதிக்குங்கள். தந்ததை தராமலே விட்டிருக்கலாம் போல இருக்குது.

# இன்னொரு நாயகன்



சந்தானம், சிவகார்த்தி கேயன் ஆகியோரைத் தொடர்ந்து இன்னொரு வரும் சின்னத்திரையில் இருந்து வெள்ளித் திரைக்கு வந்திருக்கிறார். 'அது இது எது' நிகழ்ச்சித் தொகுப்பாளர் ஆனந்த் தான் அவர்.

இவருக்கு என்று ஒரு தனி ரசிகர் கூட்டமே உருவாகியுள்ளது.

'வானவராயன் வல்லவராயன்' படத்தில் கிருஷ்ணா வானவராயனாக நடிக்கிறார்.

கிருஷ்ணாவின் தம்பி வல்லவராயனாக மா.கா.பா. ஆனந்த் நடிக்கிறார்.

இதையடுத்து, 'பஞ்சுமிட்டாய்' என்ற படத்தில் நாயகனாக தனி ஆவர்த்தனம் செய்யவுள்ளார் மா.கா.பா. ஆனந்த்.

இவருக்கு ஜோடியாக மலையாள நடிகை ஒருவர் அறிமுகம் ஆகிறார்.

புதுமுக இயக்குநர் இயக்கும் இந்தப்படத்தில் வித்யூலேகா, பாண்டியராஜன் ஆகியோரும் நடிக்கின்றனர்.

இயக்குநர் பாண்டிராஜ்தான் முதலில் மா.கா.பாவை அறிமுகப்படுத்தலாம் என்று நினைத்தாராம். அதற்குள் பல வாய்ப்புகள் வந்துவிட்டனவாம்.

# ருவிட்டருக்குப் பூட்டு



நடிகர், நடிகைகள் ருவிட்டரில் தாங்கள் நடிக்கும் படங்கள் சம்பந்தப்பட்ட விவரங்களை உடனுக்குடன் வெளியிட்டு வருகின்றனர்.

சமந்தாவும் இதுபோல் ருவிட்டர் மூலம் ரசி கர்களுடன் தொடர்பு வைத்துள்ளார். இந்த நிலையில் தற்போது தெலுங்கில் நடிக்க உள்ள ''மனம்'படத்தில் தனது கதாபாத்திரம் என்ன என்பதை அவர் ருவிட்டரில் வெளியிட்டுள்ளார்.

இதனால் இப்படத்தை தயாரித்து, கதாநாயகனாகவும் நடிக்கும் நாகர்ஜுனா அதிர்ச்சியாகி சமந்தாவை தொடர்பு கொண்டு கதாபாத்திரம் பற்றிய விவரத்தை எப்படி வெளியி என்று கேட்டு கண்டித்தாராம்

மேலும் படப்பிடிப்பு முடியும் தனது அனுமதியில்லாமல் ப சம்பந்தமான எந்த விஷயத்த ருவிட்டரில் வெளியிடக்கூட

# அஜித்துக்கு அறுவை

காலில் ஏற்பட்ட காயம் காரணமாக சத்திர சிகிச்சை செய்து ஓய்வெடுக்கப்போகிறாராம் அஜித்.

விஷ்ணுவர்தன் இயக்கத்தில் வெளியான ஆரம்பம் படத்தில் 'டூப்' போடாமல் நடித்தார் அஜித். படத்தில் ஆர்யா கார் ஓட் நின்று வருவார். அந்த காட்சியை படமாக்கும்போது தான் அ ஏற்பட்டது. அஜித்தை பரிசோதித்த மருத்துவர்கள் அவருக்கு செய்ய வேண்டும் என்று தெரிவித்தனர்.

ஆனால் அவரோ உடனே அறுவை சிகிச்சை செய்ய மறுத்து ''ஆரம்பம், வீரம் படங்களில் நடிக்க ஒப்புக் கொண்டுள்ளே சிகிச்சை செய்து கொண்டால் தயாரிப்பாளர்களுக்கு பாதிப் படங்களை முடித்துவிட்டு செய்து கொள்கிறேன் ''என்று தெ

ஆரம்பம் வெளியாகிவிட்டது. வீரம் பொங்கலுக்கு தயாரா தொடர்ந்து அவர் இந்த மாத இறுதியில் சென்னையில் உள் மருத்துமனையில் அறுவை சிகிச்சை செய்யவுள்ளார்.

அறுவை சிகிச்சைக்குப் பிறகு 2 மாதங்கள் ஓய்வெடுத்துவி மாதம் 15ஆம் தேதி கௌதம் மேனன் படத்தின் படப்பிடிப்பி கொள்ளவிருக்கிறார் அஜித்.

# அடை மழையில் விக்ரம் பிரபு



அறிமுகமான 'கும்கி' படத்தில் நடித்து நல்ல நடிகரெனப் பெயர் வாங்கினார் விக்ரம் பிரபு.

தற்போது விக்ரம் பிரபு நடித்த 'இவன் வேற மாதிரி ' டிசம்பர் 13ஆம் திகதி வெளியாகிறது. 'எங்கேயும் எப்போதும்' படத்தை இயக்கிய சரவணனின் அடுத்த படம் என்பதால் இந்தப் படத்துக்கு அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தப் படத்தை அடுத்து விக்ரம் பிரபு இயக்குநர் ஆனந்த் ஷங்கர் இயக்கும் 'அரிமா நம்பி' என்ற படத்தில் ப்ரியா ஆனந்துடன் நடிக்கிறார்.

'தூங்கா நகரம்' கௌரவ் இயக்கும் 'சிகரம் தொடு' படத்தில் மோனல் கஜ்ஜாருடன் டூயட் பாடிக்கொண்டிருக்கும் விக்ரம் பிரபுவுக்கு இன்னும் பட வாய்ப்புகள் குவிகின்றன.

'கழுகு', 'சிவப்பு' படங்களை இயக்கிய சத்யசிவா அடுத்து இயக்கும் 'தலப்பாகட்டி' படத்தில் விக்ரம் பிரபுதான் ஹீரோ. 'ஹரிதாஸ்' இயக்குநர் ஜி.என்.ஆர் குமாரவேலன் இயக்கும் அடுத்த படத்திலும், எழில் இயக்கும் அடுத்த படத்திலும் விக்ரம் பிரபு நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார்.

தொடர்ந்து அதிகரித்து வரும் வாய்ப்புகளால் உற்சாகத்தில் இருக்கிறார் விக்ரம் பிரபு. ஒப்பந்தமான படங்களை விரைவில் முடித்துக் கொடுக்க வேண்டும் என்பதால் விறு விறு வேகத்தில் படப்பிடிப்புகளில் ஓய்வு ஒழிச்சலின்றிப் பங்கேற்று வருகிறார்.

# வாடிவாசல்



'முன்தினம் பார்த்தேனே', 'தடையறத் தாக்க' படங்களை இயக்கிய மகிழ்திருமேனி தற்போது புதிய படம் ஒன்றை இயக்கவுள்ளார். இதில் ஆர்யாவும், ஸ்ருதிஹாசனும் நடிக்கிறார்கள். படத்துக்கு 'வாடி வாசல்' என்று தலைப்பு வைத்திருக்கிறார்.

'வாடிவாசல்' என்பது ஜல்லிக்கட்டின் போது காளைகளை ஒவ்வொன்றாக அவிழ்த்து விடும் இடமாகும். அதிரடிகள் நிறைந்த பொழுதுபோக்கு படமாக இது உருவாக உள்ளது. அத்துடன் நடுத்தர குடும்பத்தினரின் வாழ்க்கையை இது பிரதிபலிப்பதாக இருக்குமாம்.

'நான் அவன் இல்லை', 'அஞ்சாதே', 'மாப்பிள்ளை', 'போடா போடி' ஆகிய படங்களை தயாரித்த ஹித்தேஷ் ஜபக் இப்படத்தைத் தயாரிக்கிறார்.'வாடி வாசல்' படப்பிடிப்பு விரைவில் ஆரம்பமாக உள்ளது.





ரத்தை எப்படி வெளியிடலாம்
கேட்டு கண்டித்தாராம்.
ும் படப்பிடிப்பு முடியும்வரை
அனுமதியில்லாமல் படம்
தமான எந்த விஷயத்தையும்
டரில் வெளியிடக்கூடாது என்று

சமந்தாவுக்குத் தடை போட்டுள்ளார் நாகர்ஜூனா.

இதனால் ருவிட்டரில் கருத்துக்கள் பதிவு செய்வதை சமந்தா தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளார்.

## அறுவைச்சிகிச்சை

சத்திர சிகிச்சை செய்து செய்து கொண்டு 2 மாதம்

ான ஆரம்பம் படத்தின் சண்டை காட்சி ஒன்றில்
த்தில் ஆர்யா கார் ஓட்ட அஜித் அதன் முன்னால்
மாக்கும்போது தான் அவரின் காலில் பலத்த காயம்
ருத்துவர்கள் அவருக்கு காலில் அறுவை சிகிச்சை
ார்.
ிகிச்சை செய்ய மறுத்துவிட்டார்.
ஒப்புக் கொண்டுள்ளேன். இந்நேரம் அறுவை
ப்பாளர்களுக்கு பாதிப்பு ஏற்படும். அதனால் அந்த
ாள்கிறேன் ''என்று தெரிவித்திருந்தார்.
பொங்கலுக்கு தாயாராகி வருகிறது. இதனைத்
ல் சென்னையில் உள்ள தனியார்
செய்யவுள்ளார்.
ங்கள் ஓய்வெடுத்துவிட்டு அதன் பிறகு பெப்ரவரி
படத்தின் படப்பிடிப்பில் கலந்து

ல்



# மம்மூட்டியோடு ஆடும் விஜய்



பொங்கல் ஜல்லிக்கட்டில் களமிறங்கவிருக்கும் ஜில்லா படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பில் தற்போது மும்முரமாக நடித்து வருகிறார் இளைய தளபதி விஜய். இதனைத் தொடர்ந்து ஏ.ஆர். முருகதாஸ் இயக்கும் படத்தில் நடிக்கவுள்ளார்.

தற்போது தமிழ்ச் சினிமாவில் இன்னொருகதை அடிபடுகிறது. மெகா ஸ்டார் மம்மூட்டியின் 'தி கேங்ஸ்டர்' என்ற மலையாளப் படத்தில் விஜய் நடனமாடப் போகிறார் என்ற செய்தியே அது.

மம்மூட்டி, ரீமா கல்லிங்கள் நடிக்கவிருக்கும் இந்தப்படத்தை 'சால்ட் அன் பேப்பர்', '22 பீமேல் கோட்டையம்' படங்களை நெறியாழ்கை செய்த ஆஷிக் அபு இயக்கவுள்ளார். இந்தப்படத்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் துவங்குகிறது.

தற்போது 'ஜில்லா' படத்தில் மலையாள சூப்பர் ஸ்டார் மோகன்லாலுடன் இளைய தளபதி நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீ திவ்யா கலகலப்பில்?



நாயகனாக நடித்துக்கொண்டு இருந்த சுந்தர்.சி மீண்டும் இயக்குநர் அடையாளத்தோடு களம் இறங்கிய படம் 'கலகலப்பு'.

விமல், அஞ்சலி, சிவா, ஓவியா நடித்த இந்தப்படம் நகைச்சுவையில் கலக்கி வசூலை அள்ளியது.சுந்தர்.சி யின் மதிப்பும் இதன் மூலம் உயர்ந்தது.

இப்போது திகில் நிறைந்த பேய்ப் படமாக 'அரண்மனை' என்ற படத்தைஅவர் இயக்கிக் கொண்டிருக்கிறார்.ஹன்சிகா, ஆண்ட்ரியா, லட்சுமிராய் ஆகியோர் இந்தப்படத்தில் நடிக்கின்றனர்.

இதற்கடுத்து 'கலகலப்பு -2' படத்தை எடுக்கத் திட்டமிட்டு இருக்கிறார் சுந்தர்.சி.

விமல், சிவா, ஓவியா என்று 'கலகலப்பு' படத்தில் நடித்தவர்களே இதிலும் நடிக்க இருக்கிறார்கள். அஞ்சலிக்குப் பதிலாக ஸ்ரீதிவ்யா நடிக்க வாய்ப்பு இருக்கிறதாம்.

ஸ்ரீதிவ்யா குடும்பப் பாங்கான பெண்ணாகவும் கவர்ச்சியான பெண்ணாகவும் நடிக்கக் கூடியவர். இதனால் அவர் விரைவில் தமிழ்ச் சினிமாவில் முன்னணி இடத்தைப் பிடித்துவிடுவார் என்று சொல்லப்படுகிறது.

ஸ்ரீதிவ்யா இப்போது 'பென்சில்', 'ஈட்டி', 'காட்டு மல்லி', 'நகர்புறம்' ஆகிய படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

ஆனால், 'கலகலப்பு 2' படத்தில் ஸ்ரீதிவ்யா நடிப்பது குறித்து அதிகாரப்பூர்வமாக இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

# வேலைவாய்ப்பை உறுதி செய்வது எப்படி?

நான் வருங்காலத்துக்குப் பரிந்துரைக்க விரும்புவது - ஒட்டுமொத்த மேம் பாடு - முழுமையான அபிவிருத்தி, மேம்பாட்டுக்கு என்று தனியாக ஒரு உபதலைவர் பதவியை உருவாக்க வேண்டும். உருப்படியான யோசனைகள் கூறுகின்ற பல்வேறு தரப்பினரும் அவர் தலைமையில் பணியாற்றுமாறு செய்ய வேண்டும். அந்தப் பிரிவினர் கம்பெனியின் ஒவ்வொரு நுணுக்கமான அம்சங்களையும் கவனித்து- மூலப்பொருள்களை கொள்முதல் செய்வதில் இருந்து, வாடிக்கையாளர்களின் திருப்தியை சம்பாதிப்பது வரை ஒவ்வொரு அம்சத்தையும் நுணுக்கமாகக் கவனித்து அவற்றை மேம்படுத்த அந்த சிறப்புப் பிரிவினர் வழிகாண வேண்டும்.

இதற்கிடையில் உங்களுடைய வேலையை உறுதி செய்து கொள்ளவும், சீக்கிரம் செல்வந்தராகிவிடவும் நீங்களே ஒரு தனிநபர் முழு மேம்பாட்டு யோசனை இலகுவாக இருக்க வேண்டும்.

எப்படி என்பதை இங்கே காணுங்கள்:

01. உங்கள் கம்பெனியின் உற்பத்திப் பொருள்கள்- மூலப்பொருள்கள் - வழிமுறைகள் - சேவைகள்- அமைப்புக்கள் - புதிய முயற்சிகள்- திட்டங்கள் இன்னும் இது போல அபிவிருத்தி தேவைப்படும் அம்சங்கள் அனைத்தையும் கொண்ட ஒரு பட்டியலைத் தயாரித்து விடுங்கள். ஏன் என்றால் எந்த அம்சமானாலும் அதை மேம்படுத்த முடியும்.

மிக முக்கியம். இதைச் செய்யும் போது உங்களுடைய சொந்த அறிவாற்றலைப் பயன்படுத்துங்கள். உங்களை அநாவசியமாக வெளிக்காட்டிக் கொள்ளாமல் எல்லாவற்றையும் நீங்கள் கூர்ந்து கவனித்து- பட்டியலைத் தயார் செய்யுங்கள். 'நான் இதை மேம்படுத்தப் போகிறேன், அதை அப்படிச் செய்யப் போகிறேன்' என்று பறைசாற்றிக்கொண்டு - கம்பெனியின் நடவடிக்கைகளிலும், மற்றவர்களுடைய வேலைகளிலும் மூக்கை நுழைத்துக் கொண்டு இருக்காதீர்கள். நீங்கள் இப்போது உபதலைவர் அல்ல என்பதை மறந்து விடாதீர்கள். எனவே அதுபோல நினைத்துக் கொண்டு நடந்து கொள்ளாதீர்கள். அப்படியெல்லாம் நடந்துகொண்டால் வெகுசீக்கிரம் கெட்ட பெயர் வாங்கி விடுவீர்கள். உங்களை வேலையில் இருந்தும் நீக்கி விடுவார்கள்.

உங்களை வெளிக்காட்டிக் கொள்ளாமல், அநாவசியமாகப் பேசாமல் இருங்கள். விரும்பத்தகாத கேள்விகளைக் கேட்காதீர்கள்: துருவித் துருவிக் கேட்காதீர்கள். எல்லாவற்றையும் விட 'நான் மேம்பாட்டுத் திட்டங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறேன்' என்று யாரிடமும் சொல்லாதீர்கள்.

உங்கள் கம்பெனியின் உற்பத்திப் பொருள்கள், மூலப்பொருள்கள், சேவைகள், அமைப்புக்கள், புதிய முயற்சிகள், திட்டங்கள், இவற்றைத் தனியாக அமர்ந்து பட்டியல் போட்டுக்கொள்ளுங்கள். கம்பெனியின் அலுவல்களில் அல்லது மற்றவர்களுடைய பணிகளில் குறுக்கிடாமல் இதைச்செய்யுங்கள். யாரையும் புண்படுத்தாமல் தனியாகச் சொந்த முறையில் நீங்கள் ஒரு பட்டியல் தயாரித்தால் அதுவே ஒரு ஆண்டுக்கு உங்கள் யோசனைகளை ஏற்கப்போதுமானதாக இருக்கும். எந்த ஒரு தொழில் அல்லது வர்த்தகமாகட்டும் - அபிவிருத்தி செய்ய வேண்டிய - மேம்படுத்த வேண்டிய அம்சங்களுக்கு கணக்கு வழக்கே இருக்காது.

61 மந்திரக் கேள்விகளை - நீங்கள் தயாரித்த பட்டியலில் உள்ள ஒவ்வொரு அம்சத்துடனும் பொருத்திப் பாருங்கள். ஒரு நேரத்தில் ஒரு அம்சத்துடனும் பொருத்திப் பாருங்கள். ஒரு நேரத்தில் ஒரு அம்சம் என்று வகைப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் உள்ளத்தில் மேம்பாட்டுக்கான யோசனைகள் பளிச்சிடுகிற அதே நேரத்தில், ஒரு கணம் கூட தாமதியாது அவற்றை எழுதி வைத்து விடுங்கள். நீங்கள் தயாரித்துள்ள பட்டியலில் உங்கள் கம்பெனி சம்பந்தப்பட்ட ஒரு அம்சத்தை எடுத்துக்கொள்ளுங்கள். ஒரு தடவைக்கு ஒரு அம்சம் என்கிற முறையில் எடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொன்றுக்கும் ஒரு வாரம் அல்லது அதற்கு மேலும் நாள்கள் ஆனாலும் சரி; உங்கள் கம்பெனியின் நடவடிக்கைகளில் எதை நீங்கள் மேம்படுத்த விரும்புகிறீர்களோ -அதில் ஒரு அம்சத்தை



எடுத்துக் கொண்டு நுணுக்கமாக பரீசிலனை செய்யுங்கள்.

இவ்வாறு உங்கள் உள்ளத்தில் உருவான யோசனைகள் உங்கள் கம்பெனிக்குப் பயன் தரும் என்று நீங்கள் நம்புகிறீர்கள் அல்லவா? அதனை உங்கள் கம்பெனியின் அதிபரிடம் அடக்கத்துடனும் மரியாதையுடனும் எடுத்துச் சொல்லுங்கள். வரம்பை மீறி நடப்பதாகவோ - கம்பனி அதிபரின் வெறுப்பை சம்பாதிக்கிற முறையிலோ நீங்கள் நடந்துகொள்ளக் கூடாது. அப்போது நீங்கள் மேலும் பயன்தருகிற வகையில் இருப்பதற்கான புகழையும் மதிப்பையும் அடைவீர்கள்.

மேம்பாட்டுக்கான எந்த ஒரு புதிய யோசனையும் அடக்கத்துடனும் மரியாதையுடனும் சொல்லப்பட வேண்டும். இல்லை எனில் அந்த யோசனையைக் குறை கூறுவார்கள்.எந்த ஒரு யோசனை ஆனாலும் அதனை தெரிவிக்கச் சிறந்த வழி, கேள்வி வடிவில் கேட்பதுதான் " இது பற்றி அனுபவமிக்க தங்களுடைய அபிப்பிராயத்தை தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்" என்கிற எளிய முறையில் யோசனைகளைத் தெரிவிக்க வேண்டும்.

உங்கள் அதிபரிடம் கேட்கப்படும் கேள்விகள் பின்கண்டவகையில் இருக்கலாம்:

( உங்கள் யோசனையைக் கூறி விட்டு) "இதை நமது கம்பனி செயல்படுத்தினால் என்ன விளைவு ஏற்படும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?"

(உங்கள் யோசனையைக் கூறிவிட்டு) "இதை நமது கம்பெனி பரிசோதனை செய்து பார்க்குமானால் அது எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?"

(உங்களது யோசனையைத் தெரிவித்து விட்டு) " இதன் வாயிலாக உற்பத்திச் செலவு குறையும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?"

உங்கள் , அணுகுமுறை இப்படி இருக்க வேண்டும். வரம்பு மீறாதவகையில் - வெறுப்பை சம்பாதிக்காத முறையில் - உங்களுக்குத் தோன்றும் யோசனைகளை எப்படி சமர்ப்பிப்பது என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

உங்கள் யோசனை, 'நடைமுறை சாத்திய மற்றது' என்று உங்கள் அதிபர் கருதினால் , அதற்கான காரணத்தை அவர் உங்களுக்குத் தெரிவிப்பார். அப்போது நீங்கள் ' இதற்காகத் தான் எனது யோசனையை விரிவாக்குவதற்கு முன்பே, அனுபவமிக்க உங்களுடைய கருத்தை அறிய விரும்பினேன்' என்று உங்கள் அதிபரைப் புகழும் வகையில் நீங்கள் கூறி விடலாம்.

உங்கள் அதிபரின் தொழில் அல்லது வர்த்தகத்துக்கு உதவியாக இருக்கும் என்று கருதி நீங்கள் ஒரு யோசனையைக் கூறுகிறீர்கள். இப்படிக் கேட்பதால் உங்கள் அதிபர் எரிச்சல் அடையமாட்டார்.

உங்கள் அதிபருடைய தொழில் அல்லது வர்த்தகத்தை அபிவிருத்தி செய்ய உங்களிடம் ஒரு யோசனை இருக்கிறது. அந்த யோசனை பற்றி அனுபவம் மிகுந்த உங்கள் அதிபரின் கருத்தைக் கேட்கிறீர்கள். ஆனால் உங்கள் அதிபரோ உங்களை ஊக்கப்படுத்துவதற்குப் பதிலாக - உங்களைப் புறக்கணித்தார் என்றால் நீங்கள் செய்ய வேண்டியது என்ன? மேலும் முற்போக்கான ஒரு வர்த்தகம் அல்லது தொழில் - மேலும் அதிகமான வருவாய் தரும் உத்தியோகத்தை - நீங்கள் தேடிக் கொள்ள வேண்டியது தான்.

(வளரும்)


சுடர் ஒளி வாசகர்களே
குடத்துள் இட்ட விளக்காக
உங்களுக்குள் மறைந்து கிடக்கும்
படைப்புத் திறன்களைக் குன்றின்
மேல் தீபமாக்கிட சுடர் ஒளி
காத்திருக்கிறது.
சிறுகதை, கவிதை, கட்டுரை,
துணுக்குகள், எதுவானாலும்
அனுப்பிவையுங்கள்.
தரமானவை பிரசுரிக்கப்படும்.

படைப்புக்களை அனுப்பவேண்டிய
முகவரி: சுடர் ஒளி,
இல.361 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# யாழ். பல்கலைக்கழகம்: அடங்க மறுக்கும் சக்தி

கே.கே

பல்கலைக்கழகம் என்பது ஒரு நாட்டில் உயர் பட்டப்படிப்பு மையங்களாக விளங்குவதுடன் அங்கு தான் எதிர்கால தலைவர்கள் உருவாகின்றனர்.

எனவே ஒரு நாட்டின் பல்கலைக்கழகம்தான் அந்த நாட்டின் தலை விதியினைத் தீர்மானிக்கும் சக்தியாகும். உலகில் பல நாடுகளில் எழுந்த விடுதலைப் போராட்டங்களுக்கும், புரட்சிகளுக்கும் முக்கிய காரணமாக இருந்தவர்கள் பல்கலைக்கழக மாணவர்களே.

பல்வேறு சமூகத்தினையும் சேர்ந்த மற்றும் மனித சுதந்திரம் சம்பந்தமாக வரலாற்றில் வைக்கப்படும் கரும் புள்ளி. அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்ற வகையில் நாம் இந்த முட்டாள் தனமான முடிவை வெறுப்போடு கண்டிக்கின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளையும் அதன் கொள்கைகளையும் நாங்கள் அனுமதிக்காவிடினும், தமிழ் மக்கள் இறந்த தமது மக்களை, தமது உறவுகளை நினைவு கூரும் உரிமைக்கு நாங்கள் மதிப்பளிக்கின்றோம். அவர்களது உரிமைக்கு பாதுகாப்பளிக்க வேண்டும்.

அப்பாவிகள் மீதும் மத ஸ்தலங்கள் மீதும் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் மீதும் போர் தொடுக்கும் வெட்கம் கெட்ட அரசியலை இலங்கையில் அரசு செய்கின்றது.

மக்கள் இலகுவில் இவற்றை மறந்துவிடமாட்டார்கள். இன்றைய ஆட்சியாளர்கள் ஒருநாள் ஆட்சிக் கட்டிலை விட்டு இறங்கவே வேண்டியிருக்கும் அன்று மக்கள் இவர்களுக்கு எதிராகவே இருப்பார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

மக்கள் போரின் வடுக்களிலிருந்து வெளிவர வேண்டுமானால் மக்களை

உறவுகளுக்காக நினைவு தினத்தை அனுஷ்டிக்க மறுக்கும் இலங்கை அரசு எந்தவகையிலும் ஒரு ஜனநாயக அரசாக கருத முடியாது.

தனது முள்ளிவாய்க்கால் வெற்றிகளை சிங்கள மக்களின் வெற்றியாக இனவாதத்தின் உச்சநிலையிலிருந்து கொண்டாட்டங்களை நடத்திய அரசு இறந்தவர்களுக்காக அஞ்சலி செய்யும் உரிமையை தடைசெய்வது ஒடுக்கு முறையேயாகும்.

இளையவர்கள் ஒன்று கூடும் இடமே பல்லைக்கழகம். மாணவர்களுடைய சக்தி என்பது அளவிடமுடியாத ஒன்று. அந்த வகையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் முக்கிய உந்து சக்தியாகவும் யாழ். பல்கலைக்கழகமே இருந்தது என்பது உலகறிந்த உண்மை.

யாழ். பல்கலைக்கழகமானது இலங்கையில் காணப்படும் பல்கலைக்கழகங்களையும் விட சற்று வித்தியாசமான ஒன்றுதான். காலத்துக்கு காலம் யாழ், பல்கலைக்கழக மாணவர்களின் செயற்பாடுகள் அனைத்தும் தமிழ் மக்கள் எதைச் செய்ய வேண்டும் என்று நினைக்கின்றார்களே அதனை செய்து முடிக்கும் தன் மையாக இருக்கும்.

ஏனெனில் யாழ். பல்கலைக்கழகத்துக்குள் நுழையும் மாணவர்கள் இனப் பற்றுயுடையவர்களாகவும், நிலப்பற்றுடையவர்களாகவும் மாறிவிடுவார்கள். ஆனால் மாணவர்களின் விடுதலை உணர்வை மழுங்கடிக்க ஆட்சியாளர்களும் தமது படை களைத் தொடர்ந்து ஏவிக்கொண்டே தான் இருக்கிறார்கள்.

அந்த வகையில் கடந்த முறை யாழ். பல்கலைக்கழகத்தில் மாவீரர் தினம் கொண்டாடப்பட்டதாக கூறி நான்கு மாணவர்கள் கைது செய்யப்பட்டு சிரட்டை, சவர்க்காரம் போன்ற அழ குப் பொருள்களை செய்து பழக்கும் புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வு என்ற பெயரில் மூன்று மாதங்களுக்கு அடைத்து வைக்கப்பட்டபின் விடுவிக்கப்பட்டனர்.

அதேபோல இந்த முறையும் மாவீரர் தினத்தினை மாணவர்கள் நினைவேந்தாமல் தடுக்க வேறு உத்தி கையாளப்பட்டுள்ளது. அதாவது மாவீரர் வாரம் முடியும்வரை யாழ். பல்கலைக்கழகத்தினை பூட்டுமாறு மேலிடத்தில் இருந்து உத்தரவு வந்துள்ளது. அதனை இம்மியும் பிசகாமல் நிறைவேற்றியுள்ளது பல்கலைக்கழக நிர்வாகம்.

போரில் இறந்த தமது உறவுகளை நினைவு கூர்தலை தவிர்ப்பது தான் இந்த உத்தரவின் நோக்கமாக இருந்தது. ஆனால் அது கைகூடவில்லை.

''யாழ். பல்கலைக்கழகத்தை மட்டும் மாவீரர் வாரம் முடியும்வரை மூடும் முடிவு நாட்டின் ஜனநாயகம்

அவர்களது உரிமைகளுக்கு ஊறு விளைவிப்பதனால் அவர்களது இனவாத மற்றும் வன்முறை அடையாளங்களை தோற்கடிக்கவோ, ஜனநாயக நீரோட்டத்திற்குள் அவர்களை அழைத்து வரவோ முடியாது.



யுத்தமென்பது யுத்தமாகவே இருக்கின்றது. நாகரிக சமூகத்தினால் அதனை எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது. போரில் யார் செய்தது சரி என்பது குறித்து பேசுவது பலனற்ற காரியமாக இருக்கும் அதேவேளை, அதனால் அனைத்துப் பிரிவினருக்கும் அழிவு மட்டுமே எஞ்சி நிற்கும். ஆகவே மனித சமூகத்திற்கு, மனித வர்க்கத்திற்கு பொறுப்புக்கூறக் கூடிய மற்றும் அன்பு காட்டும் நபர்களுக்கோ, இயக்கங்களுக்கோ மனிதப் படுகொலையை மேற்கொள்ளும் போரை அனுமதிக்கும் ஆற்றல் கிடையாது.

மரணித்தவர்களுக்கு அஞ்சலி செய்யும் உரிமையை மறுப்பது ஜனநாயக மறுப்பாகும். அரசு ஏன் இதை தடை செய்கின்றது என்பதை வெளிப்படுத்துமா? யாழ். பல்கலையில் நடைபெற்ற ஒருசிறிய நிகழ்வான அஞ்சலி நிகழ்வை ஏன் அரசு பெரிது படுத்துகின்றது. அரசுக்கு இதில் உள்ள லாபம் தான் என்ன?

அது மட்டுமல்லாமல் மாணவர்களின் மீது போர்தொடுக்கும் நடவடிக்கைக்கான அடிப்படைக் காரணம் என்ன? கல்விக்கூடங்கள் மீதும்

போரில் இழந்த தமது உறவுகளுக்காக அஞ்சலிகள், பூசைகள், நினைவு தினக் கூட்டங்கள், நிகழ்வுகள் என்பவற்றை நடத்த அரசு ஊக்குவிக்க வேண்டும்.

அதை விடுத்து மாணவர்கள் மீது போர்தொடுத்தது தவறானதும் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியதுமாகும். அரசினால் மேற்கொள்ளப்படும் இத்தாக்குதல்களானது மக்களை மீண்டும் அரசுக்கு எதிராகவே திசை திருப்பும்.

தமிழ் மக்களின் மீது பொலிஸாரினால் நடத்தப்பட்ட தொடர்ச்சியான வன்முறைகளும் தமிழர் உரிமைப் போராட்டம் ஆரம்பமாவதற்கு ஒரு முக்கிய காரணி ஆகும். இதன் தொடர்ச்சியே இலங்கை அரசின் இராணுவ அடக்குமுறையாக விளங்கி 30 வருடங்களாக போர் தொடர்ந்தது.

தமிழ் மக்கள் கடந்த காலங்களில் போரை ஆதரித்தமைக்கான காரணங்களை அரசு உணரத்தவறி மீண்டும் அராஜக நடவடிக்கைகளை தூண்டி விடுகின்றது. அராஜகங்களுக்கு எதிராக அன்றுபோல இன்றும் தமிழர் தரப்பில் எதிர்ப்பையே மக்கள் ஜனநாயக வழியில் தெரிவிக்கிறார்கள்.

தமிழ் பேசும் மக்களின் மனதில் விட்டகலாத நினைவுகளில் போரினால் கொல்லப்பட்ட தமது உறவுகள், இனபந்துக்கள், புலிகள் என பலர் அடங்குவர். தாம் தமது விருப்பத்திற்கு ஏற்ப தமது மறைந்து போன

இப்படியான அராஜகங்கள் வரலாற்றில் குறுகிய காலத்திலேயே வீழ்ந்ததை மறந்து செயற்படுவது தவறானதாகும்" - என அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்தமை இங்கு குறிப்பிடத் தக்கது.

உண்மையில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது ஒரு ஜனநாயக நாட்டின் அடைப்படை உரிமை. இதனை யாரும் தடுக்க முடியாது. சிங்கள மக்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நூலான மாகாவம்சத்தில் கூட துட்டகாமினி மன்னன் எல்லாள மன்னனை கொன்ற இடத்தில் தலை வணங்கிவிட்டு செல்லுமாறு உத்தரவிட்டான் என்று வரலாறுகள் கூறுகின்றன.

ஆனால் இலங்கையில் இடம் பெற்ற கொடிய போரிலே இறந்த தனது சொந்தங்களுக்கு அஞ்சலி செலுத்துவதை ஆட்சியிலுள்ள அரசுகள் பயங்கரவாதம் என்ற முத்திரை குத்தி புனர்வாழ்வு முகாமில் அடைக்கின்றது. இவ்வாறு செய்வதன் மூலம் விடுதலைப் புலிகளின் நினைவுகளை அழிக்கலாம் என்று அரசு பகற் கனவு காணுகின்றது.

இது ஒருபுறமிருக்க யாழ். மாவட்ட இராணுவத் தளபதி, இராணுவப் பேச்சாளர் போல அடிக்கடி தமது கருத்தினை வெளியிட்டு வருகின்றார். உண்மையில் இராணுவம் தொடர்பான செய்திகளை இராணுவத்தில் அதற்கு என ஒதுக்கப்பட்டுள்ள பேச்சாளரே கூறுவார். ஆனால் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியே இராணுவப் பேச்சாளர் போல் செயற்பட்டு வருகின்றமை விசேட அம்சமாகும்.

அந்த வகையில் மாவீரர் தின அனுஷ்டிப்புக்களுக்கு இடமளிக்கப்பட மாட்டாது எனவும் மாவீரர் தின வார நிகழ்வு நடைபெறும் காலப் பகுதியில் யாழ்ப்பாணம் அமைதியாக காணப்படும் என எதிர்பார்ப்பதாகவும், விடுதலைப் புலிகள் தமது வீரர்கள் அல்ல என்பதனை வடக்கு மக்கள் புரிந்து கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் அனைவரும் மாவீரர்களை தெய்வமாக தான் கருதுகின்றார்

(18 ஆம் பக்கம் பார்க்க)

# மரணத்தைக் கண்ட ஊடகவியலாளர்கள்

உண்மைச்சம்பவம் ▪ ஜெகன்

**விடுமுறையை உல்லாசமாகக் கழிக்கும் நோக்கில் யேமன் நாட்டுக்குச் சென்ற மேரிக்குயின் என்ற சர்வதேச தொண்டு நிறுவன அதிகாரியான ஊடகவியலாளரும் அவருடன் சென்ற உல்லாசப் பயணிகள் சிலரும் எதிர்பாராத விதமாக இஸ்லாமியத் தீவிரவாதிகளிடம் பணயக்கைதிகளாக அகப்பட்டுக் கொள்கின்றனர். அவர்களை மீட்டெடுக்க வரும் மீட்புக் குழுவினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையில் இடம்பெறும் சண்டையின் நடுவில் அகப்பட்டுக் கொள் ளும் உல்லாசப் பயணிகள் உயிராபத்தை எதிர்கொள்ள நேரிடுகிறது.**

நாங்கள் முதல்நாள் தங்க வைக்கப்படிருந்த இடம் கண்ணுக்கெட்டிய தொலைவில் காட்சியளித்தது. அங்கே பல வாகனங்கள் வருவதும் போவதுமாயிருந்தன. 10 நிமிடங்களின் பின்னர் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் காதில் கேட்டன. நான் எனது கைக்கடிகாரத்தைப் பார்த்தேன். அது முற்பகல் 11 மணியைக் காட்டியது. நாங்கள் தீவிரவாதிகளின் பதுங்கித் தாக்குதலில் அகப் பட்டதிலிருந்து சரியாக 24 மணித்தியாலங்கள் கடந்திருந்தது. என் மனம் ஏதோ இனம் தெரியாத பீதியால் துவளத் தொடங்கியது.

யாரோ எங்களைக் காப்பாற்ற முயற்சிக்கின்றார்கள் போலத் தெரிகிறது என நான் கருதுகின்றேன் என்று என்னுடன் இருந்த மற்றவர்களுக்குக் கூறினேன். எனினும், இவ்வாறான ஆட்கடத்தலின் போது பணயக் கைதிகளை ஆயுதமோதலின் மூலம் மீட்டெடுக்கும் முயற்சிகளின் போது அநேகமாகப் பணயக்கைதிகள் கொல்லப்படுவதையே நான் நன்கு அறிந்தவளாளதால் அரங்கேறப்போகும் எதிர் விளைவுகளை நினைக்கவே நெஞ்சம் பதைபதைத்தது.

வெடிச்சத்தங்களைக் கேட்ட கடத்தல்காரர்களுக்கு வியப்பாகவும் , திகைப்பாகவும் இருந்தது. அவர்கள் எங்கள் எல்லோரையும் பதிவான மண் சுவர்களுக்குப் பின்னால் சென்று குப்புறப்படுக்குமாறு அவசரமாக உத்தரவிட்டார்கள். துப்பாக்கிச் சன்னங்கள் தலைகளுக்கு மேலால் சென்று விழுந்து வெடித்தன. நாங்கள் நிலத்தில் விழுந்து படுத்தோம்.

ஒன்றுமட்டும் தெளிவாகப் புரிந்தது. மீட்புப் படையினருக்கும் கடத்தல்காரர்களுக்குமான துப்பாக்கிச் சமரின் இடையில் நாங்கள் பலியாடுகள் போன்று மாட்டியுள்ளோம் என்பதே அது.

அதனை நிஜமாக்குவது போல் எங்கள் அனைவரையும் கைகளை உயர்த்திய வண்ணம் மண் சுவர்களின் மேல் ஏறி வரிசையாக நிற்கும் படி கடத்தல்காரர்கள் பணித்தார்கள். உண்மையில் அவர்கள் எங்களை மனிதக் கேடயங்களாகப் பாவித்தார்கள். துவக்குச் சூடுகள் சரமாரியாகக் கேட்டன. சீறிப் பாயும் ஏவு கணைகள், துவக்குச் சன்னங்கள் எம்மைக் கடந்து சென்றன. எந்த நிமிடத்திலும் நாங்கள் அனைவரும் பிணமாகலாம் என எண்ணுவதைத் தவிர வேறேதனையும் அந்தக்கணத்தில் எண்ணத் தோன்றவில்லை.

மீட்புப்படையினர் எம்மையும், கடத்தல்காரர்களையும் சிறுகச் சிறுகச் சுற்றிவளைத்தபடி படிப்படியக முன்னேறி வருவதை என்னால் உணர முடிந்தது. இருப்பினும், நாங்கள் அவர்களைக் கண்டு கொள்ளக்கூடிய தொலைவுக்கு அப்பாலேயே அவர்கள் இருந்தனர். இரு தரப்பினருக்கும் இடையில் நடைபெறும் துப்பாக்கிச் சமரில் நாங்கள் எவ்விதம் பாதுகாப்பாக மீட்கப்பட முடியும் என என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

சற்று நேரத்தில் மீட்புப் படையினர் துப்பாக்கிச் சூட்டெல்லைக்குள் வந்துவிட்டனர். கடத்தல் காரர்களோ எங்களை நிறுத்தி வைத்திருந்த மண் சுவர்களின் பின்னால் நின்று சுட்டபடி நின்றார்கள். எனக்கு அடுத்ததாக நின்றிருந்த கத்தரீனைப் பார்ப்பதற்காகத் திரும்பினேன். அவளின் முகத்தில் கண்ணீர் அருவி போல் பாய்ந்து கொண்டிருந்தது. அவளது முகம் பேயறைந்தது போல வெளிறியிருந்தது. உடல் பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தது. . நான் ஆதரவாக அவளது கையைப் பற்றிப் பிடித்தேன்.

அந் நேரம், எனது கன்னத்தை உராய்வது போல ஓர் துப்பாக்கி ரவை 'வீர்' எனப் பாய்ந்து பின்னால் சென்றது. வெலவெலத்துப் போனேன். உடல் முழுவதும் வியர்த்தது. இன்னும் ஓரிரு வினாடிகளில் இதே இடத்தில், நான் பிணமாகப் போகின்றேன் என்பதுமட்டும் ஐயத்துக்கு இடமின்றி உறுதியாகிவிட்டது.

அப்பொழுது திடீரென நீலநிறச் சட்டையணிந்திருந்த கடத்தல் காரனொருவன் ஆவேசத்துடன் எனது சட்டையுடன் கழுத்தையும் சேர்த்துப் பிடித்துக்கொண்டு எனது முதுகில் துப்பாக்கிமுனையை வைத்து அழுத்தியபடி என்னை அங்கிருந்த சுவரால் குதித்து மீட்புப் படையினர் முன்னேறி வரும் திசையில் செல்லும்படி அதட்டிக்கத்திக் கொண்டு எனது உடல் மறைவில் தானும் என்பின்னால் வந்தவண்ணமிருந்தான். உயிரைக் கையில் பிடித்தபடி செய்வதறியாது அவன் சொற்படி மெதுவாக முன்னேறிக் கொண்டிருந்தேன். உண்மையில் நான் ஓர் மனிதக் கேடயமாகப் பயன்படுத்தப்பட்டேன்.

என்ன நடந்ததோ? என்ன மாயமோ? எனது முதுகில் ஒரு கணம் துவக்கு முனையின் ஸ்பரிசத்தைக் காணவில்லை. அளவில்லாத திகைப்புடன் திரும்பிப் பார்த்தேன். நீலச் சட்டைக்காரன் நிலத்தில் கிடந்து புரண்டு, புரண்டு முனகிக் கொண்டிருந்தான். எழுந்து நிற்பதற்கும் இயலாது. தடுமாறிக் கொண்டிருந்தான். என்னால் இரத்தத்தைக் காணமுடியவில்லை. ஆனால் அவன் முன்பாக அவனது துப்பாக்கி தரையில்வீழ்ந்து அநாதரவாகக் கிடந்தது. நான் அதனைக் கைப்பற்றுவதற்கு முடிவு செய்தேன். ஆனால், ஓரிரு காலடிகள் அதனை நோக்கி எடுத்து வைத்ததும் என்னையறியாமலேயே நெஞ்சில் பயம் இழையோடியது. அதைவிட மனதில் பலவாறான எண்ணங்கள் தோன்றின. அவன் சிலவேளை குற்றுயிரான நிலையிலும் தட்டுத் தடுமாறி முந்திக் கொண்டு துப்பாக்கியைக் கைப்பற்றுவானாகில் என்னை எந்த விதத்திலும் உயிருடன் விட்டுவைக்க மாட்டான். சுட்டுத் தள்ளிவிடுவான். இருந்தாலும் மனதில் ஒருவாறு துணிவை வரவழைத்துக் கொண்டு துப்பாக்கியின் ஒரு முனையைக் கையால் பற்றிப் பிடித்தேன். ஆனால் அவனும் சளைத்தவனல்ல. அந்நிலையிலும் துப்பாக்கியின் மறுமுனையைக் கையால் பிடித்தவண்ணமிருந்தான். அவனது கண்கள் சிவந்து கொலை வெறியைக்கக்கின. தாமதிக்கும். ஒவ்வொரு கணமும் எனக்குப் பேராபத்து என்பதை உணர்ந்த நான் துணிச்சலை வரவழைத்துக்கொண்டு எனது வலது காலை ஓங்கி அவனது தலைமீது ஓர் உதைவிட்டேன்.

துணிச்சல் வெற்றியளித்தது. துவக்கும் வெடித்தது. அவன் உயிரற்ற சடலமாக நிலத்தில் சரிந்தான். செய்வதறியாது விக்கித்துப் போய் நின்றேன். உண்மையில் எனக்குச் சுடத் தெரியாது. நின்று சிந்திப்பதற்கு நேரமில்லை. துப்பாக்கியைக் கையிலெடுத்து அதனைக் காவியவாறு வயல் வெளியை நோக்கி ஓடினேன். நன்றாகக் களைக்கும் வரையில் ஓடி, ஓர் மண்சுவர் அருகே இயலாது சாய்ந்தபடி தரையில் அமர்ந்தேன்.

துவக்குச் சூட்டுச் சத்தங்கள் கேட்டபடி இருந்தன. எனினும் சில நிமிடங்களில் அவை ஓய்ந்து விட்டன போலத் தோன்றியது. சுவரின் மேலாக மெதுவாகத் தலையை உயர்த்தி எட்டிப்பார்த்தேன். எங்கும் நிசப்தம் நிலவியது. மீட்புப் படையினராக இருக்கவேண்டும் என எண்ணினேன். அவர்களின் தலைகள் தெரிந்தன. நான் துப்பாக்கியுடன் அவர்கள் முன் சென்றால் என்னையும் கடத்தல் காரர்களில் ஒருத்தி எனக் கருதிச் சுட்டுத் தள்ளிவிடுவார்கள். எனவே கையிலிருந்த துப்பாக்கியை வீசியெறிந்துவிட்டு சுவரின் மேலால் கடந்து அவர்கள் நின்றிருந்த பக்கமாக நகர்ந்தேன். அவர்களும் என்னை இனங்கண்டு அருகில் வந்து ஆசுவாசப்படுத்தினர்.

இரண்டு மணித்தியால நேரம் இடம்பெற்ற துப்பாக்கிச் சமரின் இறுதியில் நான் மீட்கப்பட்டேன். ஆனால் எனது சகாக்களான நூத் மற்றும் பீட்டர் போன்றோரை மீட்கமுடியவில்லை. இரண்டு உல்லாசப் பயணிகள் காயமடைந்திருந்தனர்.



நான்கு உல்லாசப் பயணிகளும் மற்றும் மீட்புப் படையினர் இருவரும் உயிரிழக்க நேர்ந்தது. அதிர்ஷ்டவசமாக எனது நண்பியாகிய கத்தரினாவும் ஆபத்து ஏதுமின்றி உயிர் தப்பியிருந்தாள். கடத்தல் காரர்கள் பலர் உயிருடன் கைது செய்யப்பட்டனர். இருந்தபோதிலும், பத்துப் பேருக்கும் அதிகமான கடத்தல் காரர்கள் பாலைவன வெளியினூடாகத் தப்பிச் சென்றுவிட்டதை, கைதுசெய்யப்பட்டவர்கள் மூலம் மீட்புப் படையினர் அறிந்து கொண்டனர்.

எனவே, தப்பியோடிய தீவிரவாதிகள் பாலைவன வெளியில் வேறெங்கும் பதுங்கி நிலையெடுத்துத் தாக்கக் கூடுமென்றதால் மீட்புப் படையினர் முன்னெச்சரிக்கையுடன் பயணத்தை ஆரம்பித்தனர். உயிரிழந்த தமது படையினர் இருவரின் சடலங்களையும், கைதுசெய்யப்பட்ட தீவிரவாதிகளையும் ஒரு இராணுவ டிரக்கில் ஏற்றிக் கொண்டு முன்னால் செல்ல, அதன் பின்னால் மீட்கப்பட்ட எங்களை ஏற்றிக்கொண்டு மற்றுமொரு வாகனம் தொடர்ந்து செல்ல எமது பயணம் ஆரம்பித்தது.

சுமார் 5 மைல்கள் தூரம் அளவில் பயணம் செய்த பின்னர் மீட்புப்படையினர் எதிர்பார்த்தது போலவே தப்பியோடிய தீவிரவாதிகள், நாங்கள் சென்றுகொண்டிருந்த பாதையின் அருகேயிருந்த பாறையொன்றின் பின்னால் பதுங்கியிருந்தவாறு தாக்குதலைத் தொடுத்தனர். இரு தரப்பிற்கும் இடையில் சரமாரியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. மீட்புப் படையினர் இதுபோன்ற தர்க்குதல் நடக்கக் கூடுமென எதிர்பார்த்து முன்னெச் சரிக்கையுடன் இருந்தமையால் அவர்களால் நிலைமையை ஒருவாறு சமாளிக்க முடிந்தது. கிட்டத்தட்ட 15 நிமிடங்கள் அளவில் நடந்த துப்பாக்கிச் சமரின் இறுதியில் தாக்குதலைத் தொடுத்த தீவிரவாதிகள் அனைவரும் மீட்புப் படையினரின் வேட்டுக்குப் பலியாகினர்.

மீட்கப்பட்ட அனைவரும் உரிய இடத்தில் பாதுகாப்பாகச் சென்றடைந்தோம். மறுநாளே நான் விமானம் மூலம் எனது நாட்டுக்குத் திரும்பிவிட்டேன். உல்லாசமாக விடுமுறையைக் கழிக்கச் சென்ற நான் உயிராபத்தில் இருந்து மீண்டு வந்துவிட்டேன். அதனை இன்றும் நினைவு கூருகையில் உடல் முழுவதும் சிலிர்க்கின்றது. உயிர் பிழைக்க முடிந்தமை குறித்து நான் ஆண்டவனுக்கு நன்றி செலுத்தினேன்.

(முற்றிற்று)

இளையோருக்கான புதிய பகுதி!

சுபிதி

# காதலர் மட்டும்...

## தோழியா? காதலியா?

இன்றைய காலத்தில் ஒரு ஆணும் பெண்ணும் நண்பர்களாக நீண்ட நாட்கள் இருக்க முடிவதில்லை. அவ்வாறு நண்பர்களாக பழகும் போது, அவர்களுக்குள்ளேயே வித்தியாசமான உணர்வுகள் வந்துவிடுகின்றன. ஆனால் அவற்றை ஆண்கள் வெளிப்படையாக தெரிவித்து விடுகின்றனர். ஆனால் பெண்கள் சொல்லமாட்டார்கள். ஆகவே அவர்களது மனதில் உங்களை பிடித்திருக்கிறது என்பதை இலகுவாக கண்டறிய ஒரு சில அறிகுறிகள் இருக்கின்றன. அந்த அறிகுறிகளை வைத்து பெண்களுக்கு உங்களை பிடித்திருக்கிறதா, பிடிக்கவில்லையா என்பதைக் கண்டறியலாம். அது என்னவென்று படித்து, உங்கள் மனதில் இருக்கும் பெண்ணிற்கு உங்களை பிடித்திருக்கிறதா என்பதை தெரிந்து கொள்ளுங்கள்...

பெண்களுக்குப் பிடித்தால் எப்படி நடப்பார்கள் தெரியுமா?

ஆண்களே!!!

பெண்கள் உங்கள் கண்களை அதிகம் பார்த்துப் பேசினால் அவர்கள் உங்கள் மீது அதிக ஆர்வத்துடன் உள்ளனர் என்பதை அறியலாம். அதிலும் தொடர்ந்து பார்த்துக் கொண்டே இருந்தால், கண்டிப்பாக உங்களைப் பிடித்திருக்கிறது என்று அர்த்தம்.

பெண்களுக்கு உங்களை பிடித்தால், அவர்களே உங்களை அடிக்கடி தொடுவார்கள். உதாரணமாக, அடிப்பது, அடிக்கடி தொட்டுப் பேசுவது, கை குலுக்குவது, கைகளை பிடித்து நடப்பது போன்றவற்றைச் செய்வார்கள். ஏனெனில் அவர்கள் உங்கள் மீது விருப்பம் இருப்பதால் தான் அவர்கள் உங்களை தொட ஆரம்பிக்கிறார்கள். பின்னர் நீங்கள் தொட்டாலும், எதுவும் சொல்லாமல், முகத்தைச் சுளிக்காமல், தள்ளி விடாமல் இருந்தால், நீங்கள் அதிர்ஷ்டசாலி தான்.



உங்கள் மீது விருப்பம் இருந்தால், பெண்கள் அதிக நேரம் உங்களுடன் பேசுவார்கள். மேலும் எவ்வளவு தான் நண்பர்களுடன் கூடிப் பேசிக் கொண்டிருந்தாலும், அவர்கள் உங்களுடன் பேசுவார்கள் அல்லது குறுந்தகவல் அனுப்புவார்கள். முக்கியமாக எந்த நேரத்திலும் உங்களுக்கு போன் செய்து பேசுவார்கள்.

உங்களைப் பிடித்தால், என்ன தான் நீங்கள் பேசினாலும் பெண்கள் சிரித்துக் கொண்டே இருப்பார்கள். அது எவ்வளவு தான் படு மோசமாக இருந்தாலும், அவர்கள் விழுந்து விழுந்து சிரித்தால், நிச்சயம் அது காதல் தான். மேலும் உங்கள் பேச்சை அவர்கள் இரசிக்கிறார்கள் என்றும் அர்த்தம்.

எங்கேனும் அவர்களுடன் வெளியே தனியாக போகத் திட்டம் போட்டு, அவர்களிடம் கேட்டு, அவர்களுக்கு வேலை இருப்பது உங்களுக்கு தெரிந்தும், உங்களுடன் வருவதற்கு ஒப்புக் கொண்டால், அந்த நேரத்தில் நீங்கள் அந்த திட்டத்தை முறியடிக்காமல், செல்லுங்கள். ஏனெனில் அவர்கள் உங்களுடன் வெளியே வந்து, அப்போதும் உங்களிடம் காதலை சொல்லும் வாய்ப்புகளும் உண்டு. இந்த சந்தர்ப்பத்தை வீணாக்க வேண்டாம்.

உங்களிடம் பேசும் போது, பெண்கள் தங்கள் தலைமுடியைக் கைகளால் சுருட்டிக் கொண்டிருப்பதை, நீங்கள் கண்டால், நிச்சயம் அவர்களுக்கு உங்கள் மீது ஒரு கண் உள்ளது என்பதை அறியலாம். இது ஒரு சிறிய அறிகுறி தான்.

நீங்கள் வேறு ஒரு பெண்ணிடம் பேசுவதைப் பார்த்து, கோபப்பட்டால், அது கூட, உங்கள் மீது இருக்கும் ஒரு வகையான காதல் தான். ஆனால் இதை அவர்களிடம் கேட்டால், அவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஏனெனில் உண்மையில் அவர்கள் உங்களை வேறு யாருக்கும் விட்டுக் கொடுப்பதை விரும்பவில்லை. இந்த நேரத்தில் அவர்களது காதல் வெளிப்படுகிறது.

## காதல் தோல்வியைக் கண்டுபிடிக்க ஒரு இணையம்

'வட் வென்ட் ரோங்' என்பது மிகவும் சுவாரஸ்யமான இணையத்தளம். காதலர்களுக்கு மிகவும் பயனுள்ள இணைய தளமும் கூட!காதலர்கள் என்பதைவிட காதலில் தோல்வி கண்டவர்களுக்கு என்று சொல்லலாம்!(அடுத்த)காதலில் வெற்றி பெற விரும்புகிவர்களுக்கான தளம் என்றும் வைத்து கொள்ளலாம்.

காரணம் இந்தத் தளம் காதல் தோல்விக்கான காரணங்களை தெரிந்து கொள்ள உதவுகிறது. அதுவும் காதலிக்க மறுத்து விலகி சென்றவர்களிடம் இருந்தே அதற்கான காரணத்தை தெரிந்து கொள்ள வைக்கிறது.

காதல் எல்லோருக்கும் இனிமையானதாகவோ வெற்றிகரமாகவோ அமைவதில்லை. சிலர் கஜினி முகமது போல தொடர்ந்து படையெடுக்க வேண்டியிருக்கிறது.

எது எப்படியோ காதலில் நிராகரிக்கப்படும் போது வேதனையாகவும் இருக்கும் ,குழப்பமாகவும் இருக்கும். எங்கே தவறு நடந்தது என்னும் கேள்வி அப்போது காதலித்தவர் மனதில் எழலாம்தானே. எதனால்.எந்த தவறால் என்னை பிடிக்காமல் போயிற்று என்ற விவரத்தை தெரிந்து கொள்ள மனம் துடியாக துடிக்கும் தானே.

அதை தான் 'வட் வென்ட் ரோங்' இணையத்தளம் அழகாக செய்கிறது.

காதலில் நிராகரிக்கப்பட்டவர்கள் இந்த தளத்தின் வாயிலாக தங்களை விட்டு விலகி சென்றவர்களிடம் அதற்கான காரணத்தை கேட்கலாம். ஈ - மெயில் வாயிலாகவோ அல்லது 'எஸ் .எம். எஸ்' வாயிலாகவோ இந்த கேள்வியை அனுப்பி வைக்கலாம்.

எப்படி கேட்கலாம்,எதை கேட்கலாம் என்ற சங்கடங்கள் ஏற்படாத வகியில் காதலர்கள் கேள்வி கேட்பதற்கு என்றே விண்ணப்ப படிவங்கள் தயாராக உள்ளன . நான் அதிகம் பேசியதால் பிடிக்காமல் போனதா?என்பது போல அமைந்துள்ள அந்த கேள்விகளில் பொருத்தமானதை தேர்வு செய்து அனுப்பி வைத்தால் அதற்கான பதிலை பெற முடியும்.

காதலில் கழற்றி விட்ட்வர்(ஆணோ பெண்ணோ)இந்த கேள்விக்கான பதிலை பகிர்ந்து கொள்ளலாம். பதில் அளிக்கும் போது பிரிவுக்கான உண்மையான காரணத்தை கொஞ்சம் நாகரீகமாக சொல்ல வேண்டும். அதாவது காரணத்தை சொல்லி விட்டு கூடவே அவர்களிடம் உள்ள நல்ல குணாதிசயத்தையும் குறிப்பிடலாம்.

காதல் தோல்விக்கான காரணத்தை தெரிந்து கொள்வதால் இரண்டு விதமான பலன்கள் ஏற்படும். ஒன்று காதல் கசந்ததற்கான காரணத்தை தெரிந்து கொள்ளலாம். மற்றொன்று அடுத்த முறை காதலிக்கும் போது இந்த தவறை செய்யாமல் இருக்கலாம்.

ஏன் கழற்றி விடப்பட்டோம் என்று தெரியமாலே குழம்பி தவிப்பதை விட அதற்கான காரணத்தை தெளிவு படுத்தி கொள்ள முடிவது நல்லது தானே. அதிலும் பல நேரங்களில் உறவு முறிவுக்கான காரணங்கள் ஒருவரின் தவறாக இல்லாமல் சம்பந்தப்பட்டவர்களின் மாறுப்பட்ட எதிர்பார்ப்பினாலும் இருக்கலாம் தானே. அதனை தெரிந்து கொள்வதன் மூலம் தாழ்வு மனப்பான்மையிலிருந்தும் விடுபடலாம்.

காதலில் தோல்வி உற்றவர்களுக்கு கை கொடுக்கும் இந்த தளத்தை உருவாக்கியவர் ஒரு ஆணாகத் தான் இருக்க வேண்டும் என்று நினைத்தால் அது தவறு. இந்த தளத்தை உருவாக்கிய்வர் ஒரு பெண்மணி.

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரை சேர்ந்த அட்ரே மெலின்க் என்பவர் தான் இந்தத் தளத்தை அமைத்துள்ளார்.

இதற்கு முன்பாக அவர் அமெரிக்காவின் நியூயோர்க்கில் கொஞ்சக் காலம் வசித்தார். அப்போது அங்கு ஏற்பட்ட காதல் அனுபவமே இந்தத் தளம் உருவாக்க காரணமாக அமைந்தது.

அது அவருக்கு முதல் காதல் அனுபவம். அந்தக் காதலன் அவரை குறிப்பிட்ட இடத்திற்கு வரச்சொல்லிவிட்டு கொஞ்ச நேரம் பேசிவிட்டு ஒரு முத்தத்தை கொடுத்து விட்டு காணாமல் போய்விட்டாராம். இந்த செயலால் மெலின்க் குழம்பி போனார். தன் மீது ஈடுபாடு இல்லாவிட்டால் அந்த வாலிபர் ஏன் தன்னை அழைக்க வேண் டும்?அப்படி அழைத்த பிறகு ஏன் விலகிச் செல்ல வேண்டும் என்றெல்லாம் யோசித்து குழம்பியிருக்கிறார். இந்தக் கேள்வியை அவரிடமே கேட்டுவிடலாம் என்றால் விட்டு போனவனை துரத்தி செல்வதாக இருக்காதா என்ற எண்ணமும் அவரை வாட்டியது.

அப்போது தான் இது போன்ற குழப்பமான தருணங்களில் சங்கடம் இல்லாத வகையில் காதல் கசந்த காரணத்தை தெரிந்து கொள்ள இணையம் சார்ந்த வழியை உருவாக்கலாம் என்ற எண்ணம் அவருக்கு உண்டானது.

இதன் பயனாக பிறந்தது தான் இந்த இணையதளம்.

**இணையதள முகவரி;http:// wotwentwrong.com/**

### காதல் பரிசு:

# உங்களுக்கும் பரிசு

உங்கள் வாழ்வில் அல்லது உங் களுக்குத் தெரிந்தவர்களின் வாழ்வில் காதல் பரிசுகள் பற்றிய சுவாரசியமான சம்பவங்கள் நடந்திருக்கலாம். அவற்றை 100 சொற்களுக்கு மேற்படாமல் எமக்கு எழுதி அனுப்புங்கள்.

தரமானவை வாரந் தோறும் இந்தப் பகுதியில் பிரசுரமாவதோடு. உங்களுக்கு ஆச்சரியமளிக்கும் பரிசுகளும் காத்திருக்கின்றன.



*அனுப்ப வேண்டிய முகவரி:*
*காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு*
சுடர் ஒளி
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பரிசு பெற்றவர்கள் வாரநாள்களில் 021 567 7609 என்ற எமது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு துரிதமாக பரிசினைப் பெற்றுக்கொள்ளலாம்.

## யாழ். பல்கலைக்......

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் என்பது உல கறிந்த உண்மை. இதனைக் கூட யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி புரிந்து கொள்ளாதது வேதனைக்குரிய விடயம்.

அவர் கூறியது போல் யாழ்ப்பாணம் அமைதியாகத்தான் இருந்தது. ஏனெனில் மாவீரர் வாரத்தில் இப்படியான அமைதியின் அஞ்சலிப்புகளே நிகழ்வது வழக்கம்.

இராணுவத் தளபதி, பொலிஸ் பேச்சாளர் ஆகியோர் கூறியதனையும் செவி மடுக்காமல் மாவீரர் நாளான 27ம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள் என அனைவரும் இறந்தவர்களுக்காக அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

உண்மையில் யாழ். பல்கலைக்கழகம் தொடர்ந்து அடக்கு முறைகளுக்கும் மாணவர் தலைவர்கள் மீதான தாக்குதல்களுக்கும் உட்பட்டு வரும் நிலையிற் கூட மாணவர்கள் துணிவாக போரில் இறந்த உறவுகளுக்காக அஞ்சலி செலுத்தப்பட்டமை வரவேற்க வேண்டிய விடயமே!

எதனை அடக்கினாலும் உணர்வுகளை யாராலும் அடக்க முடியாது. ஒவ்வொரு தமிழனுடைய நரம்பிலும் விடுதலை உணர்வுகள் புரையோடிப் போயுள்ளன. அதனை பயங்கரவாதச் சட்டம் கொண்டோ அல்லது வேறு ஒரு சட்டம் கொண்டோ யாராலும் அடக்கிவிட முடியாது.

ஆயினும் அறுபது வருடங்களாக தமிழ் மக்களின் மனங்களை புரிந்து கொள்ளாத அரசு மக்களின் உணர்வுகளை மாத்திரம் புரிந்து கொள்ளவா போகிறது என்ற கேள்வி எழுகையில் பெருமூச்சொன்றும் பிறப்பதை தவிர்க்க முடியாது.


**STUDY IN LONDON**
**BEDFORDSHIRE, CAMBRIDGE, WALES**

SPOT ASSESSMENT
• SCHOLARSHIPS AVAILABLE
WORK PLACEMENTS

Postgraduate & PhD / Undergraduate Courses

•MBA • Architecture •Art & Design •Media •Biomedical Science •Business Studies & HRM •Accounting & Finance •ACCA •Law •Computer Science •Social Science •Education •TESOL •QTS, •Engineering •Nursing •Health

FREE VISA GUIDANCE

Over 300 Courses Available

- PhD STUDENTS APPLICATIONS APPROVAL TIME APPROX. 4 WEEKS
- POSTGRADUATE STUDENTS CAN APPLY WITH DEPENDENTS
- MATURE STUDENTS ARE WELCOME TO APPLY
- Advanced entry for students with CIM, CIMA, ABE, NCC, BCS, HND, ACCA and other recognized qualifications
- G.C.E. A/L students can apply pending results
- Students with GCE O/L's can apply
- IELTS is not compulsory *** Conditions Apply

February September 2014 Intake

University of Bedfordshire – www.beds.ac.uk
Anglia Ruskin University – www.anglia.ac.uk
University of East London – www.uel.ac.uk
University of West London – www.uwl.ac.uk
London Metropolitan University – www.londonmet.ac.uk
University of Central Lancashire – www.uclan.ac.uk
University of South Wales – www.southwales.ac.uk
Bradford College – www.bradfordcollege.com
Ealing Hammersmith & West London college – www.wlc.ac.uk

See our website www.lohosgroup.com for a detailed list of Universities we represent

LOHOS TOPS 400 STUDENTS

*Over the last 6 years Mr Loho has successfully counselled, guided and placed more than 400 students to U.K. Universities*

HELPLINE CALL LOHO 0777 917929

**Please call Sri Lanka Representative's office for more details**

Lohos Group Office: Lucky Plaza Building, 4 / 7, 4th Floor.
St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03. Tel : 2577768 / 0777 917929
lohosgroup@sltnet.lk ,lohosgroup@yahoo.com www.lohosgroup.com
தமிழில் தொடர்புகளுக்கு : Dr. இந்திராணி - Tel : 0773-498660



# இல்லத்தரசிகளே! உங்களுக்கு ஒரு நற்செய்தி

தமிழ் சஞ்சிகை வரலாற்றில் இல்லத்தரசிகளுக்கென தனித்துவமாக வெளிவரும் மாதாந்த சஞ்சிகை

இதோ உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் ஒளியேற்ற வருகிறாள்

டிசம்பர் 1 முதல்

நல்லதொரு குடும்பம்

# "ஒளி அரசி"

**இல்லத்தரசிகளின் தோழி**

அரசியல், பாலியல் கலக்காத ஒரு பரிநாமப் படைப்பு

**குடும்பத் தலைவிகளுக்கான விசேட அம்சங்கள்**

- பெண் எனும் தெய்வம்.
- சமையலைத் தாண்டி...., இல்லத்தரசிகளின் வகிபாகங்கள்.
- நட்சத்திர இல்லத்தரசிகள்...
- ஒரு குடும்பத்தின் வெற்றியில் குடும்பத் தலைவியின் பங்கும், அதற்கான ஆலோசனைகளும்.
- குடும்பத் தலைவிகளுக்கான சுயதொழில் முயற்சிகள்.
- கணவன்- மனைவி இடையிலான புரிந்துணர்வு. விட்டுக் கொடுப்புகள்.
- குடும்ப ஆரோக்கியம், உளவியல், அறிவியல், சுகாதாரம், மருத்துவம் தொடர்பான விழிப்புணர்வுகள்.
- சினிமா (+) பிளஸ், சினிமா (-) மைனஸ்.
- சுவையாக சமைப்பது எப்படி?
- இல்லத்தரசிகளுக்கானப் போட்டி

**ஏனைய குடும்ப அங்கத்தவர்களுக்கான பயன் மிக்க அறிவியல், பொழுது போக்கு, கல்விசார் ஆக்கங்கள், ஊக்குவிப்புப் போட்டிகள்.**

- உலக வெற்றியாளர்களின் அனுபவங்கள் ....
- உண்மைச் சம்பவங்களும், அதன் படிப்பினைகளும்.
- சிறுகதை - போட்டி.
- கவிதைப் பூங்கா - போட்டி.
- விந்தைமிகு செய்திகள்.
- நகைச்சுவை.
- புதிய விடுகதைகள்.
- விளையாட்டுப் பிரியர்களுக்கான விடயங்களும் போட்டியும்.
- சிறுவர் விருந்து.
- குறுக்கெழுத்துப் போட்டி.
- மழலைகளுக்கான வர்ணம் தீட்டும் போட்டி.

ஒவ்வொரு இதழிலும் 10,000/- பணப்பரிசுகளை அள்ளி வழங்கும் போட்டிகள்.

**நேரடியான கல்விசார் துணுக்குகள்**

- (GRADE -5) தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான முக்கிய 10 வினாக்களும், உங்கள் பிள்ளைகளை வழிப்படுத்துவதற்கான ஆலோசனைகளும் (ஒவ்வொரு சஞ்சிகையிலும் பிரபல ஆசிரியர்களது வினாக்களும் ஆலோசனைகளும் உள்ளடங்கும்.)
- (GC.E O/L) க.பொ.த சாதாரண தர மாணவர்களின் (தரம் 10,11) தனித்துவ திறமையைப் பரிசோதிக்கும். 10 கணித, விஞ்ஞானபோட்டி வினாத்துணுக்குகள்.
- (G.C.E. A/L) உயர்தர வர்த்தக, பொருளியல் மாணவர்களுக்கான பரீட்சைக்கு அவசியமான புதிய விடயங்களும், வினா விடைகளும்.
- (G.C.E. A/L) உயர்தர கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களின் தனித்துவ திறமையைப் பரிசோதிக்கும் பாடநெறிகளிலான 10 வினாத் துணுக்குகள்.

இத்தனை விடயங்களுக்கும் உங்கள் மாதாந்த முதலீடு ரூ. 60/= மட்டுமே.

இல்லத்தரசிகளே! நீங்களும் பயன் பெற்று, உங்களூடாக பிள்ளைகளும் பயன் பெறத் தவறாது வாங்கிப் படியுங்கள்; உங்கள் பிள்ளைகளுக்கும் படிக்கக் கொடுங்கள்!

சஞ்சிகையைப் பெற்றுக் கொள்ள அருகில் உள்ள பத்திரிகை முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் இன்றே முற்பதிவு செய்து கொள்ளவும்.

அச்சிட்டு வெளியிடுவோர்:
நியூ விஷன் மீடியா சிண்டிகேட் பிறைவேட் லிமிட்டட்.
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு- 14

மேலதிக தொடர்புகளுக்கு: ஆசிரிய பீடம் 011 5738004, 011 5738855

விநியோகம்:
தலைமை அலுவலகம்: 011 5737593/ 0718628379
வட மாகாணம்: 0215677222/ 0716182182
மேலதிக முறைப்பாடுகளுக்கும் விமர்சனங்களுக்கும்: 0714273035



# சிறுவர் உலகம்




மூவரையும் கொல்லப் போவதாகக் கூறிய மந்திரக்கிழவி அடுத்து என்ன செய்வதென்று யோசித்தாள். தன்னுடைய மாயக்கண்ணாடிக்கும் புலப்படாமல் அவர்கள் மூவரும் எப்படி மறைந்து கொண்டார்கள் என்பது அவளுக்குப் புரியவில்லை. மந்திரக்கிழவி சிந்தித்த படியே குறுக்கும் நெடுக்குமாக அலைந்து கொண்டிருப்பதைக் கண்ட இராட்சதர்கள் தம்மை எப்படி தண்டிப்பது என்று அவள் யோசிப்பதாக எண்ணி இன்னும் பயந்து போயினர்.

குறுக்கும் நெடுக்குமாக அலைந்து கொண்டிருந்த மந்திரக்கிழவியின் கால்களில் ஏதோ ஒட்டிக் கொண்டது போல இருந்தது. மெதுவாகக் குனிந்து கால்களைப் பார்த்தாள். காலில் சிறிதளவு மண் ஒட்டியிருந்தது. ஏதோ சந்தேகம் வரவே மாளிகையின் தரைப்பகுதியில் அவள் இன்னும் கூர்ந்து நோக்கினாள். மாளிகையின் பிரதான கதவினருகே திட்டுத் திட்டாக மண் சிந்தியிருந்தது. அந்த மண்ணை கைகளில் எடுத்தாள் கிழவி.

மண் கையில் இருந்த பகுதி கறுப்பாக மாறத் தொடங்கியிருந்தது. “இது என்னுடைய சக்தியின் தன்மைக்கு அப்பாற்பட்ட அரிய வகை மண்” என்று தனக்குத் தானே கூறிக் கொண்டாள். பிறகு திடீரென அந்த மண்ணை ஒரு இராட்சதன் மீது தூவி விட்டு உடனேயே மாயக்கண்ணாடியிடம் ஓடிச் சென்றாள்.

“ஏய்! மாயக்கண்ணாடியே! வாசலில் நிற்கும் அந்த அடிமைகளை ஒரு முறை காட்டு” என்று கூறினாள்.

அவளது கட்டளைப்படி இரு இராட்சதர்களையும் கண்ணாடி காட்டியது. ஆனால் மண் தூவப்பட்ட இராட்சதனின் ஒரு சில உடற்பகுதிகளை கண்ணாடியில் தெரிந்தன. இதனைக்கண்ட மாயக்கிழவியின் முகத்தில் கொடூரமான புன்னகை ஒன்று தோன்றியது.

*(மந்திரக் கிழவி வருவாள்...)*

**கேள்வி ஒன்று; பரிசு ஆயிரம் - 12**

*சரியான விடை -* **மோல்டா**

*இந்தப் போட்டியில் ஏராளமான மாணவர்கள் ஆர்வத்தோடு பங்கு பற்றி யிருந்தார்கள். அவர்களில் 1000 ரூபா பரிசினைப் பெறுவதற்காக குலுக்கல் மூலம் வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலி -*

**ச.லியாணி**

*மன்/தலை/புனித லோரன்ஸ் றோ.க.த.பாடசாலை*

*01. பா.லசந்தபிரியன், தரம் - 03, கொழும்பு/ பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி.*
*02. எஸ்.ஏ. மேத்தா, தரம் - 07, மட்/ மெதடிஸ்த மத்திய கல்லூரி.*
*03. பத்ரா பிரபாகர சர்மா தரம் - 09 . அ- பெப்டிஸ் - தமிழ் - மகா- பாடசாலை கெக்கிராவ.*
*04. கு. அபினாஷ் தரம் -4, யா/ மகாஜன கல்லூரி.*
*05. ரா.உஷாந்தினி , தரம் - 10, யா/ ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி புத்தூர்.*

## அறிந்து கொள்வோம்

முதன் முதலாக தொழில்புரட்சி நடைபெற்ற நாடு - இங்கிலாந்து

குளோரினிலிருந்து தயாரிக்கப்படும் மருந்து பொருள் - குளோரோஃபார்ம்

மனிதனுடைய உடல் உறுப்புகளில் வாழ்நாள் முழுவதும் ஆரோக்கியமாக இருப்பது - மூளையில் உள்ள செல்கள்

எச்.பி.ஜே. பைப்லைன் திட்டமானது எதை கொண்டு செல்ல உருவாக்கப்பட்டது - இயற்கை வாயு

இத்தாலி நாட்டின் தேசிய மலர் - லில்லி

மின் விளக்கை கண்டுபிடித்தவர் - ஹம்ப்ளி டேவி

ஒரு மணி நேரத்தில் 74 கி.மீ வேகத்தில் ஓடுவது - நெருப்பு கோழி

ஏறும்புகளில் உள்ள வகைகள் - 14,000

(அவைகள் ஒரு போதும் உறங்குவதில்லை)

நயாகரா நீர்வீழ்ச்சியை கண்டுபிடித்தவர் - லூயிஸ் ஹெனபின்

ஆசியாவில் முதன் முதலாக தொழில் மயமான நாடு எது - ஜப்பான்

சூரிய குடும்பத்தில் அதிக வெப்பமான கிரகம் - புதன்

சுறா மீனின் வாழ் நாள் - 20 முதல் 30 ஆண்டுகள்

கொசுக்களில் 3500 வகை உள்ளது


## கெடுதலை மறந்து நன்மை செய்

*குட்டிக் கதை*

அந்த ஊரை ஒட்டியிருந்தது ஒரு பெரிய காடு. காட்டில் அதிகமான மரங்கள் இருந்தன. அங்கு பெருத்த சத் தத்தோடு ஆறும் ஓடி கொண்டிருந்தது. அந்தக் காட்டில் வளர்ந்திருக்கும் மரங்களை வெட்டி விற்று பிழைப்பை நடத்தி வந்தார் முனுசாமி. முனுசாமிக்கு பெரிதாக படிப்பறிவு ஒன்றும் இல்லை யென்றாலும் பயபக்திகள் நிறைந்தவர். என்றும் போல அன்றும் காட்டுக்கு நடையை கட்டிவிட்டார் முனுசாமி. ஒரு பெரிய மரமாக பார்த்து வெட்டிவிட்டால் இன்னும் இரண்டு நாட்களுக்கு அதோட விறகை வித்துட்டு ஓய்வு எடுக்கலாம் என்று மனசுல நெனச்சிக்கிட்டே காட்டிற்கு நடுவில் ஓடிக் கொண்டிருக்கும் ஆற்றின் கரைகளில் மரங்களை தேடிச் சென்று கொண்டிருந்தான் முனுசாமி. அப்பதான் ஓங்கி உயர்ந்து நிழல் பரப்பியிருந்த மரம் கண்ணில்பட்டது.

இப்போது முனுசாமிக்கு இந்த மரம்தான் இன்னைக்கு தீனி. அதாவது இன்னைக்கு இத வெட்டிகிட்டு போனா அடுத்த நாலு நாளைக்கு வேலைக்கு அலையாம வீட்டுலயே இருக்கலாம்னு முனுசாமிக்கு தோணுச்சி. எடுத்துக்கிட்டுபோன கோடாரிய மரத்துக்கிட்ட வெச்சிட்டு அந்த மரத்த வெட்டுறதுக்கு தயாரானான். ஒருவழியா வெட்டவும் ஆரம்பிச்சிட்டான் முனுசாமி.

மரத்த வெட்டிக்கிட்டு இருந்த போது கோடாரி மரத்துக்கிட்ட 'என்ன மன்னிச்சிடுங்க... என்னோட முதலாளி உங்கள வெட்டுறது, எனக்கு சுத்தமாவே புடிக்கல... ஆனா நான் என்ன செய்ய முடியும் சொல்லுங்கன்னு' தன்னோட சோகத்த மரத்துக்கிட்ட சொல்லிச்சு. அதுக்கு மரம், 'உன்மேல எந்த கோபமும் இல்ல... ஆனா இந்தக் காட்டுல என்ன மாதிரி ஒவ்வொரு மரமும் உருவாக நாற்பது வருஷத்துக்கும் மேலாகுது. எங்கள வெட்டுறது இந்த மனிதர்களுக்கு ரொம்ப சுலபம்தான். ஆனா எங்கள மாதிரி பெரிய மரமா வளர்வதற்க்கு இந்த மனிசனோட ஆயுளையும் தாண்டிடும். தன்னோட ஒருநாள் பிழைப்புகாக என்ன வெட்டுற இந்த மனுசனுக்கு தெரியலயே, இவங்கலாம் உயிர்வாழறதுக்கே தேவையான காற்றைகூட நாங்கதான் வெளிப்படுத்து



றோம்னு. எங்களோட தழைகளில் இருக்கிற பச்சயம் தான் இந்த உலகத்துல இருக்கிற மொத்த உயிர்களுக்கும் தேவையான காற்றும் மழையும் பெய்றதுக்கு தேவையான எல்லா வழிகளையும் செய்யுது. ஆனா இந்த முனுசாமி மாதிரியான மனுஷங்களுக்கு இதுலாம் தெரியாம எங்கள அழிச்சி தங்களுக்கான ஆயுளை அவங்களே குறைச்சிக்கிறாங்க. இப்போ இந்த முனுசாமிக்கு ஒரு பாடம் கத்துக்குடுத்தா இந்த வேலைய விட்டு வேற வேலைக்கு போயிடுவார். என்னைப்போன்ற மற்ற மரங்களையும் காப்பாத்திடலாம்னு. ஆனா அதுக்கு உன்னோட உதவி முக்கியம்னு மரம் சொன்னது.' இதைக் கேட்ட கோடாரி உடனே 'நான் என்ன செய்யனும்' என்னு கேட்டுச்சு. 'என்ன வெட்டிக்கிட்டு இருக்கிறப்ப நீ அந்த கைப்பிடியிலிருந்து கழட்டிகிட்டு இந்த பக்கத்துல ஓடுற ஆத்துல விழுந்துடு, அப்புறம் நான் பார்த்துக்கிறேன்னு' மரமும் தன்னோட யோசனைய சொல்லிச்சு.

இதைக்கேட்ட கோடாரி மரம் சொன்ன மாதிரியே ரொம்ப நேரமா வெட்டிகிட்டு இருந்ததால மரைகழண்டு பக்கத்துல ஓடுற ஆத்துல விழுந்திடுச்சு. முனுசாமிக்கு ஒரு நிமிஷம் உயிரே போயிட்டதுபோல இருந்தது. வேற வழி இல்லாத முனுசாமி, இந்த கோடாரிய எடுத்தே ஆகணும்னு தீர்மானம் பண்ணிட்டு ஆத்துல இறங்க முயற்சி பண்ணினார். ஆனா காட்டாற்று வெள்ளம் ரொம்ப வேகமா ஓடிக்கிட்டு இருந்தது. பயம் ஒருபக்கம் இருந்தாலும் ஆத்துல விழுந்த கோடாரிய எடுத்தே ஆக வேண்டிய கட்டாயம். ஒருவழியா ஆத்துல பொறுமையா இறங்கி தேட தொடங்கிட்ட முனுசாமி சற்றும் எதிர்பாராத நேரத்துல தண்ணியோட வேகம் அதிகமானதால எதிர் நீச்சல் போட முடியல. இப்ப அவனுக்கு இன்னைக்கு நாம உயிர்பிழைக்க போறது இல்ல. நம்ம பசங்கலாம் பாவம்னு பயந்தான்.

அந்த நேரம் இதயெல்லாம் பார்த்துக்கிட்டு இருந்த அந்த பெரிய மரம் தன்னோட ஆத்து பக்கமா சாய்ஞ்சி இருக்கிற கிளைய முறிந்து ஆத்துல விழ செய்தது. எப்புடியோ அத புடிச்சிக்கிட்ட முனுசாமியும் பொறுமையா ஆத்தோட வெள்ளம் குறைய ஆரம்பிச்ச பிறகு கரை வந்து சேர்ந்தான். அவனோட அதிர்ஷ்டம் அந்த கோடாரியும் கிடைச்சிடுச்சி. இப்ப கரை வந்து சேர்ந்த முனுசாமிக்கு இப்ப அந்த மரத்த பார்த்தப்ப தனக்கு உயிர்கொடுத்த சாமியா தெரிஞ்சது. இந்த மரம் இருக்கவேதான் நம்ம இப்ப உயிரோடவே இருக்கோம்னு தோணிச்சி. அப்பதான் இனிமே மரங்களே வெட்டக்கூடாது. இந்த மாதிரி மரங்கள் இருந்தாதான் பல பேருடைய உயிரக் காப்பாத்தும். இனிமே எந்த மரத்தையும் வெட்டக் கூடாதுன்னு மனசுல தீர்மானம் பண்ணிக்கிட்டான் முனுசாமி.

# தமிழகத்தின் ஈழ அகதிகள்




தொ. பத்திநாதன்

பகுதி 2

இப்படித்தான் ஒருதடவை தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த சம்மாட்டி என்று அழைக்கப்படும் கடல் தொழில் புரியும் பெரும் முதலாளியின் மகன்கள் மூவர் சேர்ந்து தமிழ்நாட்டுக்குப் படம் பார்க்கப் புறப்பட்டார்கள். வரும் வழியில் கடத்தல்காரனோ அகதியோ அகப்பட்டவர்களையும் ஏற்றி வந்தார்கள். மண்டபம் முகாம் பகுதிக்கு வந்து பிறகு எந்திரத்தை மட்டும் எடுத்துக்கொண்டு படகைக் கடலில் விட்டுவிட்டு முகாமிற்கு வந்தார்கள். முகாம் நண்பர்கள் சிலர் உதவியுடன் எந்திரத்தைப் பத்திரப்படுத்தி வைத்துவிட்டு தமிழ்நாட்டில் ஒரு வாரம் சுற்றித் திரிந்திருக்கிறார்கள்.

தமிழ் நாட்டைச் சுற்றிய பொடியன்கள் தகப்பனுக்கு தொலைபேசி அழைப்புவிட, வேறு ஒரு படகு மண்டபம் வந்தது. அந்தப் பொடியன்கள் திரும்பி அவர்கள் ஊருக்கு, பத்திரப்படுத்தி வைத்திருந்த எந்திரத்தை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்.

வெறும் படகு மட்டும் M பிரிவு பார்வையில் பட்டது அவர்கள் இன்று வரை விசாரித்துக்கொண்டிருக் கிறார்கள்.

நான் என்ன எழுதினாலும் அதில் Q பிரிவு பற்றி எழுதாவிட்டால் எழுதியது நிறைவு பெறாது. அந்த வகையில் மண்டபம் முகாமில் ஒரு Q பிரிவு அதி காரியிருந்தாராம். அவருக்கு யார் மேலாவது சந்தேகம் வந்தால் கூப்பிட்டுத் தோளில் கையைப் போட்டுப் பேசிக்கொண்டே நடப்பாராம் அவ்வாறு பேசிக்கொண்டே நடக்கும்போது தோளில் உள்ள கையை அப்படியே தோளிலிருந்து சற்று இறக்கி கை தசைநார்களை அமுக்கி அமுக்கிப் பார்ப்பாராம். ஆயுதப் பயிற்சி எடுத்திருந்தால் தசை நார்கள் இறுகியிருக்கும்.

அந்த அதிகாரி கடுமையாக நடந்துகொள்வதும் பொதுப்படையாகத் திட்டுவது போன்ற பல விடயங்கள் அந்த மக்களுக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருந்தது. ஒரு இயக்கப் பொடியனை அவர் படுத்திய பாடு அவனுக்கு உச்சக்கட்ட எரிச்சலை ஏற்படுத்தியது. அந்தப் பொடியன் கள்ளத்தோணி ஏறி இலங்கை புறப்பட்டு சிறிது கடலுக்குச் சென்றதும் அந்த அதிகாரிக்குப் போன் போட்டு தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளான். அவன் கோபம் அடங்கும் மட்டும் திட்டிவிட்டுக் கைபேசியைத் தூக்கி கடலில் வீசிவிட்டுச் சென்று விட்டான்.

இதுபோல பல சம்பவங்கள் இருட்டில் நடக்கின்றன. அத்துமீறி அதிகாரத் திமிறில் நடந்துகொள்ளும் Qபிரிவு அதிகாரிகளே மிரட்டப்பட்டதாகவும் தகவல்கள் வருகின்றன. தமிழ்நாட்டில் உள்ள 112 முகாம்களிலும் மிகவும் பிரச்சினையானது மண்டபம் அகதிகள் முகாம் தான். அதனால் அரசின் கட்டுப்பாடுகள் அனைத்தும் இங்கு முழுமையாகக் கடைப் பிடிக்கப்படுகின்றன.

அனுமதியில்லாமல் வேறு முகாம்வாசிகள் உறவினரைப் பார்க்க இங்கு வர முடியாது. இந்த முகாமில் உள்ளவர்கள் வெளியே போகவும் முடியாது.

வெளிநபர்கள் எவரும் உள்ளே வர அனுமதிக்கப் படுவதில்லை. சி.பி.எம். கட்சியைச் சேர்ந்த பெரியகுளம் மக்கள் பிரதிநிதி லாசர் மற்றும் அண்ணாதுரை ஆகியோர் முகாமிற்குள் செல்ல முயற்சித்து முகப்பு வாயிலில் காவலர்களால் தடுத்து நிறுத்தப்பட்டார்கள்.

இலங்கையில் உள்ள முள்வேலி முகாமிற்கும் இந்த முகாமிற்கும் எனக்குத் தெரிந்த வித்தியாசம், இலங் கையில் முள்வேலியைச் சுற்றிச் சுருள் கம்பி இருக்கும். இங்கு முள் கம்பியே வேலியாயிருக்கும்.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் கட்டிய வீடுகள் இன்னும் உள்ளன. அகதிகள் அதிகம் வரவே அவை போது மானதாக இல்லாததால் எம்.ஜி.ஆர் ஆட்சியில்தான் இந்த முகாமிற்கு ஒரு விடிவு கிடைத்தது. புதிதாக வீடுகள் கட்டப்பட்டன. கழிவறைகள், சாலைகள் தெருவிளக்குகள் போன்றவை கூடுதலாக அமைக்கப்பட்டன. 260 கிணறுகள் இருப்பதாக ஒரு தகவல். தற்போது 650 குடும் பங்கள் இருக்கும் வீடுகள் தவிர்த்து மற்ற வீடுகள் இடிந்து பாழடைந்து முட்புதர் மண்டிப்போய் பராமரிப்பின்றிக் கிடக்கின்றன.

கடந்த கருணாநிதி ஆட்சியில் மண்டபம் முகாமிற்கு நிதி ஒதுக்கப்பட்டது. அந்தப் பணத்தில் பிரதான தார்ச்சாலை மட்டும் போடப்பட்டது. வீடுகள் பராமரிப்புக்காக சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவை பாதியில் நிறுத்தப்பட்டது ஏன் என்று தெரியவில்லை.

பிரதான வாயில் வழியாக உள்ளே நுழைந்தாலே பராமரிப்பில்லாத கட்டிடங்களும் இடிந்த கட்டிடங்களும் எங்கு பார்த்தாலும் கண்ணில்படும். இவை முகாமிற்கு அவலட்சணமான தோற்றத்தைத் தருகின்றன.

முகாமிற்குள் சிறைச்சாலை மற்றும் காவல்நிலையம் இருக்கிறது. முகாமிற்கு முன் பக்கம் பிரதான இரா மேஸ்வரம் சாலை. பின்பக்கம் கடல் பகுதி. முகாமை விட்டு வெளியே போக உள்ளேவர இரகசிய வழிகளும் உண்டு. அங்கு வாழக்கூடிய அனைவரின் முகங்களும் வாயில் காவலில் இருக்கும் காவலர்களுக்கு நன்கு தெரியும்.

முகாமிற்குள் அனுமதியில்லாமல் போக வேண்டு மானால் பழைய கைலி, கசங்கிய சட்டை, காலில் ரப்பர் செருப்பு, சீவாத தலை இந்த சுய தோற்றத்துடன்

தைரியமாக விறுவிறு என்று நடந்து நுழைவாயில் வழியாகவே செல்ல முடியும். யாரும் கண்டுகொள்ள மாட்டார்கள். இப்படி முகாமிற்குள் நீங்கள் சென்றுவிட லாம். ஆனால் அங்கும் காட்டிக் கொடுப்பவர்கள் நிறைய



இருக்கிறார்கள்.

மதுரையில் உச்சம்பட்டி முகாமில் 527 குடும்பங்கள் இருக்கின்றன. இங்கு 22 பேர் ஙி பிரிவுக்கு காட்டிக் கொடுப்பவர்களாகவும் நெருக்க மானவர்களாகவும் இருப்பதாக அறிய முடிகிறது.

மொத்தம் உள்ள 112 முகாம்களில். 19,733 குடும்பங்களைச் சேர்ந்த உள்ள 67,165 (ஜனவரி 2013) பேர்களில் எத்தனை பேர் காட்டிக்கொடுப்பவர்கள் இருப்பார்கள்? காட்டிக்கொடுக்கும் நபர்கள் முகாம் மட்டத்தில் பெரும்பாலும் சற்று வசதியானவர்களாக இருப்பார்கள். முக்கியமாக இவர்கள் முகாம் கட்டுப் பாட்டை மீறுபவர்களாகவும் சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்படக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் முகாமிற்குள் 20% முதல் 30% வரை வட்டிக்குப் பணம் கொடுப்பவர்கள். அதிகாரிகளின் நெருக்கம் காண்பித்து வட்டி வசூல் செய்ய வசதியாக இருக்கும். இவர்கள் நான்கு சக்கர வாகனம் வைத்திருப்பார்கள். அசையும் அசையா சொத்து அகதிகள் வாங்கக் கூடாது என்பது விதி. இவர்களைப் போன்றவர்களுக்கு சலுகைகள் காண்பிப் பதன் மூலம் அதிகாரிகளின் வேலை சுலபமாகிப் போகிறது. இனஒற்றுமை என்பது போய், இன்று நீ என்னைக் காட்டிக்கொடுக்காதே, நான் உன்னை காட் டிக்கொடுக்க மாட்டேன். நாம் இருவரும் மற்றவனைக் காட்டிக் கொடுக்கலாம் என்ற நிலையுள்ளது.

உச்சிப்புளி, மண்டபம் போன்ற பகுதிகள், தற் போதைய காலங்களில் இந்திய இராணுவத்தின் பார் வையில் இருக்கிறது. இங்கு விமான ஓடுதளம், ராடார் போன்ற சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் உள்ளன. இப்படி ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் அகதிகளாக ஏன் வாழ வேண்டும்? இந்த முகாம் மக்களை தமிழ்நாட்டின் பிற பகுதிகளுக்கு மாற்றலாமே!

மண்டபம் முகாம் குறித்து முக்கியமான தகவல் ஒன்றைப் பதிவு செய்யவேண்டும். 25.07.2012 தேதியிட்ட ஜூனியர் விகடனில் இராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜவாகிருல்லா ஒரு தவறான தகவலைப் பதிவு செய்துள்ளார். அதாவது இவர்கள் சமையல் செய்வதற்காக இலவச கேஸ் சிலிண்டர்கள் கடந்த ஆட்சியில் வழங்கப்பட்டுள்ளன. தற்போது அவைகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன. இது முற்றிலும் தவறான கூற்று. எந்த ஆட்சியிலும் எந்தக் காலத்திலும் இவர்களுக்கு கேஸ் சிலிண்டர்கள் வழங்கப்பட வில்லை.

மண்டபம் அகதிகள் முகாமில் நடந்தது என்ன வென்றால், முகாமிற்குள் திருட்டுத்தனமாகக் கூடுதல் விலைக்குச் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வாங்கி யுள்ளார்கள். முறையான சமையல் எரிவாயு பதிவில் லாமல், சமையல் எரிவாயு முகவர் கூடுதல் லாபம் என்பதால் முகாமிற்குள் அதிகமாக விற்பனையும் செய்துள்ளார். இதன் விளைவு முகாமிற்கு வெளியே முறையாகப் பதிவு செய்தவர்களுக்கு எரிவாயு சரியாக விநியோகிக்கப்படவில்லை. அந்த உயர்வு மேல் அதிகாரிகளுக்கு முறையிட சம்மந்தப்பட்ட அதிகாரிகள் அனுமதியில்லாமல் விற்கப்பட்ட எரிவாயு சிலிண்டர்கள் அனைத்தையும் பறிமுதல் செய்துவிட்டார்கள். பின்பு அகதிகள் எங்களுக்கும் சமையல் எரிவாயு வேண்டும் என்று முறையிட்டனர். எனவே தற்போது முறையாகக் காசு கொடுத்து பதிவு செய்தவர்களுக்குச் சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்படுகிறது.

(இன்னும் வளரும்)

# எதை நாம் செய்கிறோமோ, அதுவே நமக்கும் நடக்கும்

ஒரு நாள் சாயங்கால வேளையில் வயதான பெண்மணி ஒருவர் கார் அருகில் வெகு நேரமாக நிற்பதை ஒருவர் கவனித்தார். வாகனங்கள் செல்லும்போது அந்தப் பெண்மணி கை காட்டி நிறுத்தப்பார்த்தார், ஆனால் எந்த வாகனமும் நிற்கவில்லை. அந்த நபர் அருகில் சென்று என்ன பிரச்சினை என்று அந்தப் பெண்மணியிடம் கேட்டார். கார் டயர் காற்றுஇல்லாமல் போய் விட்டது என்று அந்தப் பெண்மணி கூறினார். என் பெயர் தயாளன் நீங்கள் காரில் உட்காருங்கள் நான் டயர் மாத்திக் கொடுக்கிறேன் என்று டயரைக் கழட்ட ஆரம்பித்தார். சிறிது நேரத்தில் மிகவும் கஷ்டப்பட்டு டயரை மாத்தினார். அந்தப் பெண்மணி உங்களுக்கு நான் எவ்வளவு பணம் தர வேண்டும் என்று கேட்டார். நான் சிறியதாக ஒரு டீக்கடை நடத்தி வருகிறேன், அதில் இருந்து வரும் பணமே எனக்குப் போதும். நீங்கள் பணம் எதுவும் தரவேண்டாம் என்றார்.

நீங்கள் கஷ்டப்படும் நேரத்தில் என்னாலான உதவி செய்தேன் அவ்வளவே. நீங்கள் பண உதவி செய்ய வேண்டும் என்றால் வேறு யாராவது ஒரு நபர் கஷ்டத்தில் இருக்கும்போது என்னை நினைத்துப் பாருங்கள், அவர்களுக்கு உதவி செய்யுங்கள் என்றார்.

உதவி செய்வது என்பது ஒரு சக்கரம் மாதிரி. சுழன்று கொண்டே இருக்க வேண்டும். நான் உங்களுக்கு உதவி செய்தேன் நீங்கள் வேறு யாருக்காவது கஷ்டத்தில் இருக்கும்போது உதவி செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு தயாளன் நடக்க ஆரம்பித்தார். அந்தப் பெண்மணி தயாளனை ஆச்சரியத்துடன் பார்த்து விட்டுக் காரை எடுத்து கொண்டு சென்றார். வழியில் தலைவலி எடுப்பது போல் இருக்கவே அருகில் உள்ள டீக்கடை அருகே காரை நிறுத்திவிட்டு உள்ளே சென்றார்.

டீக்கடை பார்ப்பதற்கு ரொம்பவே பரிதாபமாக இருந்தது. உள்ளே இருந்து ஒரு பெண் வந்து என்ன வேண்டும் அம்மா என்று கேட்டார். வயதான பெண்மணி டீக் கடையில் வேலை செய்யும் பெண்ணை பார்த்தார், அந்தப் பெண் ஒன்பது மாதக் கர்ப்பிணி என்பதை அவளிடம் பேசித் தெரிந்து கொண்டார்.

குடிக்க டீ கொண்டு வாம்மா என்றாள். தயாளன் சொன்னது அவருக்கு நினைவு வந்தது. அந்த அம்மா டீ குடித்துவிட்டு 5000 ரூபாய் பணத்தை மேசை மேல் வைத்து விட்டுச் சென்று விட்டார்.


டீ க்கடையில் வேலை செய்த பெண் காபி டம்பளரை கழுவி வைத்து விட்டு வந்தார். மேசையில் கட்டாகப் பணம் இருப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். அதை எடுத்து கொண்டு அந்த வயதான பெண்மணியிடம் கொடுக்க ஓடினார், அதற்குள் கார் கிளம்பிச் சென்று விட்டது. கடையில் இருக்கும் வேலை எல்லாம் முடித்து விட்டு, கையில் அந்த வயதான பெண்மணி விட்டு சென்ற பணத்தையும் எடுத்து கொண்டு வீட்டுக்கு சென்றார்.

பிரசவ செலவுக்கு என்ன செய்ய போகிறோம் என்று புலம்பி கொண்டு இருந்த தன் கணவருக்கு இந்த பணத்தை காட்ட வேண்டும் என்று அருகில் சென்றார். ஆனால் மிகுந்த அசதியால் தூங்கி கொண்டு இருந்தார் நம்ம தயாளன்.

எதை நாம் செய்கிறோமோ, அதுவே நமக்கும் நடக்கும்.



## சொற்சிலம்பம் போட்டி இல. 598



**மேலிருந்து கீழ்**

1. மேன்மையான தன்மை.
2. வரி.
3. உலகம்.
4. இடம்.
5. குளிகை.
8. மனைவி.
9. கைபிடி.
10. அருமையானது என்பதைக் குறிக்கும்.
12. ஒரு திசையின் சுருக்கம்.
13. நிகழும்.
15. பண்பு.
16. ஒரு பாம்பின் ரகம்.
18. சாவியைப் பயன்படுத்தி செய்ய உத்தரவிடுவது.
19. பின் அல்ல.
20. கூட்டல் குறி.

**இடமிருந்து வலம்**

1. பெறுமதி.
4. அரசியலில் இதற்குத் தான் ஆசை.
6. மறு.
7. தேவையைப் பூர்த்தி செய்து கொடுத்தல்.
9. பாரமான தன்மை.
10. இது ஓய்வதில்லை.
11. ஒரு வகை பருப்பு.
13. இந்தியாவின் முதல் பிரதமர்.
14. பெரிய கயிறு.
15. காந்தம் இதைக் கவரும்.
17. பதி வைக்கப்பட்ட நாற்று.
19. மூப்புற்றுப் பழுத்தல்.
20. கழித்தல் குறி.
21. நல்லது.
22. வெறும் வாய்வீச்சுக்காரன்

அனுப்புபவர் பெயர்:..........................................................

விலாசம்:..........................................................

..........................................................

கையொப்பம்:..........................................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 598

சொற்சிலம்பம் போட்டி 598ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2013 ஆம் ஆண்டு டிசெம்பர்18 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் 25ஆம் மற்றும் 2014 ஜனவரி 01ம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 596க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.சதிபதி, 2பாதகம்,3.தினம், 4.அந்தர், 5.சதம்,6.தின், 9. திறப்பு, 12.மாலை,13.குடும்பம் 14.அம்மி, 15.நட, 16. கோதுமை,17.ரசம்,18.விடுதி, 20.பாசி,

**இடமிருந்து வலம்**

1.சம்பாதி,4.அசதி,7.தனவந்தன்,8.பதிகம்,10.தம்,11.திறம், 12. மார், 14.அலை, 15.நடு, 16.கோபுரம், 18.விடம், 19.சமிபாடு,21.மையம், 22.சிதிலம்,

### போட்டி இல. 595இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** — செல்வன் எஸ்.ஏ. மேத்தா, இல: 344,"சித்திரகூடம்", கஜுவாஞ்சிக் குடி 30200.

**2ஆம் பரிசு** — திருமதி இவோன் டீ மெல், இல: 04,ஓடக்கரை வீதி, யாழ்ப்பாணம்.

**3ஆம் பரிசு** — ஸல்ஹா மர்யம், ரஹ்மத் மன்ஸில்,இல: 141/1 குமாரதுங்க மாவத்தை,மாத்தளை

### பாராட்டுப் பெறுவோர்

(1) ஏ.பிரதிபன்,
தர்மக் கேணி, பளை, கிளிநொச்சி.

(2) இ. ரேணுகா,
இல: 85/4, கார்மல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

(3) பீ.எஸ்.ஏ. தாஹிர்,
இல: 10/1, மத்திய வீதி, காத்தான்குடி 03.

(4) சி. கிஷ்ணவேள்,
கல்வியற்கல்லூரி, பூந்தோட்டம், வவுனியா.

(5) செல்வன் ஸ்ரீலக்ஷன்,
ஆண்டு -06, யா/ மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

(6) வை.எல். இமாம்,
அல் அறபா வீதி, அட்டாளச்சேனை-10.

(7) க. தனபாலசிங்கம்,
முதலாம் வட்டாரம், புங்குடுதீவு.

(8) ச.பரமேஸ்வரி,
இல: 43/31 திசவீரசிங்கம்சதுக்கம் மேற்கு, மட்டக்களப்பு.

(9) வி. விஷ்ணுஜன் ,
சிவகுரு வீதி, கேணியடி, கொக்குவில்.

(10) சி. இராசரத்தினம்,
பூம்பொழில், திருநகர் தெற்கு, கிளிநொச்சி.

சிறுகதை

# அன்பான உறவுகள்

ரீ. சிந்துஜா
திருநெல்வேலி.



எ. றோகினி.
மல்லாகம்.

பூமியை முத்தமிடும் மழைத்துளியை கண்வெட்டாது பார்த்துக் கொண்டிருந்தாள் அருணா. இரண்டு நாட்களாக ஓயாத மழை . வெளியில் எங்கும் செல்லமுடியாத நிலையில் வீட்டிற்குள்ளேயே அடைபட்டுக்கிடப்பது பெரும் பாடாகிப் போனது. முதல் நாள் மழையில் லேசாக நனைந்து விட்டதால் காய்ச்சல் வந்துவிட்டது அருணாவுக்கு. வேலைக்கு செல்ல முடியாமல் சித்தி கொடுத்த சாப்பாட்டையும் சாப்பிட முடியாமல் வெறுப்புடன் இருந்தாள். அந்த நேரத்தில் தன் அண்ணன் கூடவே இருந்தால் எவ்வளவு சந்தோசமாக இருக்கும் என அவள் மனம் தவித்தது.

சிறு வயதிலேயே பெற்றோரை இழந்த அருணாவையும் அவள் இரு தங்கைகளையும் அவளின் சித்தியே பொறுப்பேற்று வளர்த்தாள். ஆனாலும் பாடசாலைக் காலம் முழுவதும் அவர்கள் விடுதியில் தங்கிப் படிக்க ஏற்பாடு செய்துவிட்டாள். அருணா தன் படிப்பு முடிந்ததும் தனக்கென சிறியதொரு வேலையைச் செய்யத் தொடங்கினாள். அந்த செலவிலேயே சித்தியின் வீட்டில் தங்கியிருந்து தன் தங்கைகளை படிப்பித்தாள். இதனால் அவள் தன் சித்திக்கு எந்தவித சிரமத்தையும் கொடுக்கவில்லை. சித்தி அவளின் மனம் நோகும் படி நடந்தாலும் கூட அவள் எதையுமே பொருட்படுத்துவது இல்லை.

வாழ்க்கை எனும் நதி நிற்காமல் ஓடிக் கொண்டே சென்றது. அருணா அன்றும் பஸ்ஸில்தான் வேலைக்குச் சென்றாள். அப்போது தான் அந்த இளைஞனை அவள் பார்த்தாள். அவனை எங்கோ சந்தித்ததாக அவளுக்கு ஞாபகம். ஆனால் யாரென்று கண்டு பிடிக்க முடியாமல் குழம்பினாள். அவள் குழப்பத்தை அவனே தீர்த்து வைத்தான். "அருணா என்ன அப்படி பார்க்கிறீங்க... என்னை யாரென்று தெரிகிறதா?" ' இ.. இல்லை எனக்கு ஞாபகம் இல்லை'' என்றாள். " மறந்துட்டீங்களா. நான் தான் சதீஸ். கல்லூரியில படிச்சோமே. இப்ப ஞாபகம் இருக்க?" " ஓ... சதீஸ் நீங்களா... நீங்க ஆளே மாறீட்டீங் கள் .அது தான் மறந்துட்டன். மன்னிச்சிருங்க" என்றாள். பணிவாக." ஓகே... ஓகே... பரவாயில்லை அருணா, நாங்க வேற ஊருக்குப் போனதால எல்லாம் மறந்து போயிட்டுது" என் றான். இருவரும் குசலம் விசாரித் துக் கொண்டனர்.

கல்லூரிக் காலத்திலேயே சதீஸ் அருணாவுக்கு எல்லா வகையிலும் உதவுவான். அருணாவை விட அவனுக்கு மூன்று வயது அதிகம். அவள் அவனை அண்ணா என்று தான் அழைப்பாள். அவனும் அருணாவை தன் கூடப்பிறந்த தங்கையைப் போல் நேசித்தான். அதே அன்பை இப்பவும் தொடர்ந்தார்கள். சதீஸ் அருணா கேட்காமலேயே அவளு க்கு எல்லா உதவிகளையும் செய்தான்.

அருணாவுக்கும் சதீஸிற்கும் இடையே இருப்பது சகோதர பாசம். தூய அன்பு. அது அவர்களுக்குமட்டுமே தெரியும். ஆனால் அது மற்றவர்களுக்கு தெரியாமல் போனது தான் அவர்களின் துரதிஸ்டம். உலை வாயை மூடினாலும் ஊர்வாயை மூட முடியாது என் பார்கள். சதீஸ் அருணாவின் புனிதமான உறவை சந்தேகப்பட ஆரம்பித் தனர். இருவரும் ஒருத்தருக்கொருத்தர் உதவுவதை காதல் என்று கதை கட்டி விட்டனர். இருவரின் மனமும் உடைந்து விட்டது. இதைப்பற்றி ஊரார் சித்தியிடமும் சொல்லி விட்டனர். சித்தி சும்மா இருப் பாளா? ருத்ர தாண்டவம் ஆடி விட்டாள். சதீஸை திட்டிவிட்டாள். வேதனை தாங்க முடியாமல் சதீஸ் வேலையை மாற்றலாக்கிக் கொண்டு ஊரை விட்டு சென்றுவிட்டான்.

அண்ணனின் பிரிவு அருணாவை வெகுவாகப் பாதித்தது. அவனை எப்போதாவது ஒரு நாள் சந்தித்து மன்னிப்புக் கேட்க வேண்டும் என அவள் மனம் எண்ணியது. சித்தி கொடுத்த சாப்பாட்டில் கொஞ்சத்தை உண்டுவிட்டு அப்படியே படுத்துறங்கினாள்.நீண்ட நாட்களின் பின்னர் அருணாவுக்கு அவளின் சித்தி திருமணத்தை நடாத்தி வைத்தாள். கணவனுடன் அவள் சந்தோசமாக குடும்பம் நடத்தினாள். ஆனாலும் அந்த சந்தோசம் அவளுக்கு நிலைத்து நிற்கவில்லை. யாராவது சந்தோசமாக வாழ்ந்தால் அதைப்பார்த்து சந்தோசத் துடன் வாழ்த்துகின்ற மக்களும் இல்வுலகில் தான் இருக்கின்றனர். அதே நேரம் பொறாமைப்பட்டு குடும்பத்தை பிரிக்கின்ற மக்களும் இவ்வுலகி னில் தான் இருக்கின்றனர். அப்படி பொறாமைப்பட்ட சனங்கள் அருணாவின் குடும்பத்தையும் பிரித்துவிட்டனர்.

அருணா சதீசுடன் பழகியதை அருணாவின் கணவனிடம் சொல்லி விட்டனர். முதலில் அவன் நம்பவில்லை. ஆனால் நாளாக நாளாக சனங் களின் வேண்டாத கற்பனைக் கதை களினால் அவன் அருணாவைச் சந்தே கப்பட ஆரம்பித்தான். தினமும் குடித்துவிட்டு அவளை அடித்து சித்திரவதை செய்தான். மனவேத னையுடன் அவளுக்கு உடலில் ஏற் பட்ட காயங்களால் உடல் வேத னையும் அதிகரித்தது. அவள் எல்லா வற்றையும் பொறுத்துக் கொண்டு பொறுமையாக இருந்தாள். அவளின் குடிகாரக் கணவன் எல்லாவற் றுக்கும் அவளை சந்தே கித்து இறுதியில் அவளை தனியே தவிக்கவிட்டுச் சென்றுவிட்டான்.

கதிகலங்கிப் போனாள் அருணா. எதிலுமே பிடிப்பற்று இருந்தாள். நீண்ட நாட்களாக இப்படியே இருந்தவள் கலங்குவதால் பயனேதும் இல்லை என்பதைப் புரிந்து கொண்டு சோகத்தை ஒரு புறம் வைத்து விட்டு வேலைக்குப் போக ஆரம்பித்தாள். தன் சகோதரிகளுக்கு திருமணம் செய்து வைத்தாள். தனியே இருக் கும் அவளை ஊரார் ஏதேதோ சொன் னார்கள். அவள் அவற்றை யெல்லாம் பொருட்படுத்தாமல் வாழப் பழகிக் கொண்டாள்.

காலங்கள் இப்படியே கடுகதியில் சென்று கொண்டிருந்தன. ஒரு நாள் அருணா ஏதேச்சையாக சதீஸை சந்தித்தாள். அவனைக் கண்டதுமே அவள் அடி மனதிலிருந்த சகோதர பாசம் கண்களில் கண்ணீராய் வெளிவந்தது. அவனும் அருணாவைப் பார்த்ததில் மகிழ்ச்சி அடைந்தான். சதீஸ் அவளைப் பற்றி விசாரித்தான். தன்னுடைய சோகக்கதையை சொன்னால் அவன் கஸ்ரப்படுவான் என நினைத்து தான் கணவனுடன் சந்தோசமாக இருப்பதாகக் கூறினாள். அவளும் பதிலுக்கு அவனை விசாரிக்க "எனக்கு என்ன குறை அருணா? மனைவி யோடு சந்தோ சமா இருக்கன். என்னுடைய பிரார்த் தனை எல்லாம் என்ர தங்கச்சி நீ சந்தோசமாக இருக்கணும் எண்டு தான்" என்று கண்களில் நீர் வழியக் கூறினான். அவனின் கண்ணீரைத்துடைத்து விட்ட அவள் "அழாதீங்க. அண்ணா நான் நல்ல சந்தோசமாக இருக்கிறன். நீங்களும் நல்லா இருக்கணும் என்று மனதார வாழ்த்தியபின் சென்று விட்டாள்.

அருணாவுக்கு தன் சகோதரனைப் பார்த்ததில் மட்டற்ற மகிழ்ச்சி. தான் துன்பப்பட்டாலும் தன் சகோதரன் சந்தோசமாக இருக்கக் கடவுள் துணை நிற்கிறாரே என எண்ணி கடவுளுக்கு நன்றி கூறினாள். அதே போல சதீசும் தன் வீட்டிலிருந்து தன் தங்கை அருணாவையே நினைத்துக் கொண்டிருந்தான். "பாவம் அருணா. நான் அருணாவுடன் பழகியதை என் மனைவி தவறாக எண்ணி என்னுடன் தினமும் சண்டை போடுகிறாள். நிம்மதியில்லாமல் தவிக்கிற நான்சந்தோசமாக இருப்பதாக அவளிடம் கூறிவிட்டேன். அவளும் அதை நம்பி விட்டாள். அவள் கலங்கக் கூடாதல்லவா. என்னுடைய தங்கை அருணா என்றைக்குமே சந்தோசமாக நிம்மதியாக இருக்க வேண்டும்' என அவன் மனம் விரும்பியது.

# நாடகங்களில் நகைச்சுவை


நல்ல ஒரு சிரிப்பு வீட்டிற்கு வெளிச்சத்தைத் தரும் என்று கூறப்படுகின்றது.

அதற்காக அளவிற்கு விஞ்சியோ, அடிக்கடி சிரிப்பதோ வீண். - 'எபிக்கெரரஸ்'.

இந்த முறை இந்தத் தொடரில் நாடகங்களில் நகைச்சுவைபற்றி பரமசிவம் ஒரு மேலோட்டமான (வழமைபோல) ஒரு பார்வை பார்க்கலாம் என்று யோசிக்கிறன்..

நாடகங்களில் சில வேளைகளில் நகைச்சுவை இடம்பெறுவது உண்டு.

நான் பார்த்த ஒரு நாடகத்தில், கதாநாயகன் வில்லனை நோக்கித் துப்பாக்கிச் சுடு நடத்துவார். இரண்டு மூன்று தடவை கைத்துப்பாக்கியின் விசையை அமுத்தினார் கதாநாயகன் .



வில்லன் சுடு வாங்கி வீழ்வதாகக் காணோம். எதனையோ எதிர்பார்த்துக் காத்திருப்பது போல தட்டிச் சீன் பக்கம் எட்டிப் பார்த்தார்.

அவர் எதிர்பார்த்தது கிடைக்கவில்லைப் போலும், மார்பைப் பொத்தியபடி இரத்தம் (ஏற்கனவே தயாராக வைத்திருந்த சிவப்பு நிறச் சாயம்) பீறிட. அம்மா, ஐயோ என்று கத்தியவாறு, மேடையிற் சாய்ந்தார்.

கதாநாயகன் ஓடி வந்து அவரது மார்பில் கால் பதித்து வீர வசனம் பேசத் தொடங்கவே பெரிதாக வெடிச் சத்தம் கேட்டது. அப்போது தான் சனத்திற்கு விளங்கிச்சுது, வில்லன் வெடியோசைக்காகத்தான் விழாமல் காத்திருந்ததாக. சீன வெடி போலும்.. நீளத் திரி. கதாநாயகன் சுடுகின்ற வேளை வெடிக்கத் தவறி விட்டது. கொஞ்சம் காலம் தாழ்த்தி வெடித்திருக்கின்றது. இதனை எதிர்பார்க்காத கதாநாயகன் ஒருக்காற் திடுக்கிட்டுத்தான் போனார்.

பின்னர் தம்மைச் சுதாகரித்துக்கொண்டு, வீர வசனத்தை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார். அது ஒரு கெட்டித்தனம். வேறு யாராவது கதாநாயகர்களென்றால், அந்தத் திடுக்காட்டத்தில், எந்த இடத்தில் வசனம் தடைப்பட்டது என்று தெரியாமல், வில்லன் வெடி வாங்குவதற்கு முன்னர் பேச வேண்டிய வசனத்தைச் சில வேளை பேசியிருப்பார். அப்படிப் பேசியிருந்தால் அது பகிடியாக இருந்திருக்கும். ஆனால் தட்டிச் சீனுக்குள்ளை நின்று கொப்பி பார்த்துக் கொண்டு நிற்கின்ற இயக்குநர் உடனே திருத்தியிருப்பார்.

இதே போன்று ஒரு நாடக ஒத்திகையின் போது ஒருவர் வசனம் பேசியது ஞாபகத்திற்கு வருகின்றது.

நாடக ஒத்திகைத் தொடக்கம், நாடகப் பிரதியை கையில் வைத்துக் கொண்டு ஏற்ற இறக்கத்துடன், உணர்வுடன் வாசித்து ஒத்திகை பார்ப்பதாகவே அமையும். யார் யார் பேச வேண்டிய வசனங்களோ, அந்தப் பாத்திரங்களுக்குப் பிரித்தெடுத்து, பாத்திரங்களைத் தாங்குபவர்களிடம் அவர்களுக்கான வசனங்கள் வழங்கப்படும்.

ஒருவர் மாறி ஒருவர் தமது வசனங்களை ஒப்புவிப்பர். ஒருவர் தாய்க் கொப்பியைப் பார்த்துக் கொண்டிருப்பார். தாய்க் கொப்பி என்பது, அனைவரது முழுமையான வசனங்களையும், அறிவுறுத்தல், விளக்கங்கங்களையும் கொண்ட பிரதி. (தற்போது வசதி உள்ளமையால், அனைத்துப் பாத்திரங்கள் தாங்குபவர்களுக்கும், முழுப் பிரதி வழங்கப்படுகின்றன)

ஒருவர் தமது பாத்திரம் பேச வேண்டிய இடத்தில், கட்டிலால் விழுந்தெழுந்து நான் காண்பது கனவா? என்று தமது பாத்திரத்திற்கான வசனத்தைப் பேசினார்.

அனைவரும் இதென்னடா, கட்டிலால் விழுந்தெழுந்து நான் காண்பது கனவா? என்று வசனம் பேசுகின்றாரே? அப்படி வசனம் வருமா? எனத் தமக்குள் யோசிக்க, பிரதி ஆக்கியவரும், நெறியாளருமானவர் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினார்.

என்னடா என்று பார்த்தால், அந்தப் பாத்திரம் கட்டிலால் விழுந்து எழுந்து பேச வேண்டிய வசனத்தை, (கட்டிலால் விழுந்தெழுந்து) என்பதனை அடைப்பிற்குறிக்குள்ளும், பேச வேண்டிய வசனத்தை நான் காண்பது கனவா? என்றும் எழுதி வைத்திருந்தார். அந்தப் பாத்திரம் அதனையும் சேர்த்து வசனம் பேச ஒரே சிரிப்புத்தான்.

அதே போன்று, போதிய ஒத்திகையின்றி நடத்தப்படும் நாடகங்களில் பல நகைச்சுவை விடயங்களைக் கண்டிருக்கின்றோம். சிலவற்றை இத் தொடரில், பம்பல் பரமசிவத்தின் நாடக




அனுபவங்களில் பகிர்ந்து கொண்டிருக்கின்றேன்.

அதே போன்று ராசாவாக நடிக்கின்றவர் நல்ல கூறைச் சேலை கொண்டுவந்து தாறபாய்ச்சிக் கட்டி நடிக்கத் தொடங்கினார். ஒளி அமைப்பாளர் தன்ரை கெட்டித் தனத்தைக் காட்ட ராசா உடுத்திருந்த வேட உடுப்பு பிச்சைக்காரர் கட்டுகின்ற துணி போல ஒளி மங்கிக் காட்சி கொடுத்தது. பச்சை, சிவப்பு நீலமென 'போக்கஸ் லைற்' மாறி மாறிக் கொடுத்தே அரசன் ஆண்டி போலத் தோன்றினார்.

தன்ரை கூறைச் சாறி வடிவை ரசிக்க வந்த சரசக்காவும், சோகத்தோடு சென்றா.

கோப்படுவதும் சிரிப்பதும் ஒரே வேளையில் ஆற்றக் கூடிய செயலல்ல. இரண்டும் ஒருவருடைய தனிப்பட்ட உரிமை. இரண்டில் எதனைத் தெரிவு செய்வது என்கின்ற உரிமையும் ஒருவருக்கு உண்டு. சரசக்கா கோப்படவில்லை தன்ரை கூறைச் சாறியைப் பார்த்து, இவ்வளவு இளக்கமான கூறைச்சாறியைத் தான், தன்ரை வீட்டுக் காரர் தனக்கு வாங்கித் தந்தது என மனதுள் சிரித்துக் கொண்டார்.

அட தலைப்பிற்கும், (சாறித் தலைப் பல்ல) இந்தக் கட்டுரைத் தலைப்பிற்கும் பரமசிவம் எழுதினதுக்கும் ஒரு தொடர்பில்லாமல் இருக்குது, நீங்கள் எதனையோ எதிர்பார்க்க பரமசிவம் எதனையோ எழுதியிருக்கிறார் என்று நீங்கள் முணுமுணுப்பது எனக்குக் கேட்குது.

இம்முறை நான் எழுதிய தலையங்கம், 'நாடகங்களில் நகைச்சுவை'.

நீங்கள் எதிர்பார்க்கின்ற நகைச்சுவை நாடகங்கள் பற்றிய தகவல்களுக்கு அடுத்த வாரம் வரை பொறுத்திருங்கள். பெற்றி டேவிஸ் என்பவர் நாடக நடிகர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், மேடைக்கு அப்பால், நடிகன் சிரிப்பதனைக் கண்டிருக்கின்றேன். ஆனால் மேடையை விட்டு நீங்கியதும், அவன் விம்மி அழுததை ஒரு நாளும் கண்டதில்லை என்கின்றார். அவர் இதிலை என்னத்தைச் சொல்ல வருகின்றார் என்றால், கலைஞர்கள், எவ்வளவு துன்ப துயரோடிருந்தாலும் அழுவதில்லை.

I have often seen an actor laugh off the stage, but I don't remember ever having seen one weep. Bette Davis

உன்னால் முடிந்தால் எவ் வேளையும் சிரியுங்கள். அது மிக மலிவான மருந்து. - பிரையன் பிரபு.

Always laugh when you can. It is cheap medicine. Lord Byron

## சிந்திக்க.....

தொகுப்பு-மா. நன்னன்.

சாதி இருப்பதனால் தான் நீ இந்து; உன் மதம் இந்து மதம். உனது சாத்திரம் மனுதர்மம். உபநிடதம் என்று இருக்கிறது. இவைகளை எல்லாம் ஏற்றுக் கொண்டுவிட்டு பிறகு நான் எப்படிச் சூத்திரன் என்றால் உலகத்தார் சிரிக்கமாட்டார்களா? சூத்திரன் என்பதை உள்ளபடியே நீ பொறுப்பதனால் இந்து மதத்தை விட்டு வெளியேற வேண்டாமா?

கோயிலில் குழவிக் கல்லில் போய் முட்டிக் கொள்கிறானே,எவனாவது அது கல் என்று உணருகிறானா? உண்மையில் அதற்குக் கடவுள் குப்புறத் தள்ளி அதன் பொண்டாட்டியின் தாலியையும் சீலையையும் அறுத்துக் கொண்டு போகின்றானே!எந்தச் சாமியாவது ஏண்டா என் மனைவியின் தாலியையும் சீலையையும் அறுத்துக் கொண்டு போகின்றாய் என்று கேட்கின்றதா? அப்படி தன் மனைவியின் தாலியையும் சீலையையும் காப்பாற்றாத கடவுள் மனிதனுக்கு என்ன, செய்ய முடியும்? அதை எவனாவது எண்ணிப்பார்க்கிறானா?

அரசியலானாலும் மதத்தையானாலும் கடவுளானாலும் நாம் எதிர்ப்பதும் அழிக்க முற்படுவதுக்கான காரணமெல்லாம் இவை தீமைக்கு காவலாய் இருக்கின்றன என்ற ஒரே நோக்கமேயல்லாமல் அவைகளிடம் நமக்குப் பொறாமையோ துவேசமோ ஏற்பட்டதாலல்ல.

உதவி ' பெரியார் பதிற்றுப் பத்து'

# இறுதி கட்டத்தில் 'நிமிர்ந்து நில்'



ஜெயம் ரவியின் 'நிமிர்ந்து நில்' திரைப்படம் இறுதி கட்டத்தை எட்டியுள்ளது.

சமுத்திரக்கனி இயக்கத்தில் ஜெயம் ரவி, அமலா பால் ஜோடியாக நடிக்கும் திரைப்படம் 'நிமிர்ந்து நில்'.

'வாசன் விஷுவல்' நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் குமார் இசை அமைக்கிறார்.

படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து இப்போது இறுதிகட்ட வேலைகள் விறுவிறுப்பாக நடந்து வருகிறன.

ஜெயம் ரவி நடிப்பில் ஒஸ்கார் பிலிம்ஸ் தயாரிக்கும் 'பூலோகம்' படத்தின் வேலைகளும் இப்போது சுறுசுறுப்படைந்துள்ளன.

இந்தப் படங்களில் நடித்து முடிந்ததும் அடுத்து ஜெயம் ரவி தனது அண்ணன் ராஜா இயக்கும் படத்தில் நடிக்க ஆயத்தமாகி வருகிறார்.



# நயன்தாரா கர்ப்பிணி

'அனாமிகா' படத்தில் கர்ப்பிணி வேடத்தில் நடிக்கும் நயன்தாரா வித்யாபாலனை மிஞ்சுவாரா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தியில் வித்யாபாலன் கர்ப்பிணியாக நடித்த 'கஹானி' படம் தமிழ், தெலுங்கில் 'அனாமிகா' என்ற பெயரில் மொழிமாற்றம் செய்யப்பட்டு வருகிறது.

ஹிந்தியில் இந்தப்படம் பலத்த வரவேற்பை பெற்றதோடு மட்டுமல்லாமல் வசூலையும் வாரி குவித்தது.

தற்போது 'அனாமிகா'வில் நடித்து வரும் நயன்தாராவின் நடிப்பு எப்படி இருக்கும் என்று தமிழ், தெலுங்கு திரையுலகினர் ஆர்வமாக எதிர்பார்க்கின்றனர்.



எனவேதான் 'அனாமிகா' படத்துக்கு அவரை தேர்வு செய்தனர். இதில் நயன்தாராவின் நடிப்பு வித்யாபாலனைவிட சிறப்பாக இருந்தது என்று படக்குழுவினர் பாராட்டியுள்ளனர்.

இப்படம் டிசெம்பர் மாதம் ரசிகர்களுக்கு விருந்து படைக்க வருகிறது.


Cow & Gate

## பொதுமக்களுக்கான அறிவித்தல்

இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் அனைத்துத் தொகுதி Cow & Gate தயாரிப்புகளும் DCD எனப்படும் இரசாயனப்பொருள் உள்ளடங்கவில்லை என்பதனை, இலங்கை கைத்தொழில் தொழினுட்ப நிறுவனத்தினால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறித்து இத்தால் சகல பொதுமக்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

எமது பண்டகசாலையிலிருந்து வெளியேறும் ஒவ்வொரு Cow & Gate பக்கட்டுகளும், (கீழே குறிப்பிட்டுள்ளது போல) DCD இரசாயனப்பொருள் உள்ளடங்கவில்லை என்பதை உறுதிப்படுத்தும் முகமாக, சுகாதார அமைச்சினால் கட்டாயமாக்கப்பட்டுள்ள ஸ்டிக்கர் ஒன்றினைத் தாங்கி வரும்.

இது 2013 செப்டெம்பர் 4ம் திகதி சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட PA/EOH/FCAU/42/2013 இலக்க திருத்தியமைக்கப்பட்ட பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்படுகின்றது.


ඩී.සී.ඩී රසායනිකය අඩංගු නොවන බවට තහවුරු කරන ලදී.
டி.சி.டி. எனும் இரசாயணப் பொருள் அடங்கவில்லையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
Batch No:

IMAGE

இது பற்றிய மேலதிக விளக்கங்களுக்கு அழையுங்கள் 0773-290183 அல்லது 0773-290160

அமைதியும் அழகும் ததும்பும்
அற்புதத்தின் வசீகரத்துக்குள் அமிழ்ந்து போய்விடுங்கள்
சீஷெல்ஸ்..

புதன்கிழமைகளிலும் சனிக்கிழமைகளிலும்
ஒருவழி பயணம் ரூ. 48,000 + வரிகள்
இருவழி பயணம் ரூ. 60,000 + வரிகள்



+94 112 002 255
www.mihinlanka.com
MIHIN LANKA